
தோழர்
மணியம்
நினைவு மலர்
COMRADE
MANIAM
COMMEMORATION
VOLUME

# தோழர் மணியம் நினைவு மலர்

# Comrade Maniam

## Commemoration Volume

(A collection of messages and Tributes)

30-12-1989

# தோழர் மணியம் நினைவுமலர்

கே. ஏ. சுப்பிரமணியம்
பிறப்பு; 05—03—1931
இறப்பு; 27—11—1989
வெளியீடு; கே. ஏ. சுப்பிரமணியம் ஞாபகார்த்த குழு
15/1, மின்சார நிலைய வீதி,
யாழ்ப்பாணம்,
இலங்கை.
அச்சுப்பதிப்பு;
ஸ்ரீ பார்வதி அச்சகம்,
536, ஆஸ்பத்திரி வீதி,
யாழ்ப்பாணம்,
காலம்: 30-12-89
இடம்: சத்தியமனை, சுழிபுரம்
மலரை வெளியிட்டு வைப்பவர்:
பேராசிரியர் சி. தில்லைநாதன்

பக்கங்கள் 118
அன்பளிப்பு: ரூ. 20/-

---

# Comrade Maniam Commemoration Volume
*(A Collection of Messages and Tributes)*

*K. A. SUBRAMANIAM*
*Born: 05—03—1931*
*Died: 27—11—1989*
*Publishers; K. A. Subramaniam Commemoration Committee*
*15/1, Power House Road, Jaffna, Sri Lanka.*
*Printers: Sri Parwathi Press, 536, Hospital Road, Jaffna.*
*The Ceremonial Release of the Commemoration Volume*
*Place of Publication: 'Sathiyamanai', Chulipuram*
*Date of Publication: 30-12-89*
*Prof; S. Thillainathan*

*Pages 118*
*Donation Rs. 20/-*

# நினைவு மலர் பற்றி...

மறைந்த இலங்கை கம்யூனிஸ்ட் கட்சி (இடது) பொதுச் செயலாளர் தோழர் கே. ஏ. சுப்பிரமணியம் நினைவாக அவரது முதல் மாத நினைவஞ்சலி நாளில் இந்நினைவு மலரை வெளியிடுவதால் ஞாபகார்த்தக்குழு மகிழ்ச்சியடைகின்றது. இம் மலரில் இடம் பெற்றுள்ளவை யாவும் தோழர் மணியம் நினைவான சிறிய வகைச் செய்திகள் மட்டுமே. ஆனால் அவற்றுள் அடங்கியுள்ள ஆழமும் அர்த்தமும் கொண்ட கருத்துக்களும் மதிப்பீடுகளும் இறந்த ஒருவருக்கான வெறும் வாய் உபசாரங்களோ அன்றி சம்பிரதாய சொற்றொடர்களோ அல்ல என்பதனை இம் மலரின் பக்கங்கள் எடுத்தியம்பும். இம் மலரைத் தொடர்ந்து ஆய்வு அடிப்படையிலான நூல் ஒன்றினை வெளியிட இருப்பதாலும், இம் மலருக்கான செலவின் அதிகரித்த தன்மையினாலும் வழமையான நினைவுமலர் சம்பிரதாயத்தையும் மீறி அன்பளிப்பு ரூபா இருபது கொடுத்து இம் மலரினை வாங்கும்படி ஞாபகார்த்த குழு வேண்டிக்கொள்கின்றது.

# இறுதி அஞ்சலி நிகழ்ச்சி பற்றி...

கடந்த 27-11-89 அன்று கண்டி மருத்துவ மனையில் உயிர்நீத்த தோழர் மணியத்தின் உடல் 29-ம் திகதி யாழ்ப்பாணம் எடுத்து வரப்பட்டு யாழ்-நகரில் உள்ள கட்சித் தலைமையகத்தில் கட்சித் தோழர்களின் அஞ்சலிக்காக வைக்கப்பட்ட பின் சுழிபுரத்திலுள்ள சத்தியமனைக்கு எடுத்துச் செல்லப்பட்டு 30-11-89 அன்று இறுதி அஞ்சலி நிகழ்ச்சிகள் இடம்பெற்றன. இறுதி அஞ்சலிக்கான கட்சிக் குழுவின் சார்பில் தோழர் சி. கா. செந்திவேல் இறுதி நிகழ்ச்சிகளுக்குத் தலைமை தாங்கினர். தோழர்களும், நண்பர்களுமான இருபத்தியொரு பேர் அஞ்சலி உரை நிகழ்த்தினர். குடும்பத்தினர், கட்சித் தோழர்கள், நண்பர்கள் இறுதி மலர் அஞ்சலி செலுத்தினர். இந்நிகழ்ச்சிகளில் மதக் கிரியைகள் மூட நம்பிக்கைகளைக் கொண்ட வழக்கங்கள், சாதியாசார நடைமுறைகள், பழைய சம்பிரதாய செயல்முறைகள் போன்ற எதுவும் கடைப் பிடிக்கப்படவில்லை. முற்றிலும் ஒரு கம்யூனிஸ்ட் போராளிக்கு - தலைவனுக்குரிய கட்சியின் புரட்சிகர மரியாதைகளுடன் மேற்படி நிகழ்ச்சிகள் இடம்பெற்றன.

# நன்றி கூறுகின்றோம்

மேற்படி இறுதி அஞ்சலி நிகழ்ச்சிகளில் தற்போதைய யாழ்ப் பாண சூழல் ஏற்படுத்திய தடைகளையும் தாண்டி நேரில் வந்து தமது அஞ்சலியைத் தெரிவித்து நிகழ்ச்சிகளில் கலந்துகொண்ட அனைவருக்கும்: தந்திகள், கடிதங்கள் மூலம் அனுதாபச் செய்திகள் அனுப்பியோருக்கும் எமது நன்றிகள். பல்வேறு கஷ்ட சூழ்நிலையிலும் இம் மலர் குறுகிய நாட்களில் வெளிவருவதற்கு அஞ்சலிச் செய்திகளை அனுப்பியோருக்கும், மலர் உருப்பெற உழைத்த ஸ்ரீ பார்வதி அச்சக ஊழியர்கள் - உரிமையாளருக்கும், அட்டைப் பட ஓவியருக்கும் எமது அன்பு கலந்த நன்றிகளைத் தெரிவித்துக் கொள்கின்றோம்.

*15/1, மின்சார நிலைய வீதி,*
*யாழ்ப்பாணம்.*
*இலங்கை.*
*30-12-1989*

கே. ஏ. சுப்பிரமணியம்
ஞாபகார்த்த குழு



தோழர் கே. ஏ. சுப்பிரமணியம்

# புரட்சிகர வீர அஞ்சலி

[கடந்த 17-12 1989 அன்று யாழ்ப்பாண நகரில் இடம் பெற்ற இலங்கை கம்யூனிஸ்ட் கட்சியின் (இடது) பொதுச் செயலாளர் தோழர் கே. ஏ. சுப்பிரமணியம் மறைவை யொட்டிய நினைவு அஞ்சலிக் கூட்டத்தில் கட்சியின் புதிய பொதுச் செயலாளர் தோழர் சி. கா. செந்திவேல் கட்சி மத்திய குழு சார்பாக ஆற்றிய நினைவஞ்சலி உரை]

தோழர்களே! நண்பர்களே!

கடந்த 27 - 11 - 89ல் எம்மை நிரந்தரமாக விட்டுப் பிரிந்து விட்ட, நம் அனைவரினதும் அன்பிற்கும் பெருமதிப்பிற்கும் உரிய எமது கட்சியின் பொதுச் செயலாளர் தோழர் கே. ஏ. சுப்பிரமணியம் அவர்களின் நினைவாக நடைபெறும் இந் நினைவஞ்சலிக் கூட்டத்தில் கட்சியின் மத்திய குழு சார்பாக இவ் நினைவஞ்சலி உரையை நிகழ்த்துகிறேன்.

தோழர் சுப்பிரமணியம் (1931 — 1989) நாட்டிற்காகவும் நாட்டின் அடக்கி ஒடுக்கப்பட்ட மக்களுக்காகவும் தன் வாழ்நாள் பூராவும் ஓய்வு ஒழிச்சல் இன்றி மாக்கிச லெனினிச வழியில் தொடர்ந்து போராடி வந்த ஓர் உயர்ந்த கம்யூனிஸ்ட் போராளி யாவார். ''எளிமையான வாழ்க்கை கடுமையான போராட்டம்'' என்பதற்கு இணங்க அவரது புரட்சிகர வாழ்வும் வழிகாட்டலும் நமது நாட்டு கம்யூனிஸ்ட்டுகள் அனைவருக்கும் இடதுசாரி முற்போக்காளர்களுக்கும் வளம்மிக்கதோர் முன் உதாரணமாகும்.

தோழர் சுப்பிரமணியம் இலங்கையின் வட பிரதேசத்தில் இரிமலை கொல்லங் கலட்டி என்னும் கிராமத்தில் வைதீக விவசாயக் குடும்பத்தில் பிறந்தவர். தனது ஆரம்ப நடுத்தரக் கல்வியை முடித்துக் கொண்டு காங்கேசன்துறை சீமெந்து தொழிற்சாலையில் ஓர் பொறியியல் பயிலுனராகச் சேர்ந்து கொண்டார். அப்பொழுது அவருக்கு வயது பதினேழு. அங்கு வேலை செய்த ஆரம்ப காலத்தில் ஏற்கனவே வேலை செய்து வந்த கம்யூனிஸ்ட் தொழிலாளி ஒருவரின் தொடர்பு ஏற்பட்டு மாக்சிச சித்தாந்தத்தின் பால் ஈர்க்கப்பட்டார். அதன் காரணமாக கம்யூனிசக் கருத்துக்களை அடிப்படையாகக் கொண்ட தொழிற் சங்க வேலைகளில் ஈடுபடத் தொடங்கினர். இதனல் ஆத்திரமடைந்த

வெள்ளைக்கார அதிகாரிகளையும் உள்ளடக்கிய தொழிற்சாலை நிர்வாகம் தோழர் சுப்பிரமணியத்தை வேலை நீக்கம் செய்தது. தனது வேலை பறிபோனதைப் பற்றிக் கவலைப்படாது மேன்மேலும் மாக்சிசத்தை ஆழமாகக் கற்பதிலும் அதன் அடிப்படையில் மக்களுக்கு சேவை செய்ய வேண்டும் என்பதிலும் உறுதி கொள்ள ஆரம்பித்தார். அதன் வழியில் 1951ல் கம்யூனிஸ்ட் வாலிபர் இயக்கத்திலும் அதன்பின் இலங்கைக் கம்யூனிஸ்ட் கட்சியிலும் உறுப்பினரானார். இருபத்திரண்டு வயது நிரம்பிய இளம் கம்யூஸ்ட்டாகிய தோழர் சுப்பிரம்மணியம் முதலில் கலந்து கொண்ட போராட்டம் 1953ல் இடம் பெற்ற நாடு தழுவிய மாபெரும் ஹர்த்தாலாகும். அன்றைய கம்யூனிஸ்ட் கட்சியும் ஏனைய இடதுசாரிக் கட்சிகளும் இணைந்து தலைமை தாங்கிய மாபெரும் ஹர்த்தால் போராட்டம் வடபகுதியிலும் வெற்றிகரமாக அமைந்து தேசம் தழுவிய வர்க்க உணர்வும், ஐக்கியமும் உறுதி பெறுவதற்கு வழி காட்டியது. அக் ஹர்த்தால் போராட்டத்தில் ஈடுபட்டு அதன் புரட்சிகர உணர்வுகளால் உந்தப்பட்ட தோழர் மணியம் அன்றைய காலகட்டத்தில் வடபகுதியில் கம்யூனிஸ்ட் இயக்கத்தை வழி நடத்தி வந்தமு. கார்த்திகேசன், டாக்டர் சு. வே. சீனிவாசகம், பொன் கந்தையா, அ. வைத்தியலிங்கம், எம். சி. சுப்பிரமணியம் போன்றவர்களின் நெருங்கிய தொடர்பினல் கட்சியின் வேலைகளில் நெருக்கமாகி முழுநேர ஊழியரானுர். ஆரம்பத்தில் சுன்ஞகத்தை மையமாகக் கொண்டு காங்கேசன்துறைத் தொகுதிக்கு கட்சி வேலைகளுக்கு பொறுப்பாக நியமிக்கப்பட்டார். இக்காலப்பகுதியில் காங்கேசன்துறை சீமெந்து தொழிற் சங்கம் கடும் சவால்களுக்கு மத்தியில் கட்டியெழுப்பப்பட்டது. தொழிற் சங்கப் போராட்டங்களும் படிப்படியாக முன்னெடுக்கப்பட்டு வந்தது. தொழிற்சாலைக்கு வெளியே கட்சியையும், கட்சியைச் சுற்றி வாலிபர் ஸ்தாபனங்களையும் உருவாக்குவதில் தோழர் மணியம் கடுமையாக உழைத்தார். இக்காலப் பகுதியில் ஆசிரியர்களாகவும், மாணவர்களாகவும், அரசாங்க உத்தியோகத்தர்களாகவும் இருந்த பல புத்திஜீவிகள் கம்யூனிஸ்ட் கருத்துக்களால் கவரப்படுவதற்கு தோழர் மணியத்தின் கனதியான வேலைமுறை ஒரு காரணமாகும்.

1966ல் எஸ். டபிள்யூ. ஆர். டி. பண்டாரநாயக்கா பதவிக்கு வந்ததன் மூலம் சில முற்போக்கு நடவடிக்கைகள் எடுக்கப்பட்டன. அதில் ஒன்ருக பாடசாலை தேசியமயம் இடம் பெற்றது. இந் நடவடிக்கையை கத்தோலிக்க தலைமைப் பீடமும், தமிழ்ப் பிற்போக்காளர்களும் எதிர்த்து இயக்கம் நடத்த முற்பட்டனர். இவ்வேளை கம்யூனிஸ்ட் கட்சி பாடசாலை தேசிய மயத்தை ஆதரித்து பலமான இயக்கதை நடத்த வேண்டியதாயிற்று. மக்கள் இவ்வியக்கத்திற்கு ஆதரவு வழங்கினர். இவ்வியக்கத்தில் தோழர்

சுப்பிரமணியம் வாலிபர்களை அணிதிரட்டி முன்னணிப் போராளி யாக நின்று செயல்பட்டார்.

1950 களின் பிற்பகுதியில் கட்சியின் வடபிரதேச கமிட்டி யில் உறுப்பினராகத் தெரிவு செய்யப்பட்டு வடபகுதியின் கம்யூனிஸ்ட் வாலிபர் இயக்கத்தின் பிரதேசச் செயலாளர் ஆனார். அதன் மூலம் வடபகுதியில் சக்திமிக்க வாலிபர் இயக் கத்தை ஸ்தாபன ரீதியிலும் அரசியல் ரீதியிலும் வளர்த்தெடுப் பதில் தன் திறமைகளை முழுமையாகப் பயன்படுத்தினர். 1963 ல் நீர்வேலிப் பகுதியில் தாழ்த்தப்பட்ட மக்கள் கொடுந் தாக்குதல் களுக்கு உள்ளாக்கப்பட்டு சாதி வெறியர்களினல் வீடுகள் தீக்கிரை யாக்கப்பட்டது. இதை எதிர்த்து யாழ்நகரில் ஒரு கண்டன ஊர் வலத்தை வாலிபர் இயக்கம் நடாத்தி பாதிக்கப்பட்ட மக்களுக்கு நிதியும் சேகரித்தது. இவ் ஊர்வலம் கூட்டத்திற்கு டாக்டர் சு. வே. சீனிவாசகம் தலைமை வகித்தார். இவ் எதிர்ப்பு இயக்கத் திற்கு முன்னின்று உழைத்தவர் தோழர் சுப்பிரமணியம் ஆவார். இது சாதி அடக்குமுறைக்கு எதிரான பிற்காலப் போராட்டங் களுக்கு முதற்படியாக அமைந்தது.

1963 - 1964ம் ஆண்டுகளில் இலங்கை கம்யூனிஸ்ட் கட்சிக்குள் தேசிய சர்வதேசிய ரீதியில் இடம்பெற்ற தத்துவார்த்தப் போ ராட்டத்தில் கட்சி இரு கூறுகளாகப் பிளவடைந்தது. அப்பிள வின்போது தோழர் சுப்பிரமணியம் மாக்சிசம் - லெனினிசம், மாஓ சே துங் சிந்தனை வழிகாட்டிய புரட்சிகர அணியின் பக்கம் தன்னை நிலைநிறுத்திக்கொண்டு அப்போராட்டத்தின் ஊடாக ஒரு புரட்சிகரக் கட்சியையும் அதன் அடிப்படையில் புரட்சிகரப் போராட்டங்களையும் முன்னெடுப்பதில் உறுதியாக உழைத்தார்.

1964ம் ஆண்டுக்குப்பின் தோழர் சுப்பிரமணியம் புரட்சிகர கம்யூனிஸ்ட் கட்சியின் தலைமை உறுப்பினர்களில் ஒருவராக இருந்த அதேவேளை கட்சிக்கு உள்ளேயும் வெளியேயும் நிலவியதவ றுன கருத்தோட்டங்களுக்கும், நடைமுறைகளுக்கும் எதிராக உட் கட்சிப் போராட்டங்களை முன்னெடுத்தார். புத்தகவாத நிலையில் இருந்துகொண்டு புரட்சிகர சுலோகங்களை முன்வைப்பதும் - நடை முறையில் பாராளுமன்றக் கண்ணோட்டங்களைக் கொண்ட நிலைப் பாட்டைக் கொண்டிருப்பதையும் கட்சிக்குள் உள்ள நேர்மை யான கம்யூனிஸ்டுகளுடன் இணைந்து எதிர்த்து உட்கட்சிப் போராட்டத்தை நடத்தி வந்தார். இப்போராட்டங்களில் நிதான மான, கோட்பாட்டு ரீதியான நிலையிலே நின்று வந்தார். அதேவேளை கம்யூனிஸ்ட் கட்சி அடக்கி ஒடுக்கப்பட்ட வர்க்கத் தின் கட்சி ஆதலால் அவர்களின் பிரச்சினைகளை மையமாகக் கொண்ட வெகுஜனப் போராட்டங்களை முன்னெடுக்க வேண்டும்

என்பதை கட்சிக்குள் வலியுறுத்தி அதற்கான தீர்மானங்களை எடுப்பதற்கு தோழர் சுப்பிரமணியம் எப்பொழுதும் முன்னணியில் நின்று செயற்பட்டு வந்தார். அதன் விளைவே 1966-ம் ஒக்ரோபர் 21 சுன்ஞக எழுச்சியாகும். அவ் எழுச்சிக்குத் தலைமை தாங்கி போராட்டங்கள் முன்னேறிச் செல்வதற்கு வழிகாட்டிய வர்களில் தோழர் சுப்பிரமணியம் பிரதான பாத்திரத்தை வகித்தார்.

அவ்வெழுச்சியைத் தொடர்ந்து சரியான வெகுசன மார்க்கத்தைக் கடைப்பிடித்து சட்டத்திற்கு உட்பட்டதும், சட்டத்திற்கு அப்பாற்பட்டதுமான போராட்டங்களை இணைத்து முன்னெடுப்பதில் சரியான நிதானமான தலைமைத்துவத்தை வழங்குவதில் தோழர் சுப்பிரமணியம் கட்சிக்கும் மக்களுக்கும் மிகப் பெறுமதி வாய்ந்த பங்களிப்பை வழங்கினுர். தீண்டாமை ஒழிப்பு வெகுஜன இயக்கமெனும் பரந்த ஐக்கிய முன்னணி ஸ்தாபனம் உருவாக்கப்படவும் அதன் கொள்கைகள், நடைமுறைகள், தந்திரோபாயங்கள் என்பன வகுக்கப்படவும் அதன் அடிப்படையில் போராட்டங்கள் முன்னேறிச் செல்வதற்கும் அவர் கட்சிக்கு உள்ளேயும் கட்சிக்கு வெளியேயும் ஆற்றிய பங்களிப்பு வரலாற்றில் என்றும் மக்களால் நினைவு கூரப்படும். தமிழ் பேசும் மக்கள் மத்தியில் வரலாற்றுத் திருப்பு முனையாக அமைந்த சங்கானை - நிற்சாமம், மாவிட்டபுரம், மட்டுவில், மந்துவில், கரவெட்டி - கன்பொல்லை, போராட்டங்களில் தோழர் சுப்பிரமணியம் நடைமுறை யதார்த்தமாக வழங்கிய நிதானமான கொள்கை வழிகாட்டும் பங்களிப்பு அப்போராட்டங்களில் மக்கள் வெற்றிகளை வென்றெடுக்க வழிவகுத்தது.

கம்யூனிஸ்ட் கட்சி தனியே சாதி அடக்குமுறைக்கு எதிராக மட்டுமன்றி ஏனைய முனைகளிலும் பல்வகைப் போராட்டங்களை முன்னெடுக்க வேண்டும் என்ற நிலைப்பாட்டில் தோழர் மணியம் மிகவும் தெளிவாக இருந்து செயல்பட்டு வந்தார். தொழிற் சங்க போராட்டங்கள், விவசாய இயக்கங்கள், மாணவர் இயக்கம்; ஏகாதிபத்திய எதிர்ப்பு இயக்கம் போன்றன கட்சி - வாலிபர் இயக்க நடவடிக்கைகளாக 1964 - 71 காலகட்டத்தில் முனைப்படைந்து முன்செல்வதற்கு தோழர் மணியம் முன்னணிப் போராளியாக இருந்து வந்தார். அதன் உச்சக்கட்டமாக 1969-ம் ஆண்டு மேதினத்தை யூ. என். பி. அரசு தடை செய்தபோது அதற்கெதிராக பிரமாண்டமான ஊர்வலத்தை தலைமை தாங்கிச் சென்று பொலிசின் கொடுமையான தாக்குதலுக்கு உள்ளாகி இரத்தம் சிந்தி படுகாயம் அடைந்தார். அப்போராட்டத்தின் மூலம் கம்யூனிஸ்ட்டுகளின் புரட்சிகர உணர்வு - வீரம் தியாகம் மக்களுக்கான அர்ப்பணிப்பு என்பனவற்றை வெளிப்படுத்துவதில் ஒரு ஆதர்ச கம்யூனிஸ்ட் போராளியாகத் திகழ்ந்தார்.

இலங்கையின் இடதுசாரி இயக்கத்தில் - கம்யூனிச இயக்கத்தில் ஈடுபட்ட தலைவர்களில் பலர் பல சந்தர்ப்பங்களில் அரசியல், பொருளாதார, சூழ்நிலைகளால் அடிசறுக்குண்டு தமது குறிக்கோள் இலட்சியம் என்பவற்றில் இருந்து விலகி செயல் இழந்து போன சந்தர்ப்பங்கள் பல உண்டு. அதையே இடதுசாரி - கம்யூனிஸ்ட் இயக்கத்தின் பலவீனமாகக் கொள்வதற்கும், எதிரிகள் அதைத் தமது துரும்பாக்கிக் கொள்வதற்கும் இடம் ஏற்பட்டது. ஆனால் தோழர் சுப்பிரமணியம் தன் இறுதி மூச்சுவரை முழுமையான ஓர் கம்யூனிஸ்ட்டின் வாழ்வை சொல்லாலும் செயலாலும் வாழ்ந்து காட்டிச் சென்றமை இன்றைய இளம் சந்ததிக்கும் எதிர்காலச் சந்ததிக்கும் பயன்பெறும் பொக்கிசமாகும்.

1970களில் நடுப்பகுதியின் பின் கட்சிக்குள் எழுந்த தவறான சித்தாந்த - நடைமுறை சார்ந்த நிலைகளுக்கு எதிரான போராட்டத்தில் தோழர் சுப்பிரமணியம் தீர்க்கமான பாத்திரத்தை வகித்து வந்தார். இலங்கைப் புரட்சியின் காலகட்டங்களை வரையறை செய்வதிலும், புதிய ஜனநாயகப் புரட்சிக் காலகட்டத்தில் அமைய வேண்டிய ஐக்கிய முன்னணி பற்றிய நிலைப்பாட்டிலும் வெறும் புத்தகவாத நிலைப்பாடும், ஒருமுனைவாதமும் கட்சிக்குள் செல்வாக்கு செலுத்திய வேளை தோழர் சுப்பிரமணியம் அதற்கு எதிராக கட்சிக்குள் கட்டுப்பாடுமிக்க கருத்துப் போரராட்டங்களை நடத்தி வந்தார். இவ்வேளையில் அவர் கட்சிக்குள் மறைமுக குழுக்களை ஏற்படுத்தியோ அல்லது ஸ்தாபன ஒழுங்குகளை மீறியோ நடந்து கொண்டது கிடையாது. கொள்கை ரீதியிலான கருத்துப் போராட்டங்கள் ஏற்பட்ட வேளைகளிலும் பெரும்பான்மை முடிவுகளை ஏற்றே செயற்பட்டு வந்தார்.

1964ம் ஆண்டுக்குப்பின் புரட்சிகரக் கட்சி என்ற அடிப்படையில் அணிதிரண்ட பல நூற்றுக் கணக்கான உறுப்பினர்களும், ஊழியர்களும், தலைமையில் உள்ளவர்களும் கட்சித் தலைமைமீது அதிருப்திகொண்டு காலத்துக்குக் காலம் கட்சியைவிட்டு வெளியேறிச் சென்று தனி நபர் உதிரிகளாகிய சூழ்நிலையிலும் கட்சிக்குள் இருந்து போராடி சரியானதோர் கட்சியைக் கட்டி எழுப்ப முடியும் என்ற தன் நம்பிக்கையுடனும் உறுதியுடனும் ஏனைய தோழர்களுடனும் இணைந்து செயல்பட்டு வந்தார்.

என். சண்முகதாசனை பொதுச் செயலாளராக கொண்ட கம்யூனிஸ்ட் கட்சிக்குள் மேற்கூறிய நம்பிக்கையுடன் போராடி வந்த தோழர் சுப்பிரமணியமும் அவருடன் இணைந்த தோழர்களும் மேற்படி நிலையினை 1978ல் கைவிட வேண்டிய நிர்ப்பந்தத்திற்கு ஆளானார்கள். 1978ம் ஆண்டு நடுப்பகுதியில் கூட்டப்பட்ட கட்சியின் விசேட மாநாட்டில் சரியான தத்துவார்த்த அர

சியல் ஸ்தாபனக் கருத்துக்களைக் கொண்ட முழுமையான அறிக்கை ஒன்றினை தோழர் சுப்பிரமணியம் தலைமையில் முன்வைத்து விவாதித்தபோதிலும், அது ஏற்றுக்கொள்ளப்படாது தன்னிச்சையாக முடிவுகள் எடுக்கப்பட்ட சூழ்நிலையில் நாட்டின் சகல பகுதிகளிலுமிருந்து வந்த கட்சி உறுப்பினர்கள் தனியே ஒரு கட்சியை உருவாக்குவது என்ற முடிவுக்கு வந்தனர்; அம்முடிவை தோழர் சுப்பிரமணியம் மனப்பூர்வமாக ஏற்றுக்கொண்டு உறுதியுடன் செயல்படுவதற்கு முன்வந்தார்.

1978-ம் ஆண்டு யூலை மாதம் 3ம் திகதி யாழ்ப்பாணத்தில் கூடிய கட்சி உறுப்பினர்களின் மாநாடு இடம்பெற்றது. அம்மாநாட்டில் புதிய கட்சிக்கு இலங்கை கம்யூனிஸ்ட் கட்சி (இடது) என பெயரிடப்பட்டு கட்சிக் காங்கிரஸ் இடம்பெறும் வரை இடைக்கால தயாரிப்புக் கமிட்டி ஒன்றையும் மாநாடு தெரிவு செய்தது. அதன் செயலாளராக தோழர் சுப்பிரமணியம் தெரிவு செய்யப்பட்டார். மேற்படி கட்சியை ஸ்தாபன ரீதியாகப் பலமுள்ள கட்சியாகக் கட்டி எழுப்புவதிலும் உழைக்கும் மக்களிடத்தில் கட்சியை வேரூன்றச் செய்வதிலும் தோழர் சுப்பிரமணியம் தனது ஆற்றல் முழுவதையும் செலவிட்டு வந்தார்.

1978 ம் ஆண்டு புதிய கட்சி ஆரம்பித்த காலம்முதல் 1984 ஆண்டு முற்பகுதிவரை கட்சியை தத்து வார்த்த அரசியல் ஸ்தாபன வழிகளில் கட்டி எழுப்புவதற்கான பாதையில் கடந்த காலத்தின் தவறுகள் யாவும் விமர்சன சுய விமர்சன வழிகளில் களைந்தெறியப்பட்டன. கீழ் இருந்து மேல்வரை ஜனநாயக மத்தியத்துவக் கோட்பாடு பின்பற்றப்பட்டது. புத்தகவாதம், அதிதீவிரவாதம் மற்றும் நிலையியல் நோக்கில் அணுகப்பட்ட சகல கொள்கை நடைமுறைகள் யாவும் விமர்சித்து நிராகரிக்கப்பட்டன. ஐக்கிய முன்னணி பற்றிய கணிப்பீடுகள் வரையறுக்கப்பட்டன. தேசிய இனப்பிரச்சனையில் வரட்டுத் தனமான கொள்கை நிராகரிக்கப்பட்டு ஒரு தெளிவான நிலைப்பாடு முன்வைக்கப்பட்டது சர்வ தேசிய ரீதியிலும் தேசிய ரீதியிலும் மாறிவந்துள்ள நிலைமைகள் மீள் ஆய்வுக்கு உட்படுத்தப்பட்டு சரியான சமகாலக் கொள்கைகள் வகுக்சப்பட்டன. இவற்றின் அடிப்படையிலேயே 1984 ம் ஆண்டு செப்டெம்பர் 2ம் 3ம் திகதிகளில் இலங்கை கம்யூனிஸ்ட் கட்சியின் (இடது) முதலாவது தேசிய காங்கிரஸ் இடம் பெற்றது. அம் மாநாட்டில் தெரிவு செய்யப்பட்ட மத்திய குழு தோழர் கே. ஏ. சுப்பிரமணியம் அவர்களை பொதுச் செயலாளராக தெரிவு செய்தது. அவர் நோய்வாய்ப்பட்டு இறக்கும் வரை அப்பதவியை தகுந்த முறையில் வகித்து கட்சிக்கும் மக்களுக்கும் பெருநம்பிக்கை தரும் வகையில் செய்யப்பட்டு வந்தார்.

எமது நாட்டில் வளர்ந்து வந்துள்ள தேசிய இனப்பிரச்சினை பற்றிய கட்சியின் கொள்கையை வகுப்பதில் தோழர் மணியம் பிரதான பாத்திரத்தை வகித்தார். தமிழ்த் தேசிய இனம், சுய நிர்ணய உரிமை ஆகிய பிரச்சனைகளில் பழைய கட்சிக்குள் பின் பற்றப்பட்டுவந்த வரட்டுத்தனமான கொள்கைகள் நிராகரிக்கப் பட்டு நீண்டகால நோக்கில் நிதானமான அணுகுமுறைகளைக் கொண்ட கொள்கை வகுக்கப்பட்டது. குட்டி முதலாளித்துவ அவசரத் தன்மையில் இருந்து தேசிய இனப் பிரச்சனைக்கு தீர்வு காண முடியாது என்பதையும் பிரிவினைக் கோரிக்கை சாத்திய மற்றது என்பதையும் தோழர் மணியம் வலியுறுத்தி வந்தார். அதேவேளை பேரினவாதத்திற்கு எதிரான உறுதியான போராட்டம் தேசவிடுதலைப் போரட்டத்திலிருந்து பிரிக்கப்பட முடியாத அம்சம் என்பதையும் அவர் வலியுறுத்தத் தவறவில்லை இனப்பிரச்சனையின் இடைக்காலத் தீர்வுக்கு முத்தரப்பு (இலங்கை, தமிழர் இயக்கங்கள் இந்தியா) பேச்சுவார்த்தை அடிப்படையில் இராணுவ நடவடிக்கைகள் உதவாது என்பதையும் அரசியல் தீர்வு காணப்பட வேண்டுமென்பதன் அவசியத்தையும் கட்சி யின் மத்திய குழுமூலமாக அவ்வப்போது வலியுறுத்தியும் வந் தார்.

1983 ம் ஆண்டுக்குப்பின் பல்வேறு வழிகளிலும் சிக்கலாக் கப்பட்ட இலங்கையின் இனப்பிரச்சினையில் இந்தியா ஒரு நடு நிலை நண்பன் என்ற நிலையில் இருப்பதை விடுத்து தனது பிராந்திய மேலாதிக்கத்தை நிலைநாட்ட இனப்பிரச்சனையை ஒரு கருவியாகப் பயன் படுதுவதை தோழர் சுப்பிரமணியம் மிகக்கடு மையாக எதிர்த்து வந்தார். இந்திய மேலாதிக்கத்தை எதிர்த்து நமது தேசத்தின் சுதந்திரம், சுயாதிபத்தியம் என்பன பாதுகாக் கப்பட்டு பேணப்பட வேண்டு மென்பதில் சகல தேசபக்த ஜனநாயக சக்திகளுடனும் உறுதியாக ஐக்கியப்பட்டு செயற்பட வேண்டியதன் அவசியத்தையும் தோழர் மணியம் வலியுறுத்தி வந்தார். தேசத்தின் நலன், மக்களின் மேம்பாடு உழைக்கும் மக்களின் விடுதலை என்பவற்றிற்காக எத்தகைய தியாகங்களையும் செய்வதற்கு தயாராக இருக்க வேண்டும் மென்று முழுக்கட்சிக்கும் வழி காட்டிய தோழர் மணியம் வெறும் வரட்டுக் கௌரவங்களையோ, வெற்றுக் கோசங்களையோ வைத் திருப்பதில் எவ்வித அர்த்தமும் இல்லை என்பதில் உறுதியாக இருந்து வந்தார்.

இன்று தமிழ் பேசும் மக்கள் உட்பட்ட நாட்டு மக்கள் அனைவரும் அனுபவித்து வரும் அவல வாழ்வுக்கு குறைந்த பட் சத்தீர்வாவது ஏற்பட வேண்டும் என்பதிற்காக மாற்று அரசாங் கம் ஒன்றின் தேவையை கட்சியின் மூலமாக வலியுறுத்தி வந் தார். அதன் அடிப்படையிலேயே கடந்த ஜனாதிபதித் தேர்தலில்

ஜனநாயக மக்கள் சக்தி வேட்பாளராகப் போட்டியிட்ட திருமதி சிறிமா பண்டார நாயக்காவை ஆதரித்து அவரது யாழ்ப்பாண வருகைக்கும் பிரதான பங்களித்தார். இதன் மூலம் முற்போக்கு ஜனநாயக தேசபக்த சக்திகளிடையே ஐக்கியமும் புரிந்துணர்வும் உருவாகுவதற்கு வழி ஏற்பட்டது.

தோழர் சுப்பிரமணியம் பாட்டாளிவர்க்க சர்வதேசியத்தை உயர்வாக மதித்து வந்தவர். சகோதர கம்யூனிஸ்ட் கட்சிகளிடையே உறவுகளை வளர்ப்பதில் ஆர்வத்துடன் செயற்பட்டு வந்தவர். சீனக் கம்யூனிஸ்ட் கட்சியுடனும், சோஸலிச சீனத்துடனும் நேர்மையான உறவுகளை எமது கட்சி கொண்டிருக்க வேண்டியதன் அவசியத்தை எப்பொழுதும் வலியுறுத்தி வந்த தோழர் மணியம் ஏனைய சகோதரக் கட்சிகளுடனும், சோசலிச நாடுகளுடனும் நட்புறவை வளர்ப்பதில் தெளிவுடன் செயல்பட்டு வந்தார். தோழர் சுப்பிரமணியம் 1963, 1967, 1975, 1979, ம் ஆண்டுகளில் சீனமக்கள் குடியரசிற்கும் 1967 ம் ஆண்டில் அல்பேனிய நாட்டிற்கும் கட்சி, வாலிபர், தொழிற் சங்கம் ஆகிய வற்றின் தூதுக் கோஷ்டிகள் மூலமாக நட்புறவு விஜயங்களை மேற்கொண்டவர்.

தோழர் சுப்பிரமணியம் கட்சியின் பத்திரிகைகளான செம்பதாகை, ரெட்பனர், புதியபூமி ஆகியன வெளிவரவும் அவை மக்களிடம் சென்று தமக்குரிய நன் மதிப்பினை பெற்றுக் கொள்வதற்கும் ஆலோசனை வழங்கி அவற்றின் வளர்ச்சிக்கு பெரும் பங்காற்றினர். தேசிய கலை இலக்கியப் பேரவையின் பன்முகப்பட்ட செயற்பாட்டிற்கும் அதன் பத்திரிகையான தாயகத்தின் தரமான இலக்கியப் பணிக்கும் அவரது ஆலோசனைகள் நடைமுறை யதார்த்தமாக வழிகாட்டி நின்றன.

தோழர் சுப்பிரமணியம் ஓர் உறுதியான கம்யூனிஸ்ட் போராளியாக - சிறந்த தலைவராக இருந்த அதேவேளை கட்சிக்கு வெளியே முற்போக்கு ஜனநாயக தேசபக்த சக்திகளிடையே ஏராளம் நண்பர்களைக் கொண்டிருந்தார். அவர்களை மதித்தும் வந்தார். அறிஞர்கள், கல்வியாளர்கள், கலை இலக்கிய எழுத்தாளர்கள் மற்றும் புத்திஜீவிகளை அவரவர்களின் ஆற்றல்களைக்கொண்டு மக்களின் விடுதலைக்கும் மாற்றத்திற்கும் பயன்பெறச் செய்வதில் அக்கறை மிகுந்த ஆலோசனைகளை வழங்கி வந்தார்.

தோழர்களே! நண்பர்களே!

தோழர் கே. ஏ. சுப்பிரமணியம் தன் வாழ்நாள் பூராவும் இந்நாட்டுக்காகவும், இந்நாட்டின் அடக்கி ஒடுக்கப்பட்ட மக்களுக்காகவும் தன்னை முற்று முழுதாக அர்ப்பணித்து தன்னடக்கத்துடன்

தனது ஆற்றல் முழுவதையும் பயன்படுத்தி சேவை செய்துவந்த ஒரு உயர்வான கம்யூனிஸ்ட் போராளி என்பதையும் எமது கட்சியின் பெருமைமிக்க தலைமைப் பாத்திரத்தை வகித்து வந்த தலைவரும் ஆவார் என்பதையும் இலங்கை கம்யூனிஸ்ட் கட்சியின் (இடது) மத்திய குழு மன நிறைவுடன் பிரகடனம் செய்கிறது. அவரது மறைவுக்கு கட்சி முழுவதும் தனது செங்கொடியைத் தாழ்த்தி புரட்சிகர வீர அஞ்சலியைத் தெரிவித்துக்கொள்கிறது தோழர் சுப்பிரமணியம் தனது புரட்சிகர வாழ்வாலும் வழிகாட்டலாலும் எமக்கு விட்டுச் சென்றுள்ள மாக்சிச - லெனினிச மாஓசேதுங் சிந்தனை அடிப்படையிலான வளம்மிக்க அனுபவங்களைப் பேணிப் பாதுகாத்து எத்தகைய இடர்கள் மத்தியிலும் முன்னெடுத்துச் செல்வோம் என மத்திய குழுவும் முழுக் கட்சியும் இவ்வேளையில் திடசங்கற்பம் எடுத்துக்கொள்கின்றது.

ஒரு கம்யூனிஸ்ட் போராளியாக - தலைவராக சொல்லாலும் செயலாலும் தோழர் கே. ஏ. சுப்பிரமணியம் வாழ்ந்து கட்சிக்கும் மக்களுக்கும் சேவை செய்து வழிகாட்டிச் செல்வதற்கு உற்ற குடும்பத் துணைவியாக வாழ்ந்து வேதனைகளிலும் சோதனைகளிலும், சாதனைகளிலும் பங்கேற்று வந்த வாழ்க்கைத் துணைவியார் வள்ளியம்மை அவர்களுக்கும் பிள்ளைகளான சத்தியராஜன், சத்தியமலர், சத்தியகீர்த்தி ஆகியோருக்கும் கட்சி மத்திய குழு தனது அனுதாபத்தையும் ஆறுதலையும் தெரிவித்துக் கொள்கின்றது.

15/1 மின்சாரநிலைய வீதி
யாழ்ப்பாணம்
இலங்கை

மத்திய குழு
இலங்கை கம்யூனிஸ்ட் கட்சி (இடது)

# A Revolutionary Salute

(Text of a Tribute paid by Comrade S. K. Senthivel, the new General Secretary of the Sri Lanka Communist Party (Left) at the Commemoration Meeting held on *17-12-1989* at Jaffna *Town* to mark the passing away of Comrade K. A. Subramaniam, the former General Secretary of the Party)

Comrades! Friends!

I am delivering this Commemoration Address on behalf of the Party's Central Committee.

The Party's General Secretary, Comrade K. A. Subramaniam, who was loved and respected by us all, deparated from our midst on *27-12-1989*

Comrade Subramaniam (*1931-1989*) devoted his whole life to working for the country and the oppressed people of this land. He was a noble Communist fighter who conducted his struggles on the lines of Marxism - Leninism. He has set a valuable example to all the communists, the leftists and the progressives of this land by living in accordance with the maxim 'Simple life, hard struggle'.

Comrade Subramaniam was born to an orthodox family of farmers in the village of Kollankallady in the Northern Region. After completing his primary and secondary education, he joined the K. K. S. Cement Factary as an Engineering Apprentice. He was 17 then. During the early stages of his work-

ing life he came into contact with a Communist worker in the factory and was attracted by the Maxist Philosophy. Consequently he began to participate in Trade Union activities which were based on the tenets of Communism. Enraged by this, the Factory Administration, which included white bosses, dismissed him, Not worried one bit by the loss of his job, he began to study Marxism more deeply and resolved to serve the people on the basis of Communism.

In 1951 he joined the Communist Youth Movement and thereafter became a member of the Ceylon Communist Party. As a young Communist, aged 22, the first struggle Comrade Maniam participated in was the island - wide Hartal of 1953. The Hartal which was jointly led by the Communist Party and other left parties, was a great success in the North too and paved the way for the emergence of a class consciousness and a sense of unity embracing the whole island. Comrade Maniam who was inspired by the revolutionary fervour roused by the Hartal, and who was in close touch with the then leaders who guided the Communist Movement in the North leaders like M. Karthigesan, Dr. S. V. Seenivasagam. Pon, Kandiah, A. Vaithilingam and M. C. Subramaniam became a full - time party worker. At the begining, he was appointed to be in - charge of party work in the K. K. S. Electorate and was based in Chunnakam. During this period, the Trade Union in the K. K. S. Factory was built up amidst great difficulties and severe challenges. Trade Union struggles began gradually to make headway. Comrade Maniam worked hard to build up the Party outside the Factory and to establish youth organisations affiliated to the Party.

Maniam's weighty labours bore fruit: during this period severel intellectuals teachers. students and government servants were drawn towards Communism.

In 1956, as a result of S. W. R. D. Bandaranayake's coming to power, some progressive measures were taken: one such measure was the take over of schools. The Catholic hierarchy and Tamil reactionaries joined hands to launch counter measures. At this jnncture, the Communist Party had to launch a strong campaign in support of the take over The people supported this campaign. Comrade Subramaniam mobilised youths in support of this campaign and was in the forefront of the campaign.

In the latter half of the 1950s, he was chosen a member of the Party's Northern Regional Committee and became the Regional Secretary of the Northern Region Communist Youth Movements He used all his skills and talents to build up the Youth Movement as a strong force both politically and organisationally. In 1963, the depressed caste-living in Neervely, were brutally assaulted and caste fanatics set fire to their houses. The Youth Movement staged a protest march in Jaffna Town and collected funds for the affected people. Dr. S. V. Seenivasagam led the protest march and chaired the public Meeting held to condemn this brutality. Comrade Maniam was in the forefront of this protest campaign, This was a fore-runner of the later struggles against caste oppression.

In 1963 - 1964, the Ceylon Communist Party split as a result of the ideological struggle waged both nationally and internationally. At that time Com-

rade Maniam lined up with the revolutionary forces which were guided by Marxist-Leninist- Mao Zedong Thought. Through this ideological struggle he resolved to take forward the revolutionary struggle based on a revolutionary party.

After 1964, while being one of the leading members of the Revolutionary Communist Party, he led the struggle againt wrong ideas and practices both within and outside the Party. He joined with other sincere Commuists in the Party to oppose those who spouted revolutionary textbook slogans while, in practice, they possessed a bourgeoi's parliamentary outlook, In these struggles, he adopted a balanced, ideological stand. At the same time he stressed that as the Party was the Party of the oppressed classes it should launch mass struggles centred on their most pressing problems. He took the lead in getting resolutions to this effect passed in the Party. These resulted in the mass upsurge on 21st October 1966 at Chunnakam. Comrade Maniam led the upsurge and was one of those principally responsible for guiding and taking forward the struggles.

Following this upsurge, Comrade Maniam rendered invaluable service to the Party and the people by providing a correct and balanced leadership to mass struggles which combined both struggles within and outside the confines of the law. The broad united front he helped build up to fight untouchability and the principles, practices and strategy he helped to formulate for this mass organisation will go dowu in history and will never be forgotten by the people. The historic victories of the people at Chankanai - Nitchamam, Maviddapuram, Madduvil - Manthuvil, Karaveddy - Kanpolai were mainly due to Comrade

Maniam's guidance which combined practical realism and a balanced ideological outlook.

Comrade Maniam was quite clear in his mind that the Communist Partyshould fight not only caste oppres-sian but shouldalso spearhed struggles in other shperes, and he acted accordingly. In the period 1964, 71 Co-mrade Maniam was in the forefront of Trade Union struggles, farmers struggles the youth movement and the anti-imperialist struggle: all these activites were centred round the Party and the youth movement The climax of these activities was reached in 1969 when the UNP Government banned the May Day Meeting. Maniam organised a mass procession to protest the ban. He was brutally assaulted by the police and received bleeding injuries. Through this struggle he shone forth as an exemplary Commu-nist manifesting the revolutionary fervour. courage dedication and self - sacrifice characteristic of Commu-nist militants.

In the history of the left movement in Sri Lanka on several occasions Communist leaders have slipped up due to political and economic circumstances, devi ated from their ideals and became inactive. As result, the enemies of the left and Communist Move-ment used these lapses as a trump card against the left movement. But Comrade Maniam, till he breathed his last, lived as aCommunist both in word and deed this is the legaly he has bequeathed to today's younger generation and the future generation.

In the 1970s, Comrade Maniam played a decisive role in the struggle against wrong ideologies and prac-tices within the party. At a time when in defining the stages of the revolution in Sri Lanka and in the forma-tion of an united front in the new democratic

revolutionary stage, dogmatism and sectarianism held sway within the Party, Comrade Subramaniam waged a disciplined, ideological struggle, within the party, against these trends. But at no stage did he from clandestine groups within the Party or violate the rules of the organisation. Even when the waged ideological struggles based on principles, he abided by the decision of the majority.

After 1964, when several hundreds of members and cardres who had joined the Party because it was a revolutionary party became dissatisfied with the Party leadership and began to quit the Party and became isolated individuals Maniam joined the other comrades who dicided to stay in the party and were confident that they could build up the Party anew, on the correct lines.

Comrade Subramaniam and the other comrades who continued to stay in the Party which had N. Sanmugathasan as its General Secretary, were forced to change their position in 1978. at a special Party Conference which was summoned in the middle of 1978, though a full report incorporating correct ideological, political and organisational standpoints was presented under the leadership of Comrade Maniam and debated, the report was not accepted and arbitrary decisions were taken. In this backround, Party members who had assembled from various parts of the island decided to form a separate party. Comrade Maniam accepted the proposal whole-heartedly and came forward to implement it resolutely.

On 3rd July, 1978 a Conference of Party members was held at Jaffna. At that Conference it was resolved that the new party should be named

Sri Lanka Communist Party (left), and till a Party Congress was held, and Interim Organsling Committee was chosen by the Conference, Comrade Maniam was elected Secretary of the Committee. Comrade Maniam deployed all his skills to build up the Party as a strong organisation and to make it take root among the working people.

From the time the new party was formed in 1978 till the early part of 1984, through criticism and self. criticism, the faults of the past were weeded out and the path was laid for the ideological, political and organisational consolidation of the party. From the bottom upwards, the principle of democratic centralism was adhered to. Dogmatism, sectrarianism, extremism and all the principles and practices which were rooted in a non-dialectical outlook were criticised and rejected. Guidelines for the assessment of united fronts were laid down. As for the national question, sterile positions were rejected and a clear standpoint formulated. The national and international situations were reviewed and correct principles corresponding to contemporary reality were adopted. It was on this basis that the first National Congress of the Sri Lanka Communist Party (left) was held on 2nd and 3rd September, 1984. The Central Committee elected at this Congress chose Comrade Maniam as the General Secretary. Till his death he functioned in that capacity in a worthy manner that instilled confidence in the Party and the people.

Comrade Maniam played the central role in formulating the Party's standpoint on the national question. The sterile standpoints adopted by the old party with regard to the Tamils as a nation and the right of self-determination were rejected and a principled, balanced

approach incorporating a long-term view was adopted. Comrade Maniam emphasised that the national question could not be solved on a hurried petit bourgeois basis and that the demand for separation was impracticable. At the same time he didnot fail to stress, that a resolute struggle against majority chauvinism was inseparable from the national liberation struggle. Through the Party s Central Committee he repeatedly stressed that military activities would not provide an interim solution to the ethnic problem and urged the need for an equitable political solution based on tripartite talks (the Tamil militants, the Sri Lankan State and India).

After 1983, when Sri Lanka's ethnic problem became complicated in various ways, and when India from being a non-partisan, friendly neighbour tried to establish its regional hegemony using the ethnic problem a a tool, Comrade Maniam very strongly opposed India. He emphasised the need for all patriotic, democratic forces to unit to resolutely oppose India's hegemonism and safeguard our country's independence and sovereignty. Comrade Maniam who instilled into the minds of the party members the conviction that they should be ready to make any sacrifice for the sake of the nation, the people's welfare and the liberation of the working masses, firmly believed that it was meaningless to mouth empty slogans or prize hollow honours.

Today, the people of this country, including the Tamils, are experiencing untold mesery. Through the party, Maniam stressed the need for an alternative government which could provide a minimum solution. It's on this basis that he supported the candidature of Mrs. Srima Bandaranaike the candidate of the popular, democratic forces at the last Presidential Election and played a major role in her Jaffna campaign

Through this, the way Communist paved for the unity of and mutual understanding between the progressive, democratic, patriotic forces.

Comrade Subramaniam had a very high regard for proletarian internationalism. He worked eagerly to foster, the ties and links between Communist fraternal parties. Comrade Maniam who always stressed the necessity for our Party to have honest links with the Chinese Commuist Party and Socialist China clear-sightedly strove to establish ties with other fraternal parties and socialist countries. In 1963, 1967, 1975 and 1979 he visited the people's Republic of China and in 1967 he visited the Albanis as a member of party, youth movement and trade union delegations which undertook goodwill missions to these countries.

Comrade Subramaniam helped to bring out Party newspapers like the 'Senathakai' 'Red Banner' and 'Puthiya Poomi' and gave advise which helped to win these papers the esteem of the people, and contributed to their growth. His guidance and advice greatly benefited the functioning of the Thesiya Kalai Illakiya Peravai and its organ 'Thayakam' which rendered worthy service to the cause of art and literature.

Comrade Maniam was a resolute Communist militant and a worthy leader. At the same time, outside the party, he had several friends among the progressive, democratic, patriotic forces, whom he respected He gave considered advice on how best to use the talents and skills of learned men, educationists, artists, writers and intellectuals for the liberation of the people and social change.

Comrades! Friends!

Comrade Subramaniam dedicated his life to work for the welfare of the country and the liberation of the oppressed people.

The Central Committee of the Sri Lanka Communist Party (left) declares with a sense of inner satisfaction, that Comrade Maniam was a worthy Communist Leader who self-effacingly poured all his talents into service for the people. The Party dips its red flag to pay a revolutionary tribute to a selfless Comrade who has passed away

The Central Committee and the Party firmly resolve to carry forward, despite all obstacles, the revolutionary legacy left behind by Comrade Maniam through his life and guidance and to safeguard the rich experiences garnered on the basis of Marxist-Leninist - Mao - Tse Tung Thought.

The Central Committee conveys its sympathies and condolences to Comrade Maniam's wife Valliammai and the children Sathiyarajan, Sathiyamalar and Sathiyakeerthi who shared the trials, tribulations and triumphs of Comrade Subramaniam and made it possible for him to lead, both in word and deed, the life of a Communist militant and leader and thus serve both the Party and the people.

CENTRAL COMMITTEE
*Sri Lanka Communist Party (Left)*

*15/1, Power House Road,*
*Jaffna,*
*Sri Lanka.*

# K. A. Subramaniam

I am glad to have this opportunity of paying my tribute to a man who had dedicated his life to the cause of his people, by making a contribution to the souvenir to be published on the occasion of the 31 st day of his death.

We are aware that he has rendered great service to the cause of the left movement in Sri Lanka. His aim was to bring about unity and understanding among all races living in Sri Lanka.

I must especially mention the fact that he gave me his full support to organise my presidential election campaign in the North in spite of the fact that he was not in the best of health.

His sudden death is a great loss for the cause for which he worked and lived.

Sri Lanka Freedom Party offers its deepest condolences to the members of his family and his party.

Sirima R. D. Bandaranaike
*Leader of the Opposition*

Colombo

# கே. ஏ. சுப்பிரமணியம்

தனது மக்களின் நலனுக்காக தனது வாழ்வை அர்ப்பணித்த ஒருவரின் முதல் மாத நினைவு மலருக்கு இச் செய்தியை அனுப்புவதற்கும், அவருக்கு அஞ்சலி செலுத்துவதற்கும் எனக்குக் கிடைத்த வாய்ப்பினையிட்டு நான் மகிழ்ச்சியடைகிறேன்.

இலங்கையில் இடதுசாரி இயக்கத்திற்கு அவர் பெரும் தொண்டாற்றினார் என்பதை நாம் அறிவோம். இலங்கை வாழ் பல இன மக்களிடையே ஒற்றுமையையும் புரிந்துணர்வையும் ஏற்படுத்துவதே அவரது குறிக்கோளாக இருந்தது.

சுகவீனமுற்றிருந்த போதிலும் அவர் முழுமூச்சாக எனது ஜனாதிபதி தேர்தல் நடவடிக்கைகளில் ஈடுபட்டிருந்தார் என்பதனை நான் விசேடமாக குறிப்பிட விரும்புகிறேன்.

அவரது திடீர் மரணம் அவரது இயக்கத்திற்கு மாபெரும் இழப்பு.

அவரது குடும்பத்தினருக்கும், அவரது கட்சிக்கும் சுதந்திரக் கட்சி தனது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவிக்கின்றது.

கொழும்பு
12-12-89

சிறிமா பண்டாரநாயக்கா
எதிர்க் கட்சித் தலைவி

# Comrade K. A. Subramaniam

I had the privilege of knowing, Comrade K. A. Subramaniam the General Secretary of the Sri Lanka communist party (left) a man whose selfless dedication to the betterment of man, for which he had devoted all his life Subramaniam was a great man whom I had known closely.

It would be appropriate to state that his struggle for National Unity in Sri Lanka was always upper - most in all his work.

Although he has passed away, I believe his spirit will always live in our minds. The Sri Lankan people will not forget him.

*Yakkala*

S. D. Bandaranaike

# தோழர் கே. ஏ. சுப்பிரமணியத்திற்கு அஞ்சலி

இலங்கை கம்யூனிஸ்ட் கட்சி (இடது) பொதுச் செயலாளர் தோழர் கே. ஏ. சுப்பிரமணியத்தை நன்கு தெரிந்திருக்கும் பாக்கியத்தை நான் பெற்றிருந்தேன். மனித குலத்தின் மேம்பாட்டிற்காக தனது வாழ்வை அவர் அர்ப்பணித்திருந்தார். நான் மிகவும் நெருங்கிப் பழகிய மாமனிதன் அவர்.

தேசிய ஒற்றுமைக்கான போராட்டமே அவரது பணிகள் யாவற்றிலும் மேலோங்கியிருந்தது.

அவரது உடல் மறைந்துவிட்டாலும், அவரது ஆன்மா எமது உள்ளங்களில் தொடர்ந்து வாழும். இலங்கை மக்கள் அவரை ஒரு பொழுதும் மறக்க மாட்டார்கள்.

எஸ். டி. பண்டாரநாயக்கா

யக்கல. ஸ்ரீ லங்கா முற்போக்கு முன்னணி

# A Dedicated Fighter

A dedicated fighter for the rights of the working class the late Mr. K. A. Subramaniam will undoubtedly be long remembered for the invaluable services rendered by him to all sections of the people for a period of several decades.

As the General Secretary of the Sri Lanka Communist Party (Left) Mr. Subramaniam had to carry on an ardous struggle in a political arena where self centered leaders had always been attempting to bamboozle the predominant Population for their own class interests. But the courageous struggle he carried on was able to earn much fame through the manner in which he approached the problems. His was an objective attitude towards the struggle which called for much valour and vigour.

Being an enlightened and exemplary communist he was basically a genuine patriot and true friend all down-trodden people. He was a leading progressive personage well known among all who were fighting for a common cause. His political outlook had always surpassed those of most other Tamil leaders. He had a wider perspective of the struggle of the people, of Sri Lanka. The urgent priority was to achieve national emancipation of the people. Community and even class interest however much they figured high in the political agenda had to take secondary place for such struggle to be triumphant.

It was with this view in mind that he at the last Presidential election openly and vigoursly supported the candidatur of Mrs. Srimavo Bandaranaike the nominee of the S. L. F. P- the party that he correctly adjudged to be possesing potentiality over all other parties to defeat anti people manoeuvres of reactionary forces.

It is an undisputed right of the people regardless of many social divisions to fight together hand in hand as one formidable force for their emancipation and consolidation of their freedom' sovereignty and independence. It was with this philosophy that made our subramaniam a renowned politician and a progressive fighter he was. It is a laudable gesture on the part of the commemoration committee to put out a souvenir on the eventful life of this worthy leader of the people.

*77, Dr. N. M. Perera Mawatha*
*COLOMBO -8*

M. HALEEM ISHAK, M. P.

# தேசிய விடுதலையை முதன்மைப்படுத்தியவர்

தொழிலாளி வர்க்கத்தின் உரிமைகளுக்காகத் தன்னை அர்ப்பணித்த போராளி காலஞ்சென்ற தோழர் கே. ஏ. சுப்பிரமணியம் பல தசாப்தங்களாக சகல துறையைச் சேர்ந்த மக்களுக்காக அவர் ஆற்றிய அளப்பரிய சேவைகள் மறக்கப்பட மாட்டா என்பது திண்ணம்.

இலங்கை கம்யூனிஸ்ட் கட்சி (இடது) பொதுச் செயலாளர் என்ற முறையில் தன்னலம் படைத்த தலைவர்கள் தமது வர்க்க நலனுக்காக பெரும்பான்மை மக்களை ஏமாற்ற முயலும் அரசியல் களத்தில் திரு. சுப்பிரமணியம் இடர் மிக்க போராட்டத்தை நடத்த வேண்டியிருந்தது. ஆனால் பிரச்சினைகளை அவர் அணுகிய முறை அவருடைய தீரமிக்க போராட்டத்திற்கு அதிக புகழைத் தேடிக் கொடுத்தது. வீரத்தையும் அயரா உழைப்பையும் வேண்டி நின்ற போராட்டத்தை அவர் புறநிலை நோக்குடன் அணுகினர்.

அறிவு படைத்த முன்னுதாரணமான கம்யூனிஸ்டாக அவர் திகழ்ந்ததால், அவர் அடிப்படையில் உண்மையான தேசபக்தனாகவும் ஒடுக்கப்பட்ட மக்களின் நண்பனாகவும் விளங்கினார். அவருடைய அரசியல் பார்வை பெரும்பாலான ஏனைய தமிழ்த் தலைவர்களின் நோக்கைவிட முன்னேற்றமானதாகவிருந்தது. அவர் நன்கு பிரபல்யமான முன்னணி முற்போக்குவாதியாக இருந்தார். இலங்கை மக்களின் போராட்டத்தை பற்றி அவருக்கு விரிவான பரிமாணம் இருந்தது. மக்களின் தேசிய விடுதலையே அவசர முதன்மை வாய்ந்ததாக இருந்தது. இந்தப் போராட்டம் வெற்றி ஈட்ட வேண்டுமாயின் இனம் ஏன் வர்க்க நலன்கூட அவை எவ்வளவுதான் அரசியல் துறையில் முதன்மை பெற்றிருப்பினும் இரண்டாம் இடத்திற்கு தள்ளப்படவேண்டியிருந்தன.

இதனை மனதிற் கொண்டுதான், கடந்த ஜனாதிபதி தேர்தலில் அவர் வெளிப்படையாகவும் முழுமூச்சுடனும் சுதந்திரக் கட்சி வேட்பாளர் திருமதி பண்டாரநாயக்காவை ஆதரித்தார். மக்களுக்கு எதிரான நடவடிக்கைகளில் ஈடுபடும் பிற்போக்குச் சக்திகளை முறியடிக்கக்கூடிய வல்லமை சுதந்திரக் கட்சியிடமே உண்டு என்பதை அவர் செம்மையாகக் கணித்திருந்தார்.

தம்மிடையேயுள்ள சமூகப் பிரிவுகளைப் பொருட்படுத்தாது. தமது விடுதலைக்காகவும், தமது சுதந்திரம், இறைமை ஆகிய வற்றை ஸ்திரப்படுத்துவதற்காகவும், மக்கள் ஒன்று பட்டு கை கோர்த்து போராடுவதற்கு உரிமை உண்டு என்பது மறுக்க முடியாதது. இந்தக் கண்ணோட்டம் தான் எமது சுப்பிரமணியத்தை புகழ் வாய்ந்த அரசியல் வாதியாகவும் முற்போக்குப் போராளியாகவும் ஆக்கியது. சகல தகுதிகளும் வாய்ந்த இந்த மக்கள் தலைவரின் சம்பவங்கள் நிறைந்த வாழ்க்கை பற்றி ஞாபகார்த்த குழு மலர் ஒன்றை வெளியிடத் தீர்மானித்துள்ளமை பாராட்டற்குரியது.

கொழும்பு

எம். ஹலீம் இஷாக்
பா. உ.

---

இலங்கை- இந்திய ஒப்பந்தமானது சம்மந்தப்பட்ட மக்களின் பிரதிநிதிகள் கலந்துகொள்ளாத இரு அரசுகள் மட்டுமே செய்து கொண்ட ஒரு ஒப்பந்தமாக அமைந்ததால் அது முழுமையற்றதாகவும், நடைமுறைச் சிக்கல்கள் உடையதாகவும் அமைந்தது, அதனால் பிரச்சனைகள் தீர்க்கப்படாததோடு புதிய பல நெருக்கடிகளும் கிளைவிடக் காரணமாய் அமைந்தது. இனப் பிரச்சனைக்கு இலங்கை- இந்திய ஒப்பந்தத்தால் உரிய தீர்வு கிட்டவில்லை. ஆயினும் அந்த ஒப்பந்தத்தில் காணப்படும் சில சாதகமான அம்சங்களை ஒரு தொடக்கமாகக் கொண்டு விரிவான அடிப்படையில் இனப் பிரச்சனைக்கு அரசியல் தீர்வு காணப்படல் வேண்டும்.

— 'இலங்கையின் இன்றைய நெருக்கடி என்ன?
(12-10-89 கட்சி அறிக்கையில் இருந்து.

---

# ஒரு மானிட மரம் சாய்ந்திருக்கின்றது

இந்த
மானுட மரம்
வீழ்ந்து விடவில்லை
சாய்ந்திருக்கின்றது
தனது
தலை (ளை)
இலை
வேர்
பூ வென
தன்னையே
இம்மக்கள் வனத்திற்கு
அர்ப்பணம் செய்து கொண்ட - இம்
மானுட மரம்
சாய்ந்திருக்கின்றது

முற்றிப் பழுத்து
வெடித்துக் காய்ந்த - இதன்
விதைகள்
தேசமெல்லாம்
விவசாயி தொழிலாளி
வியர்வையில் ஊறி
குருதியில் நனைந்து
வேர்விட்டு நன்றாய்
விளைந்திருக்கின்றது.

பலர்
எரிவதாகக் காட்டிக் கொண்டு
எண்ணெய்சேர்த்துக்கொண்டிருந்தபோது
எண்ணெய் இல்லாத போதும்
எரிந்து எரிந்து

தன்னையும் எரித்துக் கொண்டு - இனியும்
எரிவதற்கென
ஏராளம் ஏராளம்
எரிமலைகளை உருவாக்கி-இந்த
மானிட மரம்
தலை சாய்ந்து மெல்ல
சாய்ந்திருக்கின்றது

எங்கள்
மலையகம் ஒரு தனிரகம்
கடவுளின் பெயரால்
கபடங்களும்
தொழிற் சங்கங்களின் பேரால்
தோல்விகளும்
இப்போது
இயக்கங்களின் பேரிடிகளுமென
எங்கள் மலையகம்
ஒரு தனி ரகம்
அங்கே
கையை வைப்பதே கடினம்
காலை வைப்பதென்பது
கடினத்தின் கடினம்
இந்த தோழமை
இங்கே
தொடர்ந்து வேர்விட்டு
நடந்து களைத்து
நாற்றிசை பெருக்கி
இறுதியில்
அம்மலையக மண்ணிலே
மயங்கி சாய்ந்து
நடந்த களைப்பினை
போக்க நினைத்தது

திக்குத் தெரியாத காட்டில்
கண்களைக்
கறுப்புத் துணிகளால்
கட்டிக் கொண்டு

ஞானத்தைத் தேடுகிறோம் என
இருளைத் தேடிக் கொண்டிருந்த
எங்களுக்கு
உழைப்பாளர்களை நேசிக்கும்
உன்னத பாதையை
உணர்வால் காட்டித் தந்த
உயர்ந்த தோழமை - இங்கு
ஓய்வாய் மெல்ல - உருவந்தால்
சாய்ந்திருக்கின்றது

சாரலில்
உறங்கிக் கிடந்த - எங்களை
தட்டி எழுப்பியதோடு
உயிர் கொடுத்து- இந்த
'சத்தியமனை'க்கும் ஈர்த்து வந்து
சத்தியங்கள் கற்றுக் தந்து
ஓயாது உழைத்து
உருக்குலைந்து போன
உத்தம தோழரின் உடல் இங்கு
ஓய்வாக சாய்ந்திருக்கின்றது

தோழர்களே!
இவ்வுலகில்
மானுடம் உள்ளவரை
மனிதரை நேசித்த - இந்த
தோழரின் உணர்வுகள்
தொடர்ந்து
பிறந்து வரும்
விடியல்களுக்காக
எங்கெல்லாம்
விளக்குகள் ஏற்றப்படுகின்றனவோ,
அங்கெல்லாம்
விடிவுகால நட்சத்திரமாய் - இவரின்
விளக்கங்கள்
பாதை காட்டும்.

அடிகளோடு
மிதிகளும்
பிணக்காட்டிடையே
நடைபாதைகளுமாயுள்ள

மலையகத்தில்
நாளை மலரும்
மலையக ரோஜாக்கள்
தோழரின் நிறமாய்
தொடர்ந்து
பூத்திருக்கும்
ஓய்வாய் சாய்ந்திருக்கும்
உயர்நிலைத் தோழரின்
உன்னத உணர்வுகள் - அங்கு
உரமாய் ஊட்டப்படும்.

உழைப்பாளர்களை நேசித்த - இந்த
உன்னத தோழரில்
உருக்கொண்ட இலட்சியங்கள்
உயரத்தில் ஏற்றப்படும்
அதுவரை
உடலால் இத்தோழமை
ஓய்வு எடுக்கட்டும்.

வாருங்கள் தோழர்களே
வையத்தை வென்றெடுபோம்
தன்
வாழ்வு முழுதையும்
எம்
வாழ்வுக்காய் தந்துவிட்ட இத்
தோழரின் உணர்வுகளை
தொடர்ந்து விதைத்திடுவோம்
'பொதுமை' பெறும் வரையில்
போர் முரசாய் முழங்கிடுவோம்

இடது
கம்யூனிஸ்டால்
இளைஞர் சக்தியெங்கும்
ஏற்றம் பெற்றிடவே
இணைந்து
தோள் சேர்ப்போம்

தோழர்
கண் போல காத்து வந்த இடது
கம்யூனிஸ்ட் கட்சியின்
விதைகளை
கருத்தோடு தூவி வைப்போம்
நாடெல்லாம் ஏற்கெனவே
நலம் பெறவே வளர்ந்துவிட்ட
கட்சி விருட்சங்களை
கட்டிக்காத்து
விடியல்களுக்கு
வழிசமைப்போம்
'தோழரின்' பாதையில்
தொடர்ந்து செல்வோம்
இது சஞ்சலமட்டுமல்ல
ஆரம்பம்.

இராகலை — சி. இராஜேந்திரன்



1969ல் நடைபெற்ற சட்டமறுப்பு மேதின ஊர்வலத்திற்கு தலைமை தாங்கிச் செல்கிறார்
Maniam leads the banned May Day procession in 1969



மேற்படி ஊர்வலத்தை தாக்குவதற்கு பொலிஸ்படை தயார் நிலையில் இருக்கின்ற காட்சி
The police poised to baton charge the above procession

# Rare Politician

It requires extra ordinary courage to take political stances which are not acceptable to people in power and to people who speak only the language of guns. It takes far more than strength of will to defy the majority chauvinism in defence of the minority without falling victim to narrow rationalist sentiments and following the emotional tide.

K. A. Subramaniam, the general secretary of the Sri Lanka communist party (left) who died on 27-11-89 after some months of serious illness was a rare politician in the context of Sri Lankan politics amidst ethnic conflict.

He started his political life as a young communist and remained loyal to the Marxist leninist line from his early days in the party, through the major split in 1964 between the pacifist parliamentarist section and the proletarian revolu tionary section of the Ceylon Communist Party, up to the very end of his life. The splits which weakened the CP and the subsequent splintering of the Marxist - leninist section because of the opportunism of the leadership did neither dent his confidence in the communist cause nor weaken his resolve in taking the struggle forward.

He had remarkable organisational skills and leadership qualities, but he never sought position within the party and preferred to work for the cause with dignity and determination. It was with much reluctance that he accepted the position of general secretary of the CPSL (left) a few years ago when the young and enthusiastic members of the party wanted a person with experience and maturity to lead the party during a period of national political crisis.

He displayed a sence of balance and objectivity in dealing with problems small and large. He was in the front

line in the struggles against exploitation and oppression and when senior party leaders ran for cover during [police attack on a May day demonstration in the late 60's, K. A. Subramaniam refused to desert and was brutally attacked with batons.

He was among the few leaders of the movement against caste oppression in the north who acted to ensure that [the struggle was directed against the handful of oppressors and not allowed to develop into a caste war. This clarity of vision was again evident in the line taken by the CPSL (left) on the national question, where the CPSL (left) backed the struggle for liberation while firmly rejecting separatism as the only solution.

K. A, Subramaniam always believed in uniting all progressive forces against the oppressors and rejected sectarianism. His ability to mobilise progressive forces with political differences was demonstrated on several occasions and particularly in the highly successful election rally in support of the SLFP candidate at the last presidential election, organized by the CPSL (left) in the north.

He never believed in taking advantage of individuals or organisations or using others to achieve his ends. To him politics was a matter of unity and struggle, both principled.

His [death has robbed the Tamil coummunity and the progressive forces of Sri Lanka of a sincere, humble and honest revolutionary political leader.

Prof S. Sivasegaram

6-12-89

# துணிச்சலும் உறுதியும் கொண்ட அபூர்வமான அரசியல்வாதி

அதிகார பீடத்தில் அமர்ந்தவர்களுக்கும் ஆயுத பலத்தை மாத்திரமே நம்பியிருப்பவர்களுக்கும் மாறான அரசியல் நிலைப் பாட்டை மேற்கொள்ளும் ஒருவருக்கு அசாதாரண துணிச்சல் அவசியமாகும். சிறுபான்மையோரின் நலன் காக்கும் நோக்குடன், பெரும்பான்மையோரின் இனவிரோத நிலைகளை மறுக்கும் அதே சமயத்தில் குறுகிய இனவுணர்ச்சி அலைகளுடன் அள்ளுப்பட்டுப் போகாமல் இருப்பதற்கு வெறும் மனவுறுதி மட்டும் போதாது.

சென்ற சில மாதங்களாகக் கடுமையான நோய் வாய்ப்பட்டிருந்து, 27-11-89 இல் மறைந்த இலங்கைக் கம்யூனிஸ்ற் (இடது) கட்சியின் பொதுச் செயலாளர் கே. ஏ. சுப்பிரமணியம் அவர்கள், இன முரண்களாற் பிளவுண்டு கிடக்கும் இலங்கை அரசியற் களத்திலே காண்பதற்கு அரியதோர் அபூர்வமான அரசியல் வாதி ஆவார்.

அவர் தம் இளமைக் காலத்திலேயே பொதுவுடமைக் கொள்கையை வரித்துக் கொண்டவர். ஆரம்ப காலத்திலிருந்தே மாக்சிய லெனினிய நெறிக்கு விசுவாசமாக ஒழுகியதுடன், 1964 இல் இலங்கைக் கம்யூனிஸ்ற் கட்சியின் பாராளுமன்ற - சமரசவாதப் பிரிவுக்கும், பாட்டாளி வர்க்கப் புரட்சிகரப் பிரிவுக்குமிடையில் உண்டான பிளவுக்குப் பின்னரும் அந்நெறியில் உறுதியாய் இருந்தார். கம்யூனிஸ்ற் கட்சி பிளவுபட்டு நலிவடைந்த வேளையிலும், பிற்பட்டதொரு காலகட்டத்திலே மாக்சிய லெனினியப் பிரிவுகூடச் சந்தர்ப்பவாதத் தலைமை காரணமாக மேலும் பின்னமடைந்த சமயத்திலும் அவர் பொதுவுடமைக் கோட்பாட்டின்மீது வைத்த நம்பிக்கை தளரவில்லை. போராட்டத்தை முன்னெடுத்துச் செல்வதில் அவர் கொண்ட உறுதி சோர்வடையவில்லை.

நிறுவனப்படுத்தும் ஆற்றலும் தலைமைப் பண்புகளும் அவரிடம் நிறைய இருந்தன. ஆனால் அவர் பதவிகளைத் தேடி ஓடவில்லை. தாம் கொண்ட குறிக்கோளுக்காகக் கௌரவத்துடனும் திடசித்தத்துடனும் பாடுபட்டார். சில ஆண்டுகளுக்கு முன்

தேசிய அரசியல் நெருக்கடி மிகுந்ததொரு காலகட்டத்திலே, அநுபவமும் முதிர்ச்சியும் வாய்ந்த அவரை, இலங்கைக் கம்யூனிஸ்ற் (இடது) கட்சியின் பொதுச் செயலாளர் ஆகுமாறு, ஆர்வம் மிக்க கட்சி இளைஞர்கள் வேண்டிக் கொண்டனர். அப்போதும் மிகுந்த தயக்கத்துடனேதான் அவர் அந்தப் பொறுப்பை ஏற்றுக் கொண்டார்.

பிரச்சினைகள் பெரியனவாயினும் சிறியனவாயினும், அவற்றைக் கையாளும்போது நடுநிலையுடன் புறவயமாகச் சிந்தித்துச் செயலாற்றினார். சுரண்டலுக்கும் ஒடுக்கலுக்கும் எதிரான போராட்டத்தில் அவர் முன்னணியில் நின்றார். அறுபதுகளின் பிற்பகுதியில் ஒரு மேதின ஆர்ப்பாட்டத்தின் போது பழம்பெருங் கட்சித் தலைவர்கள் ஓடி ஒதுங்கிய வேளையில் கே. ஏ. சுப்பிரமணியம் அவர்கள் புறங்காட்டாது முன்னின்று பொலிசாரின் மூர்க்கத்தனமான தடியடிக்கும் உள்ளானார்.

வடபகுதியிலே சாதி எதிர்ப்பு இயக்கம் பாரியதொரு சாதி யுத்தமாக வெடிக்கவிருந்த தருணத்தில், ஒடுக்கற்காரர்களான ஒரு சிலருக்கு மாத்திரம் எதிரான ஓர் இயக்கமாக அதை வழி நடத்திய தலைவர்கள் சிலருள் தோழர் சுப்பிரமணியம் குறிப்பிடத் தக்கவர். இவ்வாறான கொள்கைத் தெளிவு, தேசியப் பிரச்சினைகள் பற்றி இலங்கைக் கம்யூனிஸ்ற் (இடது) கட்சி கடைப்பிடித்த நிலைபாட்டிலும் நன்கு புலப்படுகிறது. இக்கட்சி, விடுதலைப் போராட்டத்தை ஆதரித்த அதே வேளையில், பிரிவினை மாத்திரமே ஒரேயொரு தீர்வு என்னுங் கருத்தினை நிராகரித்தது.

தோழர் கே. ஏ. சுப்பிரமணியம் ஒடுக்கலாளருக்கு எதிராகச் சகல முற்போக்குவாதிகளையும் அணிதிரட்ட வேண்டும் என நம்பினார்; குழுவாதத்தை நிராகரித்தார். அரசியல் வேறுபாடுகளையும் கடந்து சகல முற்போக்குச் சக்திகளையும் ஒன்று திரட்டுவதில் அவருக்கிருந்த திறமை சென்ற ஜனாதிபதி தேர்தலின் போது புலனாயிற்று. அத்தேர்தலில், ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சி வேட்பாளரை இலங்கைக் கம்யூனிஸ்ற் கட்சி (இடது) ஆதரித்து நின்றமை நினைவுகூரத்தக்கது.

தனியாட்களையோ நிறுவனங்களையோ வஞ்சித்துத் தமது நோக்கங்களை நிறைவேற்றும் போக்கு அவ்ரிடம் இருந்ததே இல்லை. அவரது அரசியல், ஒற்றுமையான போராட்ட நெறி முறைக்கு உட்பட்டது.

அவரது மறைவினாலே இதய நேர்மையுள்ள உண்மையான புரட்சிகர அரசியல் தலைவர் ஒருவரைத் தமிழ்ச் சமூகம் இழந்து விட்டது. இலங்கையின் முற்போக்குச் சக்திகளுக்கு அவர் மறைவு பேரிழப்பாகும்.

பேராசிரியர் சி. சிவசேகரம்

6-12-89

# A Sound Politician

At the early stages of my practice as an Advocate and thereafter, Subramaniam had me retained in the most difficult cases filed against Workers and Trade Unionists. It was at a time when the Workers and Trade Unionists were harassad both by the State and Society.

Subramaniam was, however, an inspiring leader and we hardly lost a single case. The last case I appeared for him was a Caste case at Chavakachcheri connected with the Temple Entry. The High Class Tamils were out to poison the wells and the police were helping them to prevent the depressed classes from going into the Temple yard.

The depressed classes organised themselves and restrained the police from doing this foul act. They even assaulted the police. It was a sensational case and the high class interests were demonstrating outside Coutt.

We won the case. Subramaniam as a true leader had prepared the case so well inspite of all the disadvantages in the Caste ridden area.

Subramaniam was well read in poiitics and had his own political philosophies which he often shared with me. We had a few political differences but that did not prevent us from meeting and having useful discussions.

Subramaniam was a very affectionate friend and never failed to meet me when he came to Colombo. I had the opportunity to meet his son.

He was a family friend, a sound politician and a great gentlemen.

I share the grief over his death with the members of his family and his friends.

Subramaniam was patriot, a humanist and a lover of people. He was the the Champion of the the oppressed and throughout his life he carried on a relentless Crusade against the oppressors,

He has fought his battles valiantly and his life has been a Victory over death.

Colombo. T. W. RAJARATNAM

*"A man should not be afraid of death. In the event of war. I think the best way to die is on the battlefield. You fight the enemy to the finish, and if you are hit by a bullet, that's If there is no war. You work hard, very hard, until you are drained of yout last ounce of strength and drop dead"*

\- Zhou Enali

# மணியான ஒரு மனிதரின் மறைவு

திரு. கே. ஏ. சுப்பிரமணியம் மறைந்து விட்டார். மக்கள் பலராலும் தோழர் என உரிமை பாராட்டப்படும் மணியத்தார் ஒரு மணியான மனிதர்.

அவர் உயரிய இலட்சியங்களை உயிரினும் மேலாக மதித்து வாழ்ந்தவர். வெறும் சிந்தனையாளர் அல்லர்; தாம் மேற்கொண்ட கொள்கையின் பொருட்டு, அல்லும் பகலும் சோராது உழைத்தவர்; சாதனையாளர்.

அடக்கப்பட்டும் ஒடுக்கப்பட்டும், நசுக்கப்பட்டும் சுரண்டப்பட்டும் திண்டாடும் மக்கட் பிரிவினரின் விடிவுக்காகத் தமது சொல்லையும் செயலையும் அர்ப்பணித்தவர். சாதியத்துக்கு எதிரான போராட்டங்களிலும் இயக்கங்களிலும் அவற்றின் அச்சாணி போல அமைந்து பயன்பட்டவர். அந்தத் தருணங்களில் அவர் காட்டிய துணிவும் ஊக்கமும் ஆற்றலும் வரலாற்று ஏடுகளிற் பதிவு பெற்றுவிட்ட பண்புகளாகும்.

மணியத்தாருடன் தனிப்பட்ட முறையிலே பழகும் வாய்ப்பு மிகவும் அண்மையிலே தான் எனக்குக் கிட்டிற்று. ஆனாலும் இந்த ஐந்தாறு ஆண்டுக் காலப்பகுதியில் அவருடைய இனிய இயல்புகள் பலவற்றைத் தெரிந்து கொண்டேன். நிதானமான சிந்தனைத் தெளிவும், காரியங்களைத் திட்டமிட்டு ஒழுங்கு படுத்தும் திறமையும் அவரிடம் நிறைய உண்டு.

கொள்கை விளக்கங்களான பிரசுரங்களையும் நூல்களையும் வெளிக்கொணர்வதில் அதிக ஆர்வத்தை அவர் அண்மைக்காலங்களிலே காட்டி வந்தார். கருத்தரங்குகளும் ஆய்வுரைக் கூட்டங்களும் அடிக்கடி நடக்க வேண்டும் என்பதும் அவர் விருப்பமாகும். நோய்வாய்ப்பட்டிருந்த வேளையிலும் வருங்கால வேலைத் திட்டங்களைப் பற்றிய எண்ணங்களே அவர் சிந்தனையை நிறைத்திருந்தன.

இவ்வாறான ஒரு பெரியவர் நம்மை விட்டுப் பிரிந்தமை பெருந்துயர் தருவதாகும். அவரது பிரிவினால் வருந்தும் உறவினர்களுக்கும் நண்பர்களுக்கும் அபிமானிகளுக்கும் நமது அநுதாபம் உரியது

நீர்வேலி தெற்கு,
நீர்வேலி.

இ. முருகையன்

# நிதானம் மிக்க அரசியல்வாதி

நான் சட்டத்தரணியாகப் பணியாற்றத் தொடங்கிய ஆரம்ப கட்டத்திலும் அதன் பின்னரும் தொழிலாளர்களுக்கும் தொழிற் சங்கவாதிகளுக்கும் எதிராகத் தாக்கல் செய்யப்பட்ட மிக கடின மான வழக்குகளில் எல்லாம் சுப்பிரமணியம் என்னை ஆஜராகும் படி செய்வித்தார். அந்தக் கட்டத்தில் அரசும் சமுதாயமும் தொழிலாளர்களையும் தொழிற்சங்கவாதிகளையும் பெரும் தொந் தரவுகளுக்கு உட்படுத்திக் கொண்டிருந்தனர்.

ஆனால் சுப்பிரமணியம் எல்லோர்க்கும் உற்சாகம் ஊட்டக் கூடிய தலைவராகவிருந்ததால், நாம் வழக்குகளில் தோற்பது மிகவும் அரிது. அவர் சார்பாக நான் ஆஜரான கடைசி வழக்கு சாவகச்சேரியில் ஆலயப் பிரவேசத்துடன் தொடர்புற்றிருந்த ஓர் வழக்கு. கிணறுகளை நச்சுப்படுத்துவதற்கு உயர் சாதியினர் முயன்றனர்; ஆலய வளவிற்குள் தாழ்த்தப்பட்டவர்கள் புகு வதைத் தடுப்பதற்கு பொலிசார் மேல்சாதியினருக்கு உதவி புரிந்து கொண்டிருந்தனர்.

தாழ்த்தப்பட்டவர்கள் தங்களை ஒழுங்கமைத்துக் கொண்டு இந்தப் படுமோசமான, ஈனத்தனமான செயலைச் செய்யாது பொலிசாரைத் தடுத்தனர். அவர்கள் பொலிசாரைத் தாக்கவும் செய்தனர். பரபரப்புமிக்க வழக்காக இது இருந்ததோடு, உயர் சாதியினர் நீதிமன்றத்திற்கு வெளியே ஆர்ப்பாட்டம் செய்தனர்.

நாம் வழக்கில் வென்றோம். உண்மையான தலைவராக சுப்பிரமணியம் இருந்ததால், சாதி அரக்கன் அட்டகாசம் செய்து வந்த பகுதியாய் இருந்த போதிலும், அவர் வழக்கினை நன்கு ஆயத்தம் செய்திருந்தார்.

சுப்பிரமணியம் அரசியலை நன்கு கற்றுத் தேர்ந்தவர். அவருக் கென சொந்த அரசியல் தத்துவங்கள் இருந்தன. அவற்றை என்னோடு அடிக்கடி பரிமாறிக் கொள்வார். எம்மிடையே அர சியல் சார்ந்த ஒரு சில கருத்து வேற்றுமைகள் இருந்தபோதிலும் அது நாம் இருவர் சந்திப்பதிலும் பயனுள்ள கலந்துரையாடல் களில் பங்குபற்றுவதிலும் தடையாய் இருக்கவில்லை.

சுப்பிரமணியம் பாசமிக்க நண்பராய் இருந்தார். கொழும்பிற்கு வரும்போது என்னைச் சந்திக்கத் தவறமாட்டார். அவரது மகனைச் சந்திக்கும் வாய்ப்பு எனக்கு ஏற்பட்டது.

குடும்ப நண்பராகவும், நிதானமிக்க அரசியல்வாதியாகவும், பண்பு மிக்க மனிதராகவும் அவர் விளங்கினார்.

அவருடைய மறைவால் ஏற்பட்டுள்ள துயரத்தை அவரது குடும்பத்தினரோடும் நண்பர்களோடும் பகிர்ந்து கொள்கிறேன்.

சுப்பிரமணியம் ஓர் தேசபக்தன், மனிதாபிமாணி, மக்களை நேசித்தவர் ஒடுக்கப்பட்ட மக்களுக்காக அவர் தனது வாழ்நாள் பூராவும் அடக்கியொடுக்கியவர்களுக்கு எதிராக அயராது போராடினார்.

வீரத்துடன் அவர் போராடினார். அவரது வாழ்வு மரணத்தை ஜெயித்துவிட்டது.

கொழும்பு

T. W. ராஜரட்ணம்

---

இடர்களுக்கு எத்தனையோ
இவைகளுக்கு தோற்கோம்
இதயத்தில் உறுதி உண்டு
இடர்பாட்டை வெல்லுதற்கு!
இடர்பாட்டை வெல்லுதற்கு
இதயமது இருக்கையிலே
இரும்பென்ன உருக்கென்ன
எல்லாமே தலைவணங்கும்!



1966ஒக்ரோபர் 21 எழுச்சியின் சுன்னுக ஊர்வலத்தில் தோழர் மணியம்

Comrade Maniam in the Chunnakam process'on protesting casteism (21st October 1966)




புத்தூரில் நடைபெற்ற ஒக்ரோபர்எழுச்சியின் 20வது வருட நினைவு தினக் கூட்டத்தில்

Maniam at the commemoration meeting to mark the 20th anniversary of the October 21st upsurge, held at Puttur

# முற்போக்காளர்களுக்கு பேரிழப்பாகும்

காலஞ்சென்ற கே. ஏ. சுப்பிரமணியம் அவர்கள் இலங்கை கம்யூனிஸ்ட் கட்சியின் சுன்னாகம் கிளைக்காரியாலயத்தில் 1956 ஆம் ஆண்டு தொடக்கம் பொறுப்பு வாய்ந்த முழுநேர ஊழியனாக இருந்த காலம் முதல் அவரை நாம் நன்கு அறிவோம். அவர் 1957 ஆம் ஆண்டு சோவியத் நாட்டில் இருந்து இலங்கை வந்த கலாச்சார தூதுக் குழுவின் சுன்னாகம் வருகைக்கு முக்கிய காரணகர்த்தாவாக திகழ்ந்தார். அதைத் தொடர்ந்து கம்யூனிஸ்ட் கட்சியின் வளர்ச்சியில் பெரும் பங்காற்றினார். 1966 ஆம் ஆண்டு அக்டோபர் மாதம் 21 ஆம் திகதி சாதி அடக்கு முறைகளுக்கு எதிராக சுன்னாகத்திலிருந்து ஓர் மாபெரும் ஆர்ப்பாட்ட ஊர்வலத்தை தலைமை தாங்கி நடத்தினார். நாம் அன்று தான் அவருடைய போராட்ட தன்மையையும் வீரத்தையும் நெஞ்சுறுதியையும் கண்ணுற்றோம். அதைத் தொடர்ந்து காலஞ்சென்ற S. T. N. நாகரத்தினம் அவர்களின் தலைமையிலான தீண்டாமை ஒழிப்பு வெகுஜன இயக்கத்தின் சகல உரிமைப் போராட்டங்களிலும் நேரடியான பங்களிப்பை வழங்கியது மட்டுமல்லாமல் இதய சுத்தியுடனும் உளப்பூர்வமாகவும் செயற்பட்டார். அவர் பிறப்பில் 'உயர் சமூகத்தை'' சேர்ந்த போதும் எம் மக்களின் பிரச்சனைகளை முழுமையாக உணர்ந்தவர். அவர் மறைந்த S. T. N. நாகரத்தினத்துடன் நெருங்கிய தொடர்பு காரணமாக எம் குடும்பத்தாருடன் அன்னாரின் குடும்பத்தாருக்கு நெருங்கிய தொடர்புகள் உள்ளது. அவரின் மறைவு அன்னாரின் குடும்பத்தினருக்கு மட்டுமல்லாமல் மனித குல விடுதலையை நேசிக்கின்ற சகல முற்போக்கு சிந்தனையாளர்களுக்கும் பேரிழப்பாகும். அன்னாரின் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபத்தைத் தெரிவித்துக் கொள்கிறோம்.

நன்றி

சுன்னாகம் S. T. N. நாகரத்தினம் குடும்பத்தினர்

# அகன்ற மானிடத்தை நேசித்தவர்

திரு. கே. ஏ. சுப்பிரமணியம் அவர்களை யாம் இழந்துவிட்டோம். ஆனால் சுப்பிரமணிய பாரதி கேட்டது போன்று,

''தேடிச் சோறு நிதந் தின்று -பல
சின்னஞ் சிறு கதைகள் பேசி- மனம்
வாடித் துன்ப மிக வுழன்று- பிறர்
வாடப் பல செயல்கள் செய்து- நரை
கூடிக் கிழப் பருவ மெய்தி- கொடுங்
கூற்றுக் கிரையெனப் பின்மாயும்- பல
வேடிக்கை மனிதரைப் போலே- நான்
வீழ்வே னென்று நினைத்தாயோ?''

என்ற ஒரு வினாவினை அவர் நிறுத்திவிட்டே சென்றுள்ளார். தனக்கென வாழாது பிறர்க்கென வாழ்ந்த திரு. சுப்பிரமணியம் தன் நாட்டையும் மக்களையும் மட்டுமின்றி அகன்ற மானிடத்தை நேசித்தவர், அதற்காகத் தன் வாழ்வை அர்ப்பணித்தவர்.

ஒடுக்கப்பட்டவர்கள், தாழ்த்தப்பட்டவர்கள், சுரண்டப்பட்டவர்களின் சுபீட்சத்திற்காக அவர் ஆற்றிய பணிகள் பல வாகும். தேசத்தில் இனவாதமும் அடக்குமுறைகளும் உயிராபத்துக்களும் மிகுந்திருந்த சூழ்நிலையிலும், தன்னிலை தளராது உயர்ந்த குறிக்கோளுடன், அஞ்சாது, வாழும் மானிடத்தின் நன்மைக்கு உகந்ததெனத் தான் கண்ட மார்க்கத்தை விண்டு காட்டியவர் அவர். அவரது திடகாத்திரமான தியாகமனப் பான்மையை எண்ணிப் பார்க்கும் போது, ''தேசாபிமானிகள் தங்கள் தேசத்துக்காக உயிரைக் கொடுப்பது குறித்தே எப்போதும் பேசுவார்கள்; உயிரை எடுப்பது குறித்து ஒரு போதும் பேசுவதில்லை'' என்ற பேட்ரண்ட் ரஸ்ஸலின் கூற்றே நினைவுக்கு வருகிறது.

அதிகாரத்துக்கும் பதவிக்கும் பிரசித்திக்கும் அரசியலைப் பலர் பிரயோகித்த ஒரு சூழ்நிலையிலும், அவற்றில் நாட்டமின்றி, சாதாரணத் தொழிலாளர், விவசாயிகள், ஏழைகளுக்கு விடிவு காண விழைந்த ஓர் அரசியலுக்குத் தன்னை அர்ப்பணித்துக் கொண்டவர் அவர். அந்த அரசியல் நெறி பலமடைய வேண்

டிக் கடுமையாக உழைத்தமையும், தொல்லைகள் நோய்களை உதாசீனஞ் செய்தமையும், ஏனையவர்களை நேசக்கரம் நீட்டி அணைத்துக் கொண்டமையும், ஏற்ற முயற்சிகளை உற்சாகப் படுத்தியமையும் திரு. சுப்பிரமணியத்தின் சிறப்புக்களாயின. மரணம் நெருங்கிவருவது பற்றிய உணர்வு தோன்றிய நிலையிலும் எடுத்த காரியங்களைச் செவ்வனே முடிக்கவேண்டு மென்ற துடிப்பே அவரிடம் மேலோங்கியது.

அன்னாரை இழந்த கலக்கம் அவரது மனைவி மக்களோடும் உறவினரோடும் அடங்குவதன்று. இழந்து கலங்கும் யாவர்க்கும் ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவித்துக் கொள்வதுடன், அவரது ஆன்மாவுக்கும் அஞ்சலி செலுத்துகின்றோம்.

பேராதனை. **பேராசிரியர் சி. தில்லைநாதன்**

---

வானும் மலையும் நிலமும் நதியும்
மரமும் இலையும் மலரும் சருகும்
பனியின் பிடியில் உருகும் மறையும்
விழிகள் தொழிலின் திறமை அழியும்
விடியும், பனியின் பிடியும் தளரும்
பள்ளத் தாக்கில் ஒதுங்கி ஒடுங்கி
மெல்ல மறையும்
கொடுமைகள் இதுபோல்
மீள்வது நிசமென மனம் தளர்ந்திடலாம்
ஒழிவது நிசமெனத் துணிவுடன் எழலாம்

நன்றி செப்பனிட்ட படிமங்கள்

# மானிடத்தை நேசித்த மணியம்

சந்தர்ப்ப வாதங்களே இக்கால அரசியலாக இருக்கும்போது கிடைத்த சந்தர்ப்பங்களை மட்டுமே நம்பியிராது. சந்தர்ப்பங்களை ஏற்படுத்தி ஒடுக்கப்பட்ட மக்களின் விடுதலைக்காக தனது வாழ் நாள் முழுவதையும் அர்ப்பணித்த தோழர் கே. ஏ. ப்பிரமணியம் மறந்துவிட்டார்.

குரல் கொடுத்துவிட்டு குகைகளுக்குள் மறைந்துவிடாது, போராட்டங்களின் போது முன்வரிசைக்கு வந்து தன் குரலொலியை முன்னெடுத்து முன்னே சென்றவர் தோழர் மணியம். போராட்டங்களுக்கெல்லாம் வழிகாட்டியாக மட்டும் நிற்காது வழித்துணையாகவும் நின்றவர். 1960 களில் ஏற்பட்ட, சாதி அடக்குமுறைகளுக்கெதிரான குடாநாடு தழுவிய போராட்டத்தின் போது சித்தாந்த ரீதியாக மக்களின் சிந்தனைகளைத் தெளிவுபடுத்தியும், போராட்ட ரீதியான உத்திகளை விரிவுபடுத்தியும் மக்களை வழிநடத்தி உரிமைகளை வென்றெடுத்துத்தர காலானர்.

இராசகாரிய முறையின் எச்சசொச்சங்களை வேரோடு பெயர்க்க தன் வாழ்நாள் முழுவதும் போராடிய தோழர் மணியம் சமதர்மவாதத்தைச் சந்தர்ப்பவாதத்திற்காகக் கொச்சைப்படுத்த வில்லை. அவர், சிந்தனை, வாக்கு, செயல் மூன்றும் ஆத்ம சுத்தியோடு ஒடுக்கப்பட்ட மக்களின் விடுதலையை நோக்கி ஊடறுத்துப் பாய்ந்தது.

மானுடத்தை மதித்த தோழர் மணியம் மானுடத்தின் எதிரிகளையும் நன்கறிந்திருந்தார். தான் நோய்வாய்ப்பட்டு அவஸ்தைப்பட்டபோதும், தன் நோயைக் குணப்படுத்த முயற்சிக்காது, மீளா நோயில் அவஸ்தைப்பட்டுக் கொண்டிருக்கும் எமது சமூகத்தின் நோய்களைக் குணப்படுத்தவே சிந்தித்தார், செயற்பட்டார்.

மரணப்படுக்கையில் இருந்தபோது மயக்கம் தெளிந்து கண் விழித்தபோதெல்லாம், அரசியல் நிலைபற்றி மிக அக்கறையுடன் தோழர்களைக் கேட்டறிவார். மாறிக் கொண்டிருந்த தடுமாறிக் கொண்டிருந்த அரசியல் பாமரமக்களைப் பாதித்துக்கொண்டிருக்கும் நிலை கண்டு நொந்துபோயிந்தார். அரசியலுக்காக

மக்களை உரமாக்கும் அரசியல் வாதிகள் வாழ்ந்த காலத்தில் மக்களுக்காக அரசியல் நடத்தி தன்னையும் தன் குடும்பத்தையும் உரமாக்கிய தோழர் மணியம் உறங்கிவிட்டார்.

சத்தியமனையில் எரிந்து கொண்டிருந்த தியாகச் சுடர் அணைந்தது, மானுடத்தை நேசிக்கும் மக்களுக்கு ஒரு பேரிழப்பாகும். அன்னாருடைய குடும்பத்திற்கு ஏற்பட்ட இழப்பை விட எமது சமூகத்திற்கே அவர் மறைவு பேரிழப்பாகும்.

தோழர் மணியத்தின் சேவைகளுக்கு இறுதிவரை உறுதுணையாக நின்ற அவர் மனைவி, பிள்ளைகள் குடும்பத்தார் அனைவருக்கும் எமது அனுதாபங்களைத் தெரிவித்துக் கொள்கின்றேன்.

தோழர் மணியம் வழிநடந்த பாதை வெறிச்சோடிக் கிடக்கின்றது. அதை யாரும் நிரப்ப முடியாது.

வேதனைகளைச் சுமந்து கொண்டு.....

திருகோணமலை — சி. பற்குணம்

---

......... ......... .........

கட்டப்பாரை எடுப்போம்
மானுடரைப் பிரிக்கின்ற மதிற்சுவர்கள் அத்தனையும்
தாக்கித் தகர்த் தெறிவோம்
மாநகரை விடுவிப்போம்
மானிடத்தை விடுவிப்போம்

நன்றி தாயகம் ஒக் 1986

# திரு. கே. ஏ. சுப்பிரமணியம் இரங்கற் செய்தி

வடமாநிலத்தில் கொல்லன்கலட்டியைப் பிறப்பிடமாகக் கொண்டு தனது கல்வியை இந்நாட்டின் பல்வேறு பாடசாலைகளில் பயின்று பொதுவுடமை வாதியாக இலங்கை கம்யூனிஸ்ட் கட்சிக்குப் புகழ் சேர்த்த உத்தமர் கே. ஏ. சுப்பிரமணியம் அவர்கள் இறைபதம் அடைந்த 31ம் நாளான இந் நினைவு தினத்தில் இவரின் செயல் திறன் பற்றிச் சில வார்த்தைகள் இவ் நினைவு அஞ்சலி மலருக்குச் சமர்ப்பிக்கக் கடமைப் பட்டவனுக இருக்கின்றேன்.

பொதுடமை வாதியும், கொள்கையின் உறைவிடமாக அமரர் கே. ஏ. சுப்பிரமணியம் அவர்களின் மறைவுச் செய்தி சென்ற 27-11-89 இல் கேள்வியுற்று நானும் எமது கட்சியைச் சாந்தோரும் மிக்க அதிர்ச்சி அடைந்தோம். இவர் தனது தொழிலை ஆரம்பிக்கும் பொழுதே 1948 இல் ஓர் மார்க்சீய வாதியாக ஆரம்பித்தார். அக்காலத்தில் இவர் சீமேந்துக் கூட்டுத்தாபனத்தில் தொழிலாளர்களின் நலன்களில் மிக்க அக்கறை செலுத்தினுர். இதன் விளைவாக இவரது தொழிலே பறிபோனது. தனைப்போல் மற்றவரையும் மதிக்கும் சுபாவமுள்ள அமரர் கே. ஏ. சுப்பிரமணியம் தொழிலாளர் மத்தியிலும் பொதுமக்கள் மத்தியிலும் பெரும் வரவேற்புப் பெற்றவர். தொழிற் சங்கங்களின் போராட்டங்கள், ஊர்வலங்கள் பலவற்றிலும் தலைமை தாங்கியமையால் அரச படையினரின் அச்சுறுத்தல், தாக்குதல்கள் இவருக்கு பெரும் பாதிப்பை ஏற்படுத்தியது. விரைவில் நாம் இவரை இழப்பதற்கும் சோகத்தில் வாடுவதற்கும் இதுவே மூலகாரணம் எனக் கூறலாம். இவர் தான் சார்ந்த கட்சியின் சேவைகளிலும், தொழிலாளர்களின் நலன்களிலும் சாதி சமய இன வேறுபாடின்றி அயராது உழைத்ததன் பயனுக இலங்கைக் கம்யூனிஸ்ட் கட்சியின்(இடது) பெரும்பதவியான பொதுச் செயலாளர் பதவிக்கு நியமிக்கப்பட்டார். எல்லோருடனும் நன்ருகப் பழகும் இவர் தான் கொண்ட கொள்கையையும் தன் கருத்துக்களையும் மக்கள் முன் மிக ஆழமாக படிய வைக்கும் கனப்பக்குவம் படைத்தவராக திகழ்ந்தார். தான் சார்ந்த

கட்சியின் வளர்ச்சியிலும் அதன் செயற்பாடுகளிலும் வெற்றி காண்பதே இவரிடம் அமைந்த இயல்பான குணங்களாகும். மக்களின் தோழனுகவும், சேவகனுகவும் செயல்பட்ட அமரர் கே. ஏ. சுப்பிரமணியம் அவர்களின் இழப்பு தமிழ் உலகிற்கு மட்டுமின்றி நாடளாவிய பேரிழப்பாகும்.

திரு. சுப்பிரமணியம் அவர்கள் சாதி, சமய வேறுபாடின்றி மட்டுமல்லமால், இன, பிரதேச வேறுபாடு கட்டாமலும் உழைத்தார் என்பதற்கு 1988 ஆம் ஆண்டு ஜனதிபதித் தேர்தலில் அவர் கொண்ட நிலைப்பாடு ஒரு நல்ல உதாரணம் ஆகும். திருமதி பண்டாரநாயகா 1988 ஆம் ஆண்டு ஜனதிபதித் தேர்தலில் முன்வைத்த இனப்பிரச்சினைத் தீர்வுக்கான திட்டத்தை ஏற்று வட மாகாணத்தில் பகிரங்கக் கூட்டங்கள் நடாத்த முடியாத நிலைமை இருந்துங்கூட, பண்டத்தரிப்பில் ஒரு பெரும் பிரசாரக் கூட்டத்தை அவர் தனக்கும் தனது குடும்பத்துக்கும் உயிருக்கு ஆபத்து வரக்கூடிய கட்டத்திலும் கூட அஞ்சமால், ஒழுங்கு செய்து, தலைமையும் தாங்கினுர். இந்த ஒரு உதாரணமே அவரது கொள்கைப் பற்றையும் அஞ்சாமையும் தெளிவாகக் காட்டுகின்றது. அவரைப் போன்ற ஒரு வீர புருஷரைத் தமிழ் மக்கள் இந்தக்கால கட்டத்தில் இழந்தது மிகவும் சோகமான ஒரு விடயம்.

இவரின் குடும்பத்தினரின் துயரில் பங்குகொண்டு அன்னுரின் ஆத்ம சாந்திக்குப் பிரார்த்திப்போம்.

ஜி. ஜி. பொன்னம்பலம்
பொதுச் செயலாளர்.
அ. இ. த. காங்கிரஸ்

# மணியம்
# மனித நேயத்தின் ஒரு சின்னம்!

மணியம்

விவசாய, தொழிலாளர் விடிவுக்காக வாழ் நாள் முழுவதும் போராடியவர்.

அடக்கி ஒடுக்கப்பட்ட மக்களின் விடுதலைக்காக வாழ்நாள் முழுவதும் கிராமம் கிராமமாகச் சென்று போராடி வெற்றி பல கண்டவர்.

இத்தனைக்கும் மேலாக கொண்ட கொள்கையிலிருந்து சிறிதும் பிறழாமல் வாழ்ந்தவர். ஆனாலும் மாறுபட்ட கொள்கையுடையவர்களுடனும் அன்புடன் பழகிய உயர்ந்த உள்ளம் கொண்டவர்.

விவசாய, தொழிலாளர் போராட்டங்கள் பலவற்றை எப்படி மணியம் வெற்றிகரமாக - அதிலும் அரசாங்க அடக்குமுறை நடவடிக்கைகளுக்கும் இடது சாரி இயக்கங்களுக்கிடையிலிருந்த போட்டி பொறாமைகளுக்கும் மத்தியிலும் நடத்தினார் என்பதற்கு ஒரு சம்பவம் இது.

ஒரு சம்பவம்:-

ஆண்டு சரியாக நினைவில்லை. யாழ்ப்பாணத்தில் மேதின ஊர்வலம் நடத்துவதற்கு அரசு தடை விதித்திருந்தது.

கே. ஏ. சுப்பிரமணியத்தைப் பிரதேசப் பொறுப்பாளராகக் கொண்டிருந்த இலங்கைக் கம்யூனிஸ்ட் கட்சி (சீனச் சார்பு) யும் தொழிற்சங்கமும் யாழ்ப்பாணத்தில் மேதின ஆர்ப்பாட்ட ஊர்வலம் நடைபெறுமென்று அறிவித்திருந்தது.

பொலிசார் மணியத்தைத் தேடி வலை விரித்தார்கள். மணியத்தைக் காணவில்லை.

மேதினத்தன்று ஊர்வலம் எங்கிருந்து தொடங்கும்; எந்தப் பகுதியில் ஊர்வலம் நடைபெறுமென்பதை ஆராய்ந்து அறிந்து கொள்வதில் பொலிசார் பெரும் பிரயத்தனங்கள் செய்தனர்.

அச்சமயம் வடபகுதிப் பொலிஸ் அதிபராக இருந்தவர் பத்திரிகையாளர்களுடனும். பொதுமக்களுடனும் நல்லுறவை வளர்த்துக் கொண்டு பெருமதிப்புடன் பொலிஸ் நிர்வாகத்தை நடத்திய திரு. ஆர் சுந்தரலிங்கம்.

பொலிஸ் அதிபர் சுந்தரலிங்கம் என்னுடன் நட்புறவுடன் பழகியவர். வடபகுதியில் குற்றச் செயல்களைத் தடுப்பதற்குப் பத்திரிகைகள் பெரிதும் உதவ முடியுமென்பது அவரது நம்பிக்கை. நானும் இதே கருத்தைக் கொண்டிருந்தேன். 'ஈழநாடு' பத்திரிகை மூலம் நான் இதற்கு உதவி செய்தேன்.

மணியத்துக்கும் எனக்கும் நெருங்கிய நட்பு இருந்ததையும் பொலிஸ் அதிபர் சுந்தரலிங்கம் அறிந்திருந்தார்.

குறிப்பிட்ட மே தினத்தன்று திரு. சுந்தரலிங்கம் காலையிலிருந்து பிற்பகல் நாலரை மணிவரை அடிக்கடி தொலைபேசியில் தொடர்பு கொண்டு ''மணியத்தின் ஊர்வலம்'' பற்றி விசாரித்துக் கொண்டிருந்தார்.

மணியத்தை இரண்டு தினங்களாகச் சந்திக்கவில்லை. ஊர்வலம்பற்றி எனக்குத் தெரியாது என்று நான் காலையிலேயே பதிலளித்திருந்தேன்.

பொலிஸ் அதிபர் என்னை நம்பத் தயாராக இல்லை. மீண்டும் அடிக்கடி தொலைபேசியில் விசாரித்தபடியே இருந்தார்.

இதேசமயம் அன்று நண்பகலுக்குப் பின் மணியம் எங்கிருந்தோ என்னுடன் தொலைபேசியில் தொடர்பு கொண்டார்.

எங்கிருந்து பேசுகிறீர்கள் என்பதற்கு கிட்டத்தான் என்றார். ஊர்வலம் எப்போது என்று கேட்டதற்கு ''மாலையில் நடக்கும்'' என்றார் ''எங்கேயிருந்து ஆரம்பமாகும்?'' என்ற கேள்விக்கு பின்னர் சொல்கிறேன் என்று பேச்சை வெட்டி விட்டார்.

மீண்டும் நான்கு மணிக்குத் தொடர்பு கொண்ட மணியம் ''எஸ். பி. விசாரித்தாரா? என்று கேட்டார் ''ஆம்'' என்றேன் பின்னர் தொடர்பு கொள்வதாகச் சொல்லிப் பேச்சை நிறுத்தி விட்டார்

மணியமும் என்னை இவ் விஷயத்தில் நம்பத் தயாராக இல்லை

என்னை மட்டுமல்ல; எவரையுமே போராட்டங்கள் சம்பந்தப்பட்ட இரகசியங்களில் அவர் நம்பத் தயாராக இருந்ததில்லை.

மாலை ஐந்து மணிக்கு ஐந்து நிமிஷமிருக்கையில் ''வின்சர் தியேட்டர் சந்திக்கு வாருங்கள்; அல்லது ஆட்களை அனுப்புங்கள்'' என்று தொலைபேசியில் பேசிய மணியம் சொல்லிவிட்டுப் போனை வைத்துவிட்டார்.

ராஜா தியேட்டரிலிருந்து படம் பார்த்துக் கொண்டிருந்த சனக் கூட்டம் புற்றீசல் போல வெளிவந்து யாழ்நகரின் பிரதான வீதிகளில் முன்னே செங்கொடி பிடித்துச் சென்ற மணியத்தின் பின்னே சுலோகங்களைக் கோஷித்துக் கொண்டு ஊர்வலம் சென்றது.

பொலிசார் திக்குமுக்காடிப் போனார்கள்!

இது மணியத்துக்கே உரித்தான போராட்டத் தந்திரம் இலட்சிய வெறி!

மாவிட்டபுரம் கந்தசாமி கோயில் குருஷேத்திரம் போல் காட்சியளித்த நேரம், ஆலயப் பிரவேசப் போராட்டம் இருதரப்பிலும் எல்லை கடந்து போய்விடுமோ என்ற நெருக்கடி!

'ஈழநாடு' பத்திரிகை மட்டுமே யாழ்ப்பாணத்திலிருந்து வெளிவந்து கொண்டிருந்த ஒரே ஒரு தினசரி.

நடு நிலை தவறாது நாம் மிகக் கவனமாகச் செய்திகளை வெளியிட்டு வந்தோம்.

இருதரப்பும் எம்மீது கண்டனம் தெரிவித்து வந்தன.

ஒரு நாள் இரவு கைக் குண்டு ஒன்று 'ஈழநாடு' அலுவலகத்தின்மேல் மாடி மீது வீசப்பட்டது. சத்தம் சிறிது; சேதம் எதுவுமில்லை!

சில தினங்கள் கழித்து மணியத்தைச் சந்தித்தேன். மாவிட்டபுரம் போராட்டம் பற்றிப் பேசிக் கொண்டிருந்தோம்.

உங்களுடைய ஆட்கள்தானே 'ஈழநாடு' அலுவலகம் மீது குண்டு வீசியது என்று கேட்டேன். ''சத்தியமாக - கோபு நாங்கள் அந்த வேலையைச் செய்யவில்லை; உங்களுக்கு அப்படி செய்ய மாட்டோம்.

மணியத்தின் மனித நேயம் சொன்னபதில் இது.

இன்னொரு சம்பவம். ஆண்டு, மாதம் எதுவும் நினைவில்லை. மணியத்தைப் பொலிசார் தேடித் திரிகிறார்கள். மணியம் தலை மறைவாகி விட்டதாகச் செய்தி கிடைத்தது.

இரண்டு தினங்கள் கழித்து எனக்கு ஒரு கடிதம் கிடைத்தது. ''இன்ன இடத்தில் வந்தால் என்னைச் சந்திக்கலாம் சந்திக்க விரும்புகிறேன்''

மணியத்தின் கடிதம் இது.

யாரிடமும் சொல்லவில்லை. குறிப்பிட்ட இடத்துக்குச் சென்றேன். மணியம் தனிமையில் கைகளைப் பின்புறம் கட்டிய படி ஆழ்ந்த யோசனையில் அங்கு மிங்கும் நடந்து கொண்டிருந்தார்.

இருவரும் அரைமணி நேரத்துக்குமேல் பேசிக்கொண்டிருந்தோம். அவருக்கு நல்ல உணவு இல்லை. இரண்டு மூன்று தினங்கள் அவருக்கு வீட்டிலிருந்தே உணவு கொண்டுபோய்க் கொடுத்துவந்தேன்.

பலவருடங்களுக்குப் பிறகு 1987 ஆம் ஆண்டு ஒக்ரோபர் மாதம் நான் பின்னர் ஆசிரியராகக் கடமையாற்றிவந்த ஈழமுரசு பத்திரிகை இந்திய அமைதிப்படை அச்சுயந்திரத்தைக் குண்டு வைத்துத் தகர்த்ததைத் தொடர்ந்து ஈழமுரசு சில தினங்கள் தொல்புரத்திலும் சங்கானையிலிருந்தும் வெளியிடப் பெற்றது.

தொல்புரத்திலிருந்து ஈழமுரசு வெளிவந்தசமயம் நண்பர் ஈ. ஆர். திருச்செல்வம் மூலம் மணியம் தனது வீட்டுக்கு வருமாறு தகவல் அனுப்பியிருந்தார்.

வீட்டுக்குச் சென்றதும் என்னைத் தனது வீட்டிலேயே தங்கியிருக்குமாறு மணியம் கேட்டார். நானோ புலிகளின் பத்திரிகைக்கு ஆசிரியர் நீங்களோ சீனச் சார்ப்புக் கம்யூனிஸ்ட் கட்சிக்காரர் இருவரும் ஒன்ருக இந்தியா இராணுவத்திடம் அகப்பட்டால் எப்படி இருக்கும்? என்றேன். மனம் விட்டுச் சிரித்தார்.

''அந்தநேரம் தலைமறைவாக இருந்தபோது நீங்கள் அவருக்கு உணவு கொடுத்தீர்கள். இப்பொழுது உங்களுக்கு உணவு கொடுத்துக் கவனிக்க வேண்டும்'' என்று அவர் விடாப்பிடியாக நிக்கிருர் என்று திருமதி மணியம் சொன்னுர்.

மணியத்தின் நன்றியே மறவாத மனிதப் பண்பு இது

ஈழமுரசு பத்திரிகையில் ஈழவிடுதலைப் போராட்டம்' சம்பந்தமாக மணியத்தின் கம்யூனிஸ்ட் கட்சியின் கொள்கையையும் கண்டித்து ஒரு விமார்சனம் செய்திருந்தேன். இதற்கு அவரும் தங்கள் பத்திரிகையில் பதிலளித்துமிருந்தார்.

தொல்புரத்தில் அவரைச் சந்தித்துப் பேசிக் கொண்டிருந்தபோது இந்தக் கட்டுரைகள் பற்றிய பேச்சும் வந்தது. கோபுவிடம், படித்த பத்திரிகைத் தமிழிலேயே நான் அவருக்குப் பதிலும் சொல்லவேண்டியிருந்தது. ஆனல் எங்கள் நட்பில் எதுவும் இடையூருக வரமுடியாது, வளரவும் முடியாது என்ருர் மணியம் உறுதியானகுரலில்.

மணியம் நட்புக்கு வகுத்த இலக்கணம் இது.

மணியம் அடக்கி ஒடுக்கப்பட்டவர்களுக்காக கிராமங்களுக்குள் நுழைந்தார். விவசாய தொழிலாளர் போராட்டங்களுக்காகப் பொலிஸ் அடக்கு முறைகளை எதிர்த்துத் தடியடியும் பட்டார்.

போராட்ட வீரர் என்று பெயரும் பெற்றார்.

இத்தனைக்கும் மேலாக மணியத்தின் மனிதநேயத்தை, மனிதப் பண்புகளை, மனிதாபிமானத்தையே நான் காண்கிறேன்.

மணியம்,- எங்களில் பலருக்கும் பீக்கிங் மணியம்- என்பதும் எங்கள் நினைவில் வாழ்வார். கொண்ட கொள்கையை மாற்றிக் கொள்ளாத ஓர் இலட்சியவாதி அவர் நாமம் வாழ்க.

யாழ்ப்பாணம் எஸ். எம்.கோபாலரத்தினம்

வர்க்க சமுதாயத்தில் வர்க்க அரசியலே அடிப்படையானது என்பதை உணராது அரசியல் இயக்கங்களிற் தனிமனிதர்களது பங்களிப்பை மிகைப்படுத்தும் வழக்கமும் இதற்கு உடந்தையாகிறது. தனிமனிதர்கள் வர்க்கங்களதும், இயக்கங்களதும், அவற்றின் போராட்டங்களதும் பிரதிநிதிகளாகவே செயற்படுகிறார்கள். மாற்றங்கள் அடிப்படையில் சமுதாய வரலாற்றுச் சூழ்நிலையின் விளைவாக ஏற்படுகின்றனவேயன்றித் தனிமனிதர்களது விருப்பங்களின் விளைவாக வல்ல, மனிதர்கள், தனித்தனியே, வரலாற்றின் கையில் உள்ள சிறு கருவிகளேயன்றி அதன் படைப்பாளிகள் அல்ல. வர்க்க சமுதாயத்தின் வரலாற்றை மனித சமூக வர்க்கங்களே நிகழ்த்த விருத்தி செய்கின்றன.

நன்றி: கனிவுமில்லை, கருணையும் இல்லை



1963ல் சீன மக்கள் குடியரசுக்கு சென்றிருந்த வேளை சீன உதவிப் பிரதமராக இருந்த தோழர் சென் யீ அவர்களுடன்

Maniam seen with Chinese Vice Premier Comrade Chen Yi when he visited to the people's Republic of China



1979ல் சீனமக்கள் குடியரசு விஜயத்தின்போது சீன அரசுத் தலைவர்களில் ஒருவரான ஜீ பெங் பெய் அவர்களுடன் சந்திப்பு

Maniam calls on one of the China's Head of state Ji. Peng Fei during his visit to the people's Republic of China in 1979.

# ஊன் உறக்கம் பாராத போராளி

அன்புத் தோழர் கே. ஏ. சுப்பிரமணித்தை அவர் கம்யூனிஸ்ட் கட்சியுடன் இணைந்த இளம் பராயம் முதல் நன்கறிவேன். மிகவும் துடிப்பான உறுதி மிக்க கம்யூனிஸ்ட் இளைஞனாக மணியம் வேலை செய்து வந்ததை வயது முதிர்ந்து ஞாபக மறதி வரும் இன்றைய நாளிலும் நினைவு படுத்திப் பார்க்கின்றேன்.

அவர் ஓர் தன்னலமற்ற புரட்சி வீரர். கட்சிக்காக அடக்கி ஒடுக்கப்பட்ட மக்களுக்காக தொழிலாளர் விவசாயிகளின் விடிவுக்காக இடம்பெற்ற சகல போராட்டங்களிலும் முன்னின்று போராடியவர் அதனால் அடி உதை பட்டு இரத்தக் காயங்களுக்கு ஆளானவர். அரச படைகளின் தேடுதலுக்கு ஆளாகி தலை மறைவு வாழ்க்கையை மக்கள் மத்தியிலே மேற் கொண்டவர் தனக்காக வாழாது மக்களுக்காக வாழ்ந்தவர் ஊண் உறக்கம் ஓய்வின்றி நேர்மையான அரசியல் வாழ்வில் ஈடுபட்டதால் கடும் நோய்க்கு ஆளானார். இறுதியில் ஐம்பத்தெட்டு வயதில் நம்மை விட்டுப் பிரிய நேர்ந்தது நாம் எல்லோருக்கும் பெரும் இழப்பே ஆகும். அவரைப் பொதுச் செயாலாளராகக் கொண்ட கட்சிக்கும் அவரது குடும்பத்திற்கும் எனது ஆழ்ந்த அனுதாபங்கள்.

காங்கேசன்துறை

**டாக்டர் சு. வே. சீனிவாசகம்**

# அடிநிலை மக்களுக்குத் தன்னை அர்ப்பணித்தவர்

நான் கம்யூனிஸ்ட் கட்சியின் அங்கத்தவனல்ல, எனினும் இலங்கை கம்யூனிஸ்ட் கட்சியின் (இடது) பொதுச் செயலாளர் தோழர் கே. ஏ. சுப்பிரமணியம் அவர்களிலே எனக்கு நல்ல ஈடுபாடு இருந்தது. யாழ்ப்பாணத்துத் தாழ்த்தப்பட்ட மக்களுக்கு இழைக்கப்பட்ட அநீதிகளுக்கெதிராகப் பல்வேறு வழிகளிலே போராட்டம் நடத்தித் தம்முடைய மானிடநேயத்தினையும் தன்னலமற்ற பெருங்குணத்தினையும் மற்றவர்களும் உணரவைத்தவர் தோழர் சுப்பிரமணியம் அவர்கள். இவர் போன்றவர்களுடைய போராட்டங்களின் விளைவினை நாம் கண்கூடாகக் காண முடிந்தது, சாதி அடக்குமுறை தகர்க்கப்பட்டது, "எச்சாமம் வந்து எதிரி நுளைந்தாலும் நிற்சாமக் கண்கள் நெருப்பெறிந்து நீறுக்கும்" என்று சுபத்திரன் போன்ற கவிஞர்கள் என்று நிற்சாமம் முதலான இடங்களிலே தோழர் சுப்பிரமணியம் போன்றவர்கள் நடத்திய போராட்டத்தின் வீறினை நன்கு பாடினர்.

எழுபதுகளிலேதான் தோழர் சுப்பிரமணியம் அவர்களை நான் முதன்முதலிற் சந்தித்தேன். உயர்ந்த மனிதர், வெள்ளைச் சேட்டும் வெள்ளை வேட்டியும் உடுத்திருப்பார். எப்பொழுதுமே ஒரு மலர்ந்த புன்னகை இருக்கும். அதிகம் பேச மாட்டார். ஆனால் மற்றவர்கள் இவர்மீது வைத்திருந்த மதிப்பினையும் மரியாதையினையும் உடனடியாக என்னால் அவதானிக்க முடிந்தது எனக்கும் என்னையறியாமல் ஒரு மதிப்பும் பிறந்தது. அவரைப் பற்றிச் சிலரிடம் விசாரித்து அறிந்து கொண்டேன். பின்னர் பலகாலம் அவரை நான் சந்திக்கவில்லை எனினும் என் மனத்திலே பதிந்துவிட்ட சிலருள் அவரும் ஒருவராவர். அவருடைய மரணச் செய்தியைப் பேப்பரிலே பார்த்தபோது ஏதோ இனந்தெரியாத துக்கம் மனத்தைக் கவ்வியது. மனம் பழைய நினைவுகளை ஒரு தடவை மீட்டுக் கொண்டது. ஏன் இம்மனிதரை என் மனநினைவு வைத்துள்ளது என்றால், இவர் அடிநிலை மக்களுக்காகத் தன்னை அர்ப்பணித்துத் தொண்டாற்றிய காரணமென்றே கூறலாம். அதே வேளையில் தன்னைப் பிரமுகராக்

கிக் கொள்ளாமல் சாதாரண மனித நேயமுள்ள ஒருவராக இருந்ததும் இன்னொரு காரணமாகலாம்.

இத்தகைய ஒரு மக்கள் தோழருக்கு நினைவஞ்சலிச் செய்தியொன்றினை எழுதுவதிலே நான் மிகவும் பெருமைப்படுகிறேன். தொண்டு, தோழமை, போராட்டம், இயக்க விசுவாசம் என்பனவற்றை யெல்லாம் தன்னுள் அடக்கிய அப்பெருமகனுக்கு என்னுடைய அஞ்சலியைச் செலுத்துகிறேன்,

யாழ்ப்பாணம் **பேராசிரியர் அ. சண்முகதாஸ்**

---

அலையின் மோதல்
மணியின் நாதம்
புதியபூமி விடுக்கும் அழைப்பு
தாவி ஒலித்து வரவழைக்கிறது
முன்னே செல்வீர் முன்னுற விரைவீர்
மேலும் முன்னே சென்றிடத் திரள்வீர்......
..............................
பூமியின் அமைப்பைப் புதிதாய்ப் புனைவோம்
புதுவரலாறும் நாமே படைப்போம்
முன்னேக்கிய நம் பெரும்படை நடப்பை
மாலையும் வனமும் மறித்திட மாட்டா
நான்கு திசையிலும் நமது சக்திகள்
ராஜாளிகள் போல் சிம்மங்கள் போல்
கள்வர் கயவர் கோட்டைகள் தகர்க்கும்
மக்கள் எதிரிகள் மாய்வதும் உறுதி
முன்னே பாய்வீர், முன்னுற விரைவீர்
புதிய பூமியின் வரவை உரைப்பீர்
மணி ஒலி இசையும்
புதிய பூமியின் முரசின் முழக்கமும்
எல்லாச் செவிகட்கும் எட்ட எழுப்புக!

நன்றி; புதியபூமி (1985)

# இன ஒடுக்கலுக்கு எதிராகக் குரல் கொடுத்தவர்

தோழர் சுப்பிரமணியத்தின் மறைவு தொழிலாளி வர்க்கத்துக்கும், இடதுசாரி இயக்கத்திற்கும் ஒரு பேரிழப்பாகும். அடக்கப்பட்ட, ஒடுக்கப்பட்ட மக்களின் விடுதலைக்காக அவர் ஆற்றிய பணி மகத்தானது. சிறப்பாக, வட இலங்கையில் புரையோடிக்கொண்டிருக்கும் சாதி வெறிக்கெதிராக நடைபெற்ற போராட்டங்களில் அவர் முன்னோடியாகத் திகழ்ந்ததை எவரும் மறக்க முடியாது.

மனிதனை மனிதன் சுரண்ட முடியாத ஒரு சமுதாயத்தை உருவாக்குவதற்குப் புரட்சிதான் ஒரே வழி என்ற கொள்கையில் அசைக்க முடியாத நம்பிக்கை கொண்டவர் தோழர் மணியம் அவர்கள். வெறும் நம்பிக்கை மட்டுமல்ல அந்த இலட்சியத்தை நோக்கித் தன் பயணத்தைத் தொடர்ந்தவர். அந்த இலட்சியப் பயணத்தில் அவர் சந்தித்த சோதனைகள், வேதனைகள் யாவற்றையும் துச்சமென மதித்து தன் பணியைத் தொடர்ந்தவர்.

இன ஒடுக்கலுக்கு எதிராகக் குரல் கொடுத்தவர் தோழர் மணியம் அவர்கள். அவரைப் பொதுச் செயலாளராகக்கொண்ட இடது கம்யூனிஸ்ட் கட்சி சுநிர்ணய உரிமையின் அடிப்படையில் இனப்பிரச்சினைக்குத் தீர்வுகாணப்பட வேண்டுமென வலியுறுத்தி வருவது குறிப்பிடத்தக்கதாகும்.

தோழர் சுப்பிரமணியம் அவர்களும், அவரது கட்சியும் இடதுசாரி இயக்கங்களிடையே ஒற்றுமையை வலியுறுத்தியது மட்டுமன்றி அதற்கான ஆக்கபூர்வமான நடவடிக்கைகளிலும் ஈடுபட்டதும் குறிப்பிடத்தக்கதா

கும். வட பிரதேச தொழிற் சங்கக் கூட்டுக் குழுவுட னும் மற்றும் முற்போக்கு இயக்கங்களுடனும் இணைந்து 'ஐக்கிய மே தினம்' கொண்டாடியதன்மூலம் இந்த ஒற் றுமைக்கு ஒரு அத்திவாரம் இட்டதில் அவரின் பங்கு அளப்பரியதாகும். அந்த ஒற்றுமையை மென்மேலும் வளர்த்தெடுத்து சோசலிசத்துக்கான போராட்டத்தை முன்னெடுத்துச் செல்வதே தோழர் மணியத்துக்கு நாம் செய்யக்கூடிய அஞ்சலியாகும்,

அன்னாரை இழந்து தவிக்கும் அவரது மனைவி, மக் கள், உற்றார், உறவினர் ஆகியோரின் துயரத்தில் நாங் களும் பங்கு கொள்ளுகின்றோம்.

அ. சிவரத்தினம்
துணைத் தலைவர்
அ. வி. சே. ச.

கொழும்பு - 2

எதிரிக்கும் நமக்கும் இடையிலுள்ள முரண்பாடுகள், மக்கள் மத்தியிலுள்ள முரண்பாடுகள் என்ற இரண்டு வகையான முரண்பாடுகளையும் நாம் சரியாகப் புரிந்துகொள்ளவேண்டு மானால் நாம் முதலில் ''மக்கள்'' என்றால் யார், ''எதிரி'' என்றால் யார் என்பதைத் தெளிவுபடுத்திக் கொள்ள வேண்டும்

மாஓ சேதுங்

# இலட்சியவாதி
# திரு கே. ஏ. சுப்பிரமணியம்

"தோன்றிற் புகழொடு தோன்றுக அஃதிலார்
தோன்றலிற் தோன்றாமை நன்று."

என்னும் பொய்யா மொழிக் கொப்ப சிவபதம் அடைந்த திரு கே. ஏ. சுப்பிரமணியம் அவர்கள் 1931ம் ஆண்டு யாழ்ப்பாணத்தின் வடபாலுள்ள கொல்லங்கலட்டியில் நாலு சிறப்பும் நிறைந்த உத்தம குடும்பத்தில் பிறந்து வளர்ந்து கல்வி யில் "கற்க கசடறக் கற்பவை கற்றபின்
நிற்க அதற்குத் தக"

என்னும் திருக்குறளை வாழ்க்கையின் தாரக மந்திரமாகக் கொண்டு ஒன்றேகுலம் ஒருவனே தேவன்" என வாழ்ந்தார்.

பிறப்பால் உயர்வு தாழ்வு இல்லை. வசதிபடைத்தவன் விதி விலக்குச் செய்து மனித சமுதாயத்தைச் சீரழிக்கின்றான் என்று கண்டு அதற்கு எதிராகப் போர்க் கொடியுயர்த்தி பெற்றி கள் பல கண்டார்.

மண வாழ்க்கையில் புரட்சிகரமான புதிய பாதை அமைத் துத் தன் மனம் கொண்டவளை அநேக எதிர்ப்புக்களின் மத்தி யில் கலப்பு மணம் செய்து கொண்டார். சுப்பிரமணியம் வள்ளியம்மை யென்ற பெயர்ப் பொருத்தம் மட்டுமன்றிக் குணப் பொருத்தமும் பெற்று வள்ளுவனும் வாசுகியும் போல வாழ்ந்து சத்தியராசன் என்னும் வீரத்திருமகனை ஈழ நாட்டின் விடுதலைக்காகத் தந்தார். 1984 ம் ஆண்டு மார்கழி 22 ந் திகதி ஸ்ரீ லங்கா இராணுவத்தினரால் எதிர்பாராத நிலையில் சத்தியராசன் கைது செய்யப்பட்ட போது ஊரிலே, "சத்தியன் தன் கட்சியின் அந்தரங்கங்களை இராணுவத்தினருக்கு அவிழ்த்து விட்டான்" என்ற ஒரு வதந்தி பரப்பப்பட்டது. இச் செய்தி மணி யத்தாருக்குச் வெந்த புண்ணிலே வேல் நுழைந் தன்ன துன் பத்தை இருமடங்காக்கியாது. மைந்தனிலும் பார்க்க அவன் தன் கட்சியின் அந்தரங்கங்களை அம்பலப்படுத்திவிட்டானே என்று தான் மிக்க கவலையோடு இருந்தவளை அவரின் சத்திய மனைக்குத் துன்ப நிகழ்ச்சிபற்றி விசாரிக்கச் சென்ற நான் எதிர் வாதிட

டேன். ''தந்தைசெய்கை மைந்தன் செய்வது தக்கதன்ரே'' நீங்கள் சிறந்த கொள்கையை மேற்கொண்டு கொள்கைக்காக வாழ்ந்து, அதற்காகக் களம்பல கண்டு, அதற்குக்கிடைத்த பரிசுகளான அடி- உதைகளினுல் உடம்பிற்பல இரணகள்ளங்கள் கண்டு வேதனைப் படுகிறீர்களே, அவ்வண்ணமே இராசனும் இரகசியத்தை வெளிவிட மாட்டான்'' என நான் ஆறுதல் கூற குமுறல் அடங்கினுர். மைந்தனும் தந்தையைப் போலவே பயமுறுத்தல்களின் மத்தியிலும் இரகசியங்களை இம்மியளவும் வெளிவிடாது விடுதலையடைந்தார். இவ்வேதனைகள் அந்திய காலமளவும் தொடரும் நிழல் போல நின்று அவரின் உயிருக்கு உலைவைத்தது.

செல்வத்திற்கு ஒரு சத்தியமலரைப் பெற்றுச் செல்லமாக வளர்த்துத் தன் கொள்கைக்கு ஏற்ற மருகரை- ந. ரவீந்திரனைச் சத்திய மனையில் சத்தியமலர் மலர்ந்து பிரகாசிக்க இரவி என்னும் சூரியனின் உதயம்கண்டு அதன் பேருக இ. சுபாரா என்னும் பேரப்பிள்ளையையும் பெற்று மகளின் மனைமாட்சியில் மட்டற்ற மகிழ்வுற்ருர். சத்திய கீர்த்தி கல்வியிற் கலைவாணியின் பூரண காடாட்சம் பெற்று பொறியியலாளர்(எஞ்சினியர்) பட்டப் படிப்பைப் படித்துக்கொண்டே தந்தை தளர்வுற்ற நேரத்தில் தன்னுடனே கொழும்பில் கண்டியில் வைத்து வேண்டிய படி காலத்திற்கடமை செய்து, கண்ணை இமைகாப்பது போலத் தாபரித்தார். சர்வகலாசாலைப் புதுமுகப் பரீட்சையில் விசேட சித்தி பெற்றமையால் அரசாங்கத்தில் விசேடசலுகை பெற்றுக் கற்றுவருகிருர். கீர்த்தியின் கீர்த்தி வீட்டிற்கும் நாட்டிற்கும் ஏற்றமுடைத்தே. மேற்கூறிய சிறப்பெல்லாம் பெற்றுப் பெரு வாழ்வு வாழ்ந்த பெரியார் ஜீவ காருணியம் மிக்கவர். எல்லோரும் இன்புறிருக்க நினைப்பதல்லால்.

வேருென்றறியேன் பராபரமே''

என்றும் கொள்கை கொண்டு உலகோர் உள்ளத்தைக் கொள்ளை கொண்டு உயர் வாழ்வு வாழ்ந்தார். அரிச்சந்திரன் போல் சந்திரமதியை மணந்து சத்திய சீலர்களைப் பெற்றுச் சத்திய மனையில் சத்தியசீலனக வாழ்ந்து சைவம் கூறும் கருவைக் கடைசிவரை கடைப்பிடித்து

வையத்துள் வாழ்வாங்கு வாழ்ந்து வானுறையும் தெய்வத்துள் வைக்கப்பட்டார். அன்னுரின் பிரிவாற் துயருறும் அன்பு மனைவி மக்கள், உற்ருர், உறவினர் சுற்றத்தார்; அனைவரும் ஆறுதல் பெற எல்லாம் வல்ல எம்பெருமானை இறைஞ்சி அமைகின்றேன்.

சுழிபுரம் கிழக்கு

மா. மார்க்கண்டு
இளைப்பாறிய சிறைச்சாலை அதிகாரி

# மணியத்தார் எனும் மனிதாபிமானியே

உங்களுடன் -
பழகிய பற்பல நாட்களையும்
என்மனத் திரையினில் மீட்டுகின்றேன்.
நிமிர்ந்த நன்நடை
நேர் கொண்ட பார்வை
தெளிந்த நல் ஞானச் சிறப்பு - என்றும்
அகமும் முகமும்
மலர்ந்திட்ட தோற்றம்
மலைகுலைந்தாலும் நிலை குலையாத
மனத்திண்மை - அங்கு
நிலைத்திருப்பது நிதம் உண்மை!

கலையினில்
கவியினில்
இசையினில்
ஆர்வம்; அதில்
ஆற்றலும் இருந்ததை
அன்றொருநாள்:-
கொழும்பு இராமகிருஷ்ண
மிஷன் விடுதி அறையிலே
ஆலாபனை செய்து
தேனுகை மீட்டிய
இராகங்கள் கேட்டுப்
புரிந்து கொண்டோம்

உங்கள்
இல்லத்தில் அப்பப்ப
நான் வந்து கண்டவை
என்நெஞ்சத்தை இன்னமும்
ஈர்க்கின்ற நல்லவை

முற்றத்துப் பூந்தோட்டத்தில் ஓர் துளசி
தெய்வ அந்தஸ்தில் இருந்தது.
கம்யூனிஸ்ட் வீட்டில்
கடவுளாய் ஓர் செடியோ - இல்லை
காக்கை குருவி செடிகொடி சமமென்ற
ஞானத்தின் மேன் நிலையோ? . . .
ஆச்சரியமாய் நினைந்தேன்.
தெய்வ பக்தியில் திளைத்த
துணைவிக்கு அளித்திட்ட
அந்தஸ்தினால் அந்தத்
துளசிக்கும் அந்தஸ்து
என்பதைப்பின் தெளிந்தேன்-

உங்கள்
கொள்கையில் வெறுமைகள்
இருந்தது இல்லை
செய்கையில் உயிர்ப்பு
இருந்தது உண்மை
ஒடுக்குதல் அனைத்தையும்
ஒடுக்குதல் வேண்டி
ஓங்கி ஒலித்தது
உன் குரலே
பாட்டாளி மக்களை
மேல்நிலைப் படுத்த
ஒடுக்கப்பட் டோர்க்கு
உரிமைகள் கிடைக்க
புது வரலாறு படைத்திட - நீங்கள்
தளபதியாகிய நினைவுகள் வாழும்!
மானுடம் வாழப்
போராடிய வீர
காவியம் என்றும்
எம்முடன் வாழும்!

கரவெட்டி — வீ. திவ்வியராஜா

# ஒளிவிடும் விண்மீன்......!

''பிறர் ஈன நிலைகண்டு துள்ளும்'' மனப்பாங்கு எழுத்தாளர்கள் கலைஞர்களுக்கு உண்டு என்பது பாரதி கூறியது போல மக்களை நேசித்து மக்களின் விடுதலை சார்ந்த அரசியலில் ஈடுபடுவோர் கலை இலக்கியத்தால் ஈர்க்கப்படுவதும் இயல்பாகும். இவர்களில் பலர் கலை இலக்கியப் படைப்பாளிகளாகவும், நல்ல சுவைஞர்களாகவும், நல்ல விமர்சகர்களாகவும் இருந்திருக்கின்றனர். இந்த வகையில் நல்ல சுவைஞராகவும், விமர்சகராகவும் இருந்த தோழர் சுப்பிரமணியம் அவர்களின் இழப்பு அரசியலுக்கு மட்டுமல்ல கலை இலக்கியத்துறையிலும் ஓர் உற்சாகியை இழந்த உணர்வை நமக்கு அளிக்கிறது.

இவர் எமது தேசிய கலை இலக்கியப் பேரவையை உருவாக்குவதிலும், தாயகம் சஞ்சிகைக்கு ஆசிரியத் தலையங்கம் தீட்டுவதிலும் முன்னின்று உழைத்தார். விடுதலையை வேண்டி நிற்கும் மக்களுக்கு நம்பிக்கையையும் உற்சாகத்தையும் தரும் சிறுகதை, கவிதை, நாவல் கட்டுரைகளை தான் விரும்பிக் கற்று சுவைப்பதோடு மற்றவர்களையும் கற்கும்படி அவர் தூண்டுவார்; அத்துறைகளில் ஆற்றல் உள்ளவர்களைக் கண்டறிந்து ஊக்குவிப்பார். அவரது உக்குவிப்பால் பல புதிய தலை முறையினர் எழுத்துலகிற்கு அறிமுகமாகியுள்ளனர். கலை இலக்கியத் துறையினூடாக பேராசிரியர் க. கைலாசபதி, பேராசிரியர் சி. சிவசேகரம் பேராசிரியர் பி. தில்லைநாதன் இ. முருகையன் போன்ற ஈழத்தின் பல இலக்கிய முன்னோடிகளுடன் இவருக்கு இருந்துவந்த தொடர்புகளும் குறிப்பிடத்தக்கவையாகும்.

அவரது நெஞ்சத்தில் பதிந்து அடிக்கடி வெளிவரும் கங்கேரியக் கவிஞர் பெட்டோபியின் கவிதை வரிகளான

''ஒளிவிடும் விண்மீண் வருவதும் உறுதி
சூழ்ந்திடும் இருளும் அகல்வது உறுதி''

என்ற மானுடத்தின் விடுதலைக்கு கட்டியம் கூறும் நம்பிக்கை கீதத்தை நாமும் எம் நெஞ்சில் பதித்து தோழர் சுப்பிரமணியம் அவர்களுக்கு தேசிய கலை இலக்கியப் பேரவையின் சார்பில் அஞ்சலியை செலுத்துகிறோம்.

யாழ்ப்பாணம். தேசிய கலை இலக்கிப் பேரவை

# மலையகத்தை நேசித்தவர்

மனித குலத்தின் விடுதலைக்காக தனது வாழ்வையே அர்ப்பணித்த தோழர் மணியம் அவர்கள் மலையக மக்களின் பால் கொண்டிருந்த அன்பு தனித்துவமான தென்றே கூறவேண்டும்.

கடந்த நூற்றைம்பது வருடங்களுக்கு மேலாக வர்க்க சுரண்டலுக்கும் பேரினவாத அடக்கு முறைக்கும் உட்பட்டு, வாழும் மலையக மக்களின் விடுதலை, அவர்களையும் தேசிய போராட்டங்களோடு இணைத்தல் போன்றவற்றிற்கு சரியான பாதை காட்டித் தந்தவர் தோழர் மணியம் அவர்கள்.

1980 ம் ஆண்டு வாலிபர் இயக்கம் தலவாக்கொல்லையில் தனது மாநாட்டை நடத்தியபோது அதில் கலந்து கொண்டு முக்கிய உரையாற்றினர். மாநாட்டின் தயாரிப்புக் கூட்டங்களை வாலிப இயக்கம் மலையகத்தின் பல்வேறு பாகங்களிலும் நடத்தியபோது அப்பகுதிகளுக்கெல்லாம் சென்று தோட்டத் தொழிலாளர்களோடு உறவாடி, உரமிட்டவர் தோழர் மணியம். பிரச்சினைகளை சுட்டிக் காட்டி மக்களின் அடிப்படை ஜீவாதார உரிமைகளை வாலிபர் இயக்கம் முன் வைத்தபோது அதற்கான சரியான ஆலோசனைகளை வழங்கி பல பிரச்சினைகளை தீர்த்துக்கொள்ள வழி காட்டியவர் மணியம்.

வாலிபர் இயக்கத் தோழர்கள் பலதடவைகள் கைதுசெய்யப்பட்டு அடக்குமுறைகளுக்கு ஆளாக்கப்பட்டபோதெல்லாம் சாரியானதும், உறுதிமிக்க ஊக்கமும் கொண்ட வேலை முறைகளுக்கு வழி காட்டி எமது முன்நோக்கிய பாய்ச்சலுக்கு வழிகாட்டியவர் தோழர் மணியம் அவர்கள். தனது மரணத்திற்கு நான்கு நாட்களுக்கு முன் இறுதியாக மலையகத் தோழர்களுக்கு எழுதிய கடிதத்தில் கூட மலையகத்திற்கான தனது விஜயத்தைப் பற்றியே குறிப்பிட்டுள்ளார்.

தோழர் மணியம் அவர்கள் என்றும், எம்மோடும் எம்மக்களோடும் வாழ்வார். அவரின் சரியான வழிகாட்டல், மலையக மக்களின் பூரண விடுதலைக்கு வழி சமைக்கும். நாம் உறுதியுடன் அவரது அடிச் சுவடுகளைப் பின்பற்றி வழிநடப்போம்.

இலங்கை ஜனநாயக வாலிப முன்னனி
(மலையகக் கமிட்டி)

ஹட்டன்



1980ல் தலைவாகெல்லையில் நடைபெற்ற மலையக வாலிபர் மாநாட்டில் வாலிபர்கள் மத்தியில் காணப்படுகின்றார்
Maniam in the midst of youth at the Hill country youths corference held at Talawakelle in 1980



இறப்பதற்கு இருவாரங்களின் முன் தோழர் மணியம் தனது வாழ்க்கைத் துணைவியாருடன்
Comarade Maniam with his wife just a fortnight before his death

# எண்ணித் துணியும் இலட்சியவாதி

"மனநலன் நன்குடைய ராயினுஞ் சான்றோர்க்கு
இனநலன் ஏமாப் புடைத்து"

என்று கூறுகின்றது திருக்குறள் நூலில் உள்ள ஒரு குறள். இங்கே மன நலன் என்பது தனிமனித பண்புடமைக் கண்ணோட்டம். இனநலன் என்பது சமூகநலக் கண்ணோட்டம். இந்த இரு வகைக் கண்ணோட்டங்களும் ஒருங்கமைந்த வாழ்க்கை வாழ்ந்து மறைந்தவர் திரு. கே. ஏ. சுப்பிரமணியம் அவர்கள்.

அறிவறிந்த பருவம் முதல் இறுதி வரை பொதுவுடமைத் தத்துவத்தில் தம்மை ஆழ்த்தி அளப்பரிய சேவையில் தன்னை அர்ப்பணித்து திருப்தி கண்டவர் அவர். 1966 ஆம் ஆண்டு ஒக்டோபர் மாதம் தீண்டாமை ஒழிப்பிற்கான இயக்கம் தனது முதற் போராட்டமாகச் சுன்னாகத்தில் இருந்து தலைநகர் வரை நடாத்திய தேநீர் கடைச் சமத்துவ ஊர்வலத்தில், உணர்ச்சி பூர்வமான முன்னோடித் தலைவர்களில் ஒருவராய் முன்னணியிற் சென்று, காவற்துறையினரின் குண்டாந்தடி வீச்சுக்கு ஆளாகினார். விளக்க மறியலில் வைக்கப்பட்டார்.

1968 ஆம் ஆண்டு யூலாய் மாதத்தில் தொடங்கி கம்யூனிஸ்ட் கட்சியின் பின்னணியில் தொடர்ச்சியாகத் தீண்டாமை ஒழிப்பு வெகுசன இயக்கம் நடத்திய ஆலயப் பிரவேசப் போராட்டங்களில் அதீத முன்னணிப் போராளிகளாய் நின்று வழி நடத்திய துணிவும் துவளாத ஊக்கமும் மிகுந்த முன்னோடித் தலைவர்களில் ஒருவராய்ச் செயற்பட்ட கர்ம வீரர் அவர். போராட்டங்களில் கண்ட வெற்றியில் அவருக்குப் பெரும்பங்குண்டு.

சங்கானை, மாவிட்டபுரம், மட்டுவில், கொடிகாமம் முதலிய பல பகுதிகளில் வாழ்ந்த ஒடுக்கப்பட்ட மக்களின் சமத்துவ உரிமைப் போராட்டங்களில், தன்னிகரில்லாத் தலைமைத்துவத்தை ஏற்று எதிரிகளைச் சளைக்கச் செய்து, வெற்றி தேடித் தந்த தோழர் சுப்பிரமணியம் அவர்கள் 1969 ஆம் ஆண்டு அரசாங்கத் தடையையும் மீறி யாழ்ப்பாணத்தில் மேதின ஊர்வலத்தை முன்னின்று நடத்திய போது பொலிஸ் படையால் மிக மோசமாகத் தாக்கப்பட்டிருந்தார். இச்சம்பவமே அவரை நோயாளி ஆக்கியது. என்றாலும் அவரது மன வலிமையும், வீறுப்புமிக்க துணிவும்,

இலட்சியப் பற்றும், "எல்லோரும் வாழ வேண்டும் உலகம் இன்புற்றிருக்க வேண்டும்" என்ற அர்த்தமுள்ள கம்யூனிஷ சித்தாந்தக் கோட்பாடும் இறக்கும் வரை அவரை எண்ணியதைச் செயற்படுத்தி வெற்றிகாணும் திண்ணியராக வாழ வைத்தன.

அவரது மறைவு ஒடுக்கப்பட்ட, ஏழை விவசாய, தொழிலாள மக்களுக்கு ஏற்பட்ட பேரிழப்பாகும். அன்னாரின் ஆத்ம சாந்திக்காகத் தீண்டாமை ஒழிப்பு வெகுசன இயக்கத்தின் சார்பில் அஞ்சலி செலுத்திப் பிரார்த்திக்கின்றேன்.

தொண்டைமானாறு

க. கிருஷ்ணபிள்ளை
ஆசிரியர்

கம்யூனிஸ்டுகள் எப்பொழுதும் உண்மைக்காக வாதாடத் தயாராக இருக்க வேண்டும். காரணம் உண்மை மக்களின் நலன்களுக்குச் சாதகமானது. கம்யூனிஸ்டுகள் எப்பொழுதும் தமது தவறுகளைத் திருத்தத் தயாராக இருக்க வேண்டும். காரணம் தவறுகள் மக்களின் நலன்களுக்குப் பாதகமானவையாகும்.

மாஓ சேதுங்

# சத்திய வாழ்வு வாழ்ந்தவர்

எவன் தர்மத்தைக் காக்கிருனே அவன் தன்னைத் தான் காத்தவனுகிறுன். இது வேத வாக்கு; சத்தியத்தின் இலக்கணம். இதற்கு இலக்கியம் அரிச்சந்திர புராணம்: உலகில் சத்தியத்திற்கு உருக் கொடுத்தவன் அரிச்சந்திரன்.

பதில்,

அரிச்சந்திரனுக்கு உலகு அளித்திருக்கிறது, நித்தியவரம்.

சமுதாயத்தில் சத்தியத்தின் இருப்பிடம் சமத்துவம்.

சமத்துவத்தைக் காக்க, எம்மத்தியில், கங்கணம் கட்டியவர் அமரர் K. A. சுப்பிரமணியம் அவர்கள். தன்னுடமை நீத்துப் பொதுவுடமை காத்ததினுல் 'மணியம்' அவர்கள் தன்னைத்தான் காத்தவராகின்றுர். வாழ்க்கையென்றுல் பொதுவுடமை பொதுவுடமையென்றுல் வாழ்க்கை என்றவாறு வாழ்ந்தார்; தன்னையே வெறுமையாக்கிக் கொண்டார்; அத்துடன் பிறவிச் சுமையும் தாமே நழுவிற்று; பிரயாணமும் இலகுவாயிற்று.

'மணியம்' அவர்களை சென்ற 25 ஆண்டுகளாக நான் அறிவேன். எனினும், சென்ற 5 வருடங்களாக, அவரின் அந்திய கால கட்டத்தில் தான் அவருடன் நெருங்கிப் பழகும் வாய்ப்பு எனக்குக் கிடைத்தது. அது என் பாக்கியம் - ஒரு வகையில் அது என் ஞானஸ்நானம் கூட.

ஏனெனில்,

நான் படித்த புத்தகங்களில் மணியத்தின் வாழ்க்கையேடு ஒரு திருக்குறள்!

ஒவ்வொரு மனிதனும் ஒவ்வொரு புத்தகம். சுவையானவை சில, கசப்பானவை பல!

ஆழமான, அனுபவ சூத்திரமானவை, மிக மிகச் சில. இந்த வகையைச் சார்ந்தது தான் 'மணியம்' அவர்களின் ஏட்டு ரகம்! ஆழத் தோண்டத் தோண்ட அனுபவ பூர்வமான அந்தரங்கச் சுரங்கம் தோன்றும், தோன்றும்! அது ஒரு அநுபூதிப் பொக்கிஷம் தன்னைத்தான் விற்றெடுத்த தனிரகம்.

"ஒப்புரவினுல் வருங்கேடெனின் அஃதொருவன்
விற்றுக் கோள் தக்கது உடைத்து." திருக்குறள் (220)

'மணியம்' ஒரு குழந்தை உள்ளம் படைத்தவர். பயம் அறியாத பருவக் குழந்தை.

''ஓர் நிர்வாண மகாராசாவிற்கு, ஒரு மந்திரவாதி, கெட்டவர் கண்ணனுக்குத் தெரியாத பாசாங்க ஆடை அணிவித்து, மக்கள் தரிஷனத்திற்காக ஊர்வலம் விட்டான். அன்றுதான் மக்களுக்கெல்லாம் அக நிர்வாணப் பரிசோதனை. மக்கள் எல்லாம், இராசாவின் புறக்கண்ணுக்குத் தெரியாத, இல்லாத, ஆடையலங்காரத்தை, வியந்தார்கள். ஏன் இராசாவிற்குமே அதே கதிதான்!

அங்கு திடீரென; குழந்தையொன்று, கூச்சலிட்டுக் கத்திற்று,''இராசா அம்மணம், இராசா அம்மணம்'' என்று.

மக்கள் குழம்பினர்; பெற்றோர் பிள்ளையைச் சாடினர். மகராசாவிற்கே அப்போது தான் விசயம் அம்பலம்''

இந்தப் பிள்ளைக்கு நேர்ந்த கதிதான் வாழ்க்கையில் 'பிள்ளை' மணியம் அவர்களுக்கும் நேர்ந்தது.

மூட நம்பிக்கை, வறட்டு வாதக் கொள்கைகள், காலத்துக் கொவ்வாத பாரம்பரிய சடங்குகள், சமுதாயச் சீர்கேடுகள் போன்ற பல முட்டுக் கட்டுகள் ஒன்றோடொன்று பின்னி மனத் திரையாக சமூகத்தின் அகக் கண்ணை மறைத்தது கண்டு ஒரு குரல் கூச்சலிட்டு கூறிற்று. அது பொதுவுடமைக் குரல்.

இந்தக் குரலுக்கு ஒலி கொடுத்த முன்னணி வரிசையிலுள்ளவர் காலஞ் சென்ற இடது பொதுவுடமைக் கட்சிச் செயலாளர் K. A. சுப்பிரமணியம் அவர்களே.

அவர்களது பணியில் அந்திய காலம் வரை அவர்தம் பாரியாரும் மக்களும், மருமகனும் நல்நெறி வழி நின்று உதவிய பாங்கும் பெரிதும் பாராட்டிற்குரியது. அன்னாரின் மறைவு அவர்தம் குடும்பத்தினர்க்கு மட்டுமன்றி எம்மவர் அனைவர்க்கும் ஈடு கொடுக்க முடியாத இழப்பு. அவரது ஆத்ம சாந்திக்காக நாம் அவரின் பணியைத் தொடருவோமாக.

காலையடி
பண்டத்தரிப்பு

ச. அழகரத்தினம்

# வற்றிவிட்ட ஒரு ஜீவ நதி...

இறக்கப் படாத
மக்களின் சுமைகளைத்
தானும் சுமந்த
தலை ஏன்
சாய்ந்தது?

மக்களின் கைகளின்
விலங்கை உடைக்க
சம்மட்டி தூக்கிய
கைகள் ஏன்
ஓய்ந்தன?

தொழிலாளி வாழ்வின்
சுரண்டலுக் கெதிராய்
கொதித்துக் குமுறிய
சிந்தனை ஏன்
உறைந்தது?

ஒடுக்கப்பட்ட
மக்களைக் காக்க
வாழ்வெல்லாம் ஓடிய
கால்கள் ஏன்
நின்றன?

உலகத் தொழிலாளர்
ஒற்றுமைக்காக
உறங்காமற் பேசிய
நாவேன்
உலர்ந்தது?

ஏழைப் பாமரன்
விடுதலை கான
ஏங்கித் தவித்த
கண்கள் ஏன்
உறங்கின?

அடிமை மக்களின்
அவலக் குரல்களை
ஏந்திய காதுகள்
ஏன் தான்
அடைத்தன?

கம்பிக் கூண்டுகள்
துப்பாக்கி வேட்டுக்கள்
ஏழ்மை விழிம்புகள்
வக்கிரப் பெருமைகள்
அரியா சனங்கள்
அனைத்தையும் மீறிய
தோழர் மணியமா
மீளாது துயின்றார்?

திருகோணமலை

சி. பற்குணம்

# மறக்காத உன் நினைவு

புன்சிரிப்பு மாறாத முகம்: தோல்வி என்றாலும் வெற்றி என்றாலும் அதனை அந்தப் புன்சிரிப்பின் மூலமே எதிர்கொள்ளும் மனப்பாங்கு கொண்டவர்.

புகழுக்காக ஏங்காத இதயம்: சாதனைகள் பல புரிந்தும், வெற்றிகள் பல கண்டும், தலைவனாக வளர்ந்துவிட்டபின்பும் தனிப்பட்ட செல்வாக்கையோ புகழையோ உயர்த்தி அதன் மூலம் பெருமை கொள்ள விரும்பாதவர்.

சந்தர்ப்பவாதம் புரியாதவர்; நன்மதிப்பும் மக்கள் செல்வாக்கும் அபரிமிதமாகப் பெற்றிருந்த போதிலும், அம்மக்கள் மத்தியில் பாசாங்கு புரிந்து சந்தர்ப்பவாதங்கள் செய்து பட்டம் பதவிகளைத் தேடிக் கொள்ளாதவர்.

நீதிக்காக, நேர்மைக்காக, கொள்கைக்காக நெஞ்சுயர்த்தி நின்றவர், அதன் காரணமாக அடக்கு முறைகளுக்கும் படைகளின் அடிதடிகளுக்கும் ஆளாகியவர். இருந்தும் விட்டுக் கொடுக்காமல் எடுத்த கொள்கைக்காக தொடர்ந்து போராடியவர். ஒடுக்கப்பட்ட, அடக்கப்பட்ட மக்களை நேசித்தவர், அவர்களால் நேசிக்கப்பட்டவர்.

அவரே அமரர் கே. ஏ. சுப்பிரமணியம் அவர்கள்.

தான் சார்ந்திருந்த அமைப்புக்கு அப்பால் பலதுறைகளிலும் நெருங்கிய நண்பர்கள் பலரைப் பெற்றிருந்தார் அவர். அந்த வகையில் என் போன்ற பத்திரிகையாளர்கள் பலரது மனங்களையும் வென்றிருந்தார்.

எவ்வளவு பெரிய 'சீரியஸ்' விடயமானாலும் ஒரு நகைப்பின் மூலமே அதனை எதிர்கொள்ளும் மனப்பக்குவம் அவரிடமிருந்ததைப்போல் வேறு எவரிடமும் நான் கண்டதில்லை. எதிலும் ஒரு திட்டம் வரை முறை அவரிடம் இருந்தது.

நண்பர்களின் சுக துக்கங்களைப் பற்றி விசாரிப்பதும், அவைகளில் கூடியவரை பங்கு கொள்வதும் அவரது சிறப்பியல்புகளில் மேலும் ஒன்று.

அரசியல் வானில் இன்னும் எத்தனையோ சாதனைகளை அவர் நிலைநாட்டியிருக்க வேண்டும். அதற்கான தகுதி, திறமை, உறுதி யாவும் அவரிடமிருந்தன. காலமும், நாட்டின் சூழ்நிலையும் இடையில் வந்த நோயும் தடைக் கற்களாக அமைந்து விட்டன.

சகலருக்கும் சமதர்மம் கிடைக்கப் போராடிய அந்த மாமனிதன் எந்த ஒரு மனிதனாலும் தவிர்க்க முடியாத இயற்கையின் பாற்பட்ட சமதர்மவுலகுக்கே சென்றுவிட்டார்.

உயர்ந்த நட்புக்கு இலக்கணமாய்த் திகழ்ந்திட்ட அவர் நாமம் என்றும் வாழ்க!

புன்னகையின் மன்னவனே,
புகழ் விரும்பாக் காவலனே,
ஒடுக்கப்பட்ட மக்களுக்காய்
ஓயாமல் உழைத்தவனே,
நட்புக்கு நல்லவனே,
நமை வென்ற கொள்கையனே,
சமதர்மப் பாதையிலே
சறுக்காது நின்றவனே,
எதற்காக அவசரமாய்
எமைவிடுத்து ஏகினையோ?
மறக்காது உன் நினைவு
மனம் எமக்கு உள்ளவரை!

அராலி வடக்கு

பி. எஸ். பெருமாள்

# தேசிய நோக்கம் கொண்டவர்

திரு. சுப்பிரமணியம் அவர்களின் மறைவு தொழிற்சங்க இயக்கத்திற்குப் பேரிழப்பாகும். வடபகுதியில் எத்துணை சிக்கலான அரசியல் சூழ்நிலை இருந்த போதிலும் திரு. சுப்பிரமணியம் தொழிலாளர்களின் நலனிலும், அவர் தம் உரிமைகளிலுமே கண்ணும் கருத்துமாக இருந்தவர். கடந்த சில ஆண்டுகளாக வட பகுதியிலே இனப் போராட்டம் உச்சக் கட்டத்தை அடைந்திருந்த வேளையிலும் திரு. சுப்பிரமணியம் 'தமிழ்த் தொழிலாளர்களில் கொண்டிருந்த அக்கறை திசை'திருப்பப் படவில்லை. இனப் போராட்டத்துடன் திரு. சுப்பிரமணியம் பின்னிப் பிணைந்து இருக்கவில்லையென்றாலும் தமிழர் நலன், மேம்பாடு பற்றிய பிரக்ஞையுடனேயே தன் பணியை மேற்கொண்டு வந்தார். எந்தத் தமிழ் இயக்கமேனும் திரு. சுப்பிரமணியம் தமது அபிலாஷைகளுக்கு முரண்பாடாக நடந்து கொண்டாரென்றோ அசிரத்தையுடன் இருந்தாரென்றோ குற்றஞ் சாட்டியதில்லை. தொழிலாளருடைய சேம நலனே இவர் பணியின் குறிக்கோளாக இருந்ததனாலேயே எல்லோரும் இவருக்கு மரியாதை செலுத்தினர்.

திரு. சுப்பிரமணியம் சிறுபான்மைத் தமிழரின் முன்னேற்றத்திலும், வளர்ச்சியிலும் சிரத்தை கொண்டிருந்தார். மாவிட்டபுரம் கந்தசாமி கோவிலில் நடைபெற்ற ஆலயப் பிரவேசப் போராட்டத்தின் போது திரு. சுப்பிரமணியம் வெகுசன இயக்கத்தின் ஆதரவாகவே நின்று போராடினர் இவரது மறைவுச் செய்தியைக் கேட்டதும் எனது ஆசிரியரான மாவிட்டபுரம் சட்டத்தரணி எம். எஸ். கனகரெத்தினம் அவர்களுக்கு அறிவித்தேன். திரு. கனகரெத்தினம் ஸாஹிராக் கல்லூரியில் ஆசிரியராக இருந்து பின்னர், அட்வக்கேட்டானவர். அக்காலத்தில் கம்யூனிஸ்ட் இயக்கத்தில் முன்னணியில் நின்று பணியாற்றியவர்.

திரு. சுப்பிரமணியம் அவர்களை நினைவு படுத்தி திரு. கனகரத்தினம் தம் கவலையைத் தெரிவித்தார்.

தேசிய நோக்கமும் பரந்த மன இயல்பும் கொண்டிருந்த திரு. சுப்பிரமணியம் தமிழினத்தின் துன்ப நிலையை நன்கு அறிந்தவர். இதனால் எல்லோரும் இவர் மீது அன்பு செலுத்தினர்கள்; நம்பிக்கை கொண்டார்கள். இவரது திடீர் மறைவு தமிழரின் நல்வாழ்வில் அக்கறை கொண்ட அனைவருக்கும் துயரினைத் தருவதாகும்.

ஆர். சிவகுருநாதன்
தினகரன் பிரதம ஆசிரியர்

கொழும்பு

# இலக்கிய நண்பர் மணியம்

சில ஆண்டுகட்கு முன்னர் கொழும்பில் நடந்த சீனத் தூதரகத்து தேசிய விழாக் கூட்டமொன்று நடந்தது. மேல்நாட்டு உடைகளே மிகுந்து காணப்பட்ட அக் கூட்டத்தினிடையே ஒரு நெடிய கம்பீரமான தோற்றமுடைய ஒருவர் வேஷ்டி அணிந்து, தனித்துத் தோற்றமளித்ததைக் கண்டு பக்கத்திலிருந்த அன்பர் ஒருவரிடம் அவர் யார் எனக் கேட்டேன். என்ன உங்களுக்கு அவரைத் தெரியாதா? விந்தையாக இருக்கிறதே. நீங்கள் அறிமுகமாயிருப்பீர்கள் எனவே நினைத்திருந்தேன். அவர்தான் யாழ்ப்பாணத்து இடது கம்யூனிஸ்ட் கட்சிச் செயலாளர் 'மணியம் என்றார்.

மேலிடத்து முடிவுகள் என்பதற்காக வெறுமே தலை குனியாமல் தனக்குச் சரியெனத் தோன்றுவதைத் துணிவுடன் செயலாற்றும் தலைவர் என்பதாக நான் கேள்விப்பட்டிருந்தேன். அந் நண்பர் என்னை அவருக்கு அறிமுகம் செய்து வைத்ததும் "ஓ ஹங்கேரியக் கவிஞன் பெட்டோஃபியினை மொழி பெயர்த்த கணேஷா எனக் கேட்டார். ஆம் எனக் கூறியதும் தழுவிக் கொண்டு "தினகரனிலும், தாமரை இதழ்களிலும் வெளிவந்தவற்றைப் படித்தேன். பெட்டோஃபியின் சில மொழி பெயர்ப்புகளைப் படித்த காலத்தில் நான் சந்தித்த இலங்கைக் கவிஞர் சிலரிடம் தமிழாக்கும்படி கேட்டிருந்தேன், ஏனோ அவர்கள் ஈடுபடவில்லை. உங்களதைப் படித்ததும் மகிழ்ந்தேன்" எனக் கூறினார்.

அன்னியர் ஆதிக்கத்தில் அல்லலுற்ற தன்நாட்டு மக்களுக்கு உரிமை உணர்வை எழுப்பி வீராவேசத்துடன் பாடிய மகாகவி சுப்பிரமணிய பாரதியை நிகர்த்தாக இக்கவிஞரதும் இருந்ததனால் நான் தமிழாக்கி வெளியிட்டேன், இப்பணி உரிய வாசகர்களின் உள்ளத்தைத் தொட்டதா? என நான் ஐயுற்றிருந்த வேளையில் ஒரு முதிர்ந்த அரசியல்வாதியான மணியத்தார் அவற்றைப் படித்துப் பாராட்டினார் என்ற பெருமிதத்தைவிட சூத்திரங்களிலும் நீண்ட அறிக்கைகளும், காலங் கடத்தும் மேடைப் பிரசிங்கிகளாகத் தோன்றிய அரசியல்வாதியாகவல்லாமல் இலக்கியத்திற்கு ஈடுபாடும் இயக்கத்திற்கு ஒரு கொழுகொம்பு என்று உணர்ந்த ஒருதலைவரை, அன்று அறிமுகமானதில் மகிழ்ந்தேன்.

இலக்கிய வளர்ச்சிக்கு தேசிய கலை இலக்கியப் பேரவை புரிந்து வரும் பணிகளையும் பாரதி நூற்றாண்டு விழா நினைவு வெளியீடான 'பாரதி பன்முகப் பார்வை' க்குக் கிடைத்த வரவேற்பினையும் உளமகிழ்வோடு உணர்த்தினார். திங்கள் இதழாக வெளிவந்த 'தாயகம்' மேலும் சிறப்பாக வெளிவரும்படி எடுக்கும் முயற்சி குறித்தும் குறிப்பிட்டார். மலையக மக்களின் 'உரிமைப்போராட்டம்' பொது நீரோட்டத்தில் இணைந்து ஒன்றிணைந்த இலங்கையாக மிளிரவேண்டும் என்பதே அவரது உள்ளக்கிடக்கையாக இருந்தது.

பெட்டோஃபியின் கவிதைகள் தமிழில் வெளிவர தேசிய கலை இலக்கியப் பேரவை உதவலாம் என்பதை உணர்த்தினார். அதன் விளைவாய் அளிக்கப்பட்ட கையெழுத்துப் படிவங்கள் அவ்விடத்திய நாட்டு நிலை காரணமாக அச்சேற முடியாது சில துண்டுகள் சுணங்க நேர்ந்தது எனினும் அதனைச் சென்னை புக் ஹவுஸ் உதவியுடன் அழகுபெற வெளியிடச் செய்தார்.

அவர் நோயுற்று அண்மையில் மருத்துவத்திற்காகப் பேராதனையில் தங்கியிருந்த காலத்தில் நெருங்கிப் பழகும் வாய்ப்பு கிட்டியது.

ஒரு நாட்டின் அரசியல் வளர்ச்சிக்கு இலக்கியம் உயிர்நாடி என்டதை அடிக்கடி அவர் எடுத்துரைத்தார். சீனாவின் அயல் மொழிப் பதிப்பகத்தால் 1976 தொடங்கித் தமிழ் நூல்களை வெளியிடாமை குறித்து வருந்தியதுடன் அவர்கள் மீண்டும் அவற்றை வெளிவரச் செய்வதில் ஆர்வங் காட்டினார். மறைவதற்கு இரு கிழமைக்கு முன்னால் கொழும்பில் நடந்த சீன நூற்களின் பொருட்காட்சியிற் கலந்து கொண்டதுடன் மீண்டும் தமிழில் சீன நூற்கள் வெளிவர வேண்டும் என்பதனையும் சீனத்தினின்று வந்திருந்த குழுவினரிடம் வற்புறுத்தியதாகத் தெரிகிறது.

மற்றும் தேசிய கலை இலக்கியப் பேரவையின்மூலம் பேராசிரியர் சிவசேகரம், இ. முருகையன், ந. ரவீந்திரன் க. தணிகாசலம் போன்றோரின் நூற்கள் வெளிவருவதற்கும் உறுதுணையாக இருந்திருக்கிறார். இத்தகைய இலக்கியப் பற்றும் நிர்வாகத் திறமையும் அரசியல் நேர்மையும் கொண்ட தலைவரின் மறைவு தமிழகத்திற்கு மட்டுமன்றி நாட்டிற்கே பேரிழப்பாகும்.

கண்டி

கே. கணேஷ்



1969ல் சட்டமறுப்பு மேதின ஊர்வலத்தில் பொலிஸ்படை மூர்க்கத்தனமாக தாக்குகின்றது
The police brutelly attack the May Day processionists (1969)



புத்தூர் வேம்பிராய் கிராமத்தில் போராட்டத்தின் மூலம் போடப்பட்ட புதிய பாதையை திறந்து வைக்கின்றார்
Maniam ceremonially opens the new road constructed at Vembirai, in Puttur after a struggle

# ஓர் சிறந்த வழிகாட்டியின் மறைவு

தனது இளமைக் காலம் தொடக்கம் எம்மை விட்டுப் பிரியும் வரை இந்நாட்டினையும் இந்நாட்டு மக்களினையும் நேசித்து அவர்களின் நல்வாழ்வுக்காகவும், சுதந்திரத்திற்காகவும் தனது வாழ்வைத் தியாகம் செய்த திரு.K. A. சுப்பிரமணியம் அவர்களது மறைவுஇந்நாட்டு மக்களுக்கு ஏற்பட்ட பேரிழப்பாகும்.

அரசியல் விடுதலைக்காகவும், பொருளாதார விடுதலைக்காகவும், சமுதாய விடுதலைக்காகவும் போராடி வந்த இப் பெரியார் அடக்கி ஒடுக்கப்பட்ட மக்களின் விடுதலைக்காகப் பெரும் பணியாற்றியுள்ளார். மக்கள் அனைவரும் சமத்துவம் உடையவர்கள் என்ற தத்துவத்தைக் கைக்கொண்ட இவர், சமுதாயத்திற் சமத்துவம் காணப் பல போராட்டங்களை நடாத்தி வெற்றி கண்டுள்ளார்.

ஏழை எளிய மக்களின் கல்வி வளர்ச்சியிலும் அவர்களை மையமாகக் கொண்ட இலக்கிய வெளியீடுகளிலும் அதிக கவனம் செலுத்தி வந்ததுடன் பல பழைய புதிய கவிஞர்களுக்கும் எழுத்தாளர்களுக்கும் ஆக்கமும் ஊக்கமும் கொடுத்து பல பிரசுரங்களை வெளியிடவும் காரணமாக இருந்துள்ளார்.

பாமர மக்கள் தொடக்கம் பல்கலைக் கழகப் பேராசிரியர்கள் வரை தனது சேவையினால் பெரும் செல்வாக்கினைப் பெற்ற இவர் என் போன்ற பலருக்கு அரசியற் குருவாகும், இலக்கியத் துறையில் ஆலோசகராகவும், உயர் கல்விக்கு வழிகாட்டியாகவும் விளங்கியுள்ளார்.

இவரது இழப்பு பேரிழப்பாகும். இவரைப் பிரிந்து வாடும் நாம் எமது கண்ணீர் அஞ்சலியைத் தெரிவித்துக் கொள்கின்றோம்.

குச்சவெளி,
திருகோணமலை.

ஆ. பொன்னையா

# வாழ்க்கை ஓர் நடைமுறை சிந்தனையே!

தோழர் மணியம் அவர்களை நாம் நினைவு கூர பல விடயங்கள் இருக்கின்றன. தோழர் மணியம் அவர்கள் வெகுசனங்கள் மத்தியில் போராட்டங்கள் என்றால் என்ன, அப்போராட்டங்களின் ஊடாக எப்படியான மக்களை ஐக்கியப்படுத்த வேண்டும் அப்படி ஐக்கியப்படுத்தப்பட்ட மக்களை உதிரிகள் ஆகாது பாதுகாக்க வேண்டும், அதன் மூலமாக வெகுஜன போராட்டங்கள் வெற்றி பெறும் என்பதையெல்லாம் நன்கு உணர்ந்து பேச்சில் மட்டும் மல்லாமல் செயல் முறையிலும் வாழ்ந்து காட்டி போராட்டங்களில் வெற்றியும் கண்டார். அதுவே நாம் அவரிடத்தில் கற்றுக் கொள்ள வேண்டிய மிகவும் காத்திரமான குணம்சமாகும், கடந்த 35 ஆண்டுகளுக்கு மேலாக தோழர் சுப்பிரமணியம் அவர்கள் பாட்டாளிவர்க்க சிந்தனையின் நெறியில் இருந்து வழுவாது தான் சார்ந்து இருந்த இலங்கை கம்யூனிஸ்ட் கட்சியில் காலத்துக்கு காலம் ஏற்பட்ட பிளவுகள் பின்னடைவுகளுக்கு மத்தியிலும் சோர்வு அடையாது கட்சியின் வளர்ச்சிக்காக மிகவும் கண்ணியமான முறையில் பங்கு ஆற்றி இருக்கின்றார்.

இதைவிட அவரிடத்தில் உள்ள நற்பண்பு படித்தவர் படியாதவர் சிறியவர், பெரியவர், வேண்டியோர் வேண்டாதோர் என்ற பேதம் இன்றி விமர்சனங்கள் வெப்பிபடுகின்றபோது அதை ஏற்று சுய விமர்சனம் செய்கின்ற தன்மையையும் கொண்டு இருந்தார் இதுவே தோழர் மணியம் அவர்கள் இறக்கின்ற போதும் கட்சியின் தலைமைப் பொறுப்பையும், மக்கள் அவரை கண்ணியத்துடன் நேசிக்கின்ற பண்பையும் ,நாம் காணக்கூடியதாக இருந்தது. இவரது அரசியல் பணி மிகவும் தூய்மையாகவும் சிறப்பாக வும் அமைய துணை நின்ற மனைவி பிள்ளைகளையும் நாம் நினைவு கூர வேண்டும். இதுவும் தோழர் மணியம் அவர்களின் பங்களிப்பே ஆகும். தோழர் மணியம் அவர்களின் வாழ்க்கை எமக்கு ஓர் நடை முறைச் சிந்தனையே என்பது எனது எண்ணம்.

இருபாலை

க. ஜெயபாலசிங்கம்

# மறைந்தும் உயிர்வாழும் மானுடம்

*"There will be time enough to sleep when I' m dead"*
*(R.W. FASSBINDER German Film Director)*

"நான் இறந்திருக்கும் போது உறங்குவதற்காக போதுமான நேரம் கிடைக்கும். (ஆர். டபிள்யூ பாஸ்பைண்டர் ஜேர்மனிய திரைப்பட இயக்குநர்)

சகல வழிகளாலும் அடக்கி ஒடுக்கப்பட்டுவரும் மலையகப் பாட்டாளி வர்க்கத்தின் விடிவுக்கு புரட்சிகர வெகுஜனப் போராட்டப் பாதையை காட்டி நிற்கிறது இலங்கை கம்யூனிஸ்ட் கட்சி (இடது).

கடந்த ஒரு தசாப்தமாக அதன் பொதுச் செயலாளராக கடமையாற்றிய மறைந்த தோழர் கே. ஏ. சுப்பிரமணியம் அவர்கள் முழுநாட்டினதும் நாட்டு மக்களினதும் விடுதலைக்கான கொள்கையான மாக்சியத்தை நடைமுறைப்படுத்துவதில் சாதனையை நிலைநாட்டியுள்ளார் என்றால் மிகையாகாது.

மலையகத்தில் இனரீதியாகவும் பிரதேச ரீதியாகவும் ஸ்தாபிதமாகியுள்ள சுரண்டலுக்கும் அடக்குமுறைக்கும் எதிரான போராட்டம் இனரீதியாகவோ பிரதேச ரீதியானதாகவோ இருப்பதை அவர் வெறுத்தார்; இனவாத பிரதேசவாத போராட்டத்தால் மலையக மக்களின் அடிமை விலங்குகளை உடைத்தெறிய முடியாது. அப்படியான போராட்டத்தால் மலையக மக்களுக்கு முழுமையான விமோசனம் கிட்டாது என்பதை உறுதியாக நம்பியதுடன் அதனை வலியுறுத்தவும் தவறவில்லை.

மலையக மக்களின் பிரத்தியேகமான யதார்த்த ஸ்தூல நிலைமையில் அம் மக்களுக்கான தலைமை அவர்கள் மத்தியிலிருந்தே கட்டிவளர்க்கப்பட வேண்டும் என்பதில் எவ்வித அபிப்பிராய பேதமும் கொண்டிராத அவர் அத்தலைமை தேசிய தலைமையை நோக்கி வளர்த்தெடுக்கப்பட வேண்டும் என்பதை அழுத்திக் கூறிவந்தார்.

மலையக மக்களின் விமோசனத்திற்காக அம்மக்களின் மத்தியிலுள்ள கட்சிகள், தொழிற் சங்கங்கள், அமைப்புகள் என்ப

வற்றின் ஐக்கியப்பட்ட போராட்டத்தின் அவசியத்தை அடிக்கடி எடுத்துக் காட்டினார். மலையகத்தில் இலங்கை கம்யூனிஸ்ட் கட்சி (இடது) யின் நடைமுறை வேலைகளிலும் ஏனைய மலையக அமைப்பு களுடனான ஐக்கியத்தை சாத்தியமாக்க வழிகாட்டினார்; கூடிய அக்கறை செலுத்தினார். மேற்படி கட்சியின் பொதுச்செயலாளர் என்ற ரீதியில் மலையக ஸ்தாபனங்களுடனும் மலையக தலைவர் களுடனும் மக்கள் நலன் சார்ந்த நேர்மையான தொடர்புகளை வைத்திருந்தார்.

சரியான அடிப்படை கொள்கையை கொண்ட இலங்கை கம்யூனிஸ்ட் கட்சி (இடது) யை மலையக மக்கள் மத்தியிலும் கட்டி வளர்ப்பதில் கூடிய அக்கறையை காட்டினார். அக்கட்சி யின் தோற்றத்தின் ஆத்மாவாக விளங்கிய அவர் இறுதியாக மலையக மண்ணில் இருந்து மலையக மக்களுக்காகவே சிந்தித்தார் என்பது குறிப்பிடத் தக்கது.

முழு மனித குலத்தின் விமோசனத்திற்காக சர்வதேச தேசிய ரீதியாக மாக்சிச கொள்கையை சரியாக முன்வைத்து தனது வாழ்நாள் முழுவதுமே உழைத்தார். அந்த மானுடத்தை மேதை என்று அழைப்பதே தகும். 'மேதை' என்பதன் அர்த்தம் விடா முயற்சி என்று கூறப்படுகிறது.

நோய்வாய்பட்டிருந்த காலத்தில் கூட அவர் சத்தியத்தை நிலைநாட்டுவதற்காக தொடர்ந்து விடாமுயற்சியில் ஈடுபட்டார். ஓய்வெடுக்க வேண்டிய நேரத்தில் கூட மக்கள் நலனில் அக்கறை கொண்டு கற்பதிலும், எழுதுவதிலும் கட்சி நடவடிக்கைகளி லும் உறுதியாக ஈடுபட்டார்.

இறந்த பிறகு உறங்குவதற்கு போதுமான நேரம் கிடைக்கு மென்று கருதினாரோ என்னவோ அவர் வாழ்நாளில் ஓய்வைப் பற்றி பெரிதாக அலட்டிக் கொள்ளவில்லை. படுக்கையில் இருந்த போது கூட இறுதி வரை அசுரவேகத்தில் மானிட விடுதலைக்காக வேலைகளை செய்தார்.

மறைந்தும் உயிர் வாழும் அம்மானுடத்தின் இறுதி லட்சி யத்தை அடையும்வரை அவர் காட்டிய வழியை பின்பற்ற ஆயிரக்கணக்கில் அணிதிரண்டிருக்கும் மானிடர்களுடன் பின் வரும் மேற்கோளின் அர்த்தத்தை பகிர்ந்து கொள்வது பொருத்த மானதாக இருக்கலாம்.

நான் இறந்திருக்கும் போது உறங்குவதற்காக போதுமான நேரம் கிடைக்கும்''

தலவாக்கெல்லை

இ. தம்பையா

# இனிய நினைவுகள்

தோழர் சுப்பிரமணியம் என்னோடு பழகிய நாட்கள் சிலவே ஆயினும் அச் சில நாட்களில் அவர் ஏற்படுத்திய தாக்கம் நின்று நிலைக்கக் கூடியது.

ஏட்டில் இடம் பெறாத பல வரலாற்றுச் சம்பவங்களை எல்லாம் அப்பழுக்கில்லாமல் துல்லியமாக வெளிக்கொண்டுவரும் ஆற்றல் படைத்தவர் ஒக்டோபர் புரட்சிக்குப் பிறகு உலகின் பல்வேறு பகுதிகளில் இடம்பெற்ற புரட்சிக்கோலங்களையும் விளைவுகளையும் அவர் எடுத்துச் செல்லும் பாங்கு அலாதிச் சிறப்புடையது. மக்கள் நடத்திய புரட்சி வரலாற்றை நன்கு அறிந்த காரணத்தால் குறைகளையும் தவறுகளையும் அறவே களைந்த மக்கள் புரட்சியை எடுத்து நடத்த வழி கோலினர்.

இலங்கைத் தமிழ்ச் சாதியிடம் ஆழமாகக் குடிகொண்டிருக்கும் சாதி ஏற்றத்தாழ்வு மனப்பான்மையை அடியோடு அகற்ற இவர் காட்டிய வழி நாம் கடைப்பிடிக்க வேண்டிய வழி. இவர் வாய்ச்சொல் வீரரல்லர், செயல்வீரராவர்.

பகைவருக்கும் அருளும் நல்லுள்ளம் படைத்தவர். இருந்த போதிலும் தமது நண்பர்களுக்காகவேனும் இலட்சியத்திலிருந்து வழுவாதவர். நடைமுறையிலுள்ள தேர்தல் முறையில் சிறிதும் நம்பிக்கை அற்றவராயினும் அந்த நம்பிக்கை நன்கு ஊறிய மக்களை தேர்தல் கடமையை எவ்விதம் நிறைவேற்ற வேண்டும் என வழி காட்டத் தவறவில்லை. நடந்து முடிந்த ஜனாதிபதித் தேர்தலின் போது அவர் மக்களுக்கு காட்டிய வழி போட்டியாளரிடம் அவர் பெற்றுத்தந்த வாக்குறுதிகள் - போட்டியாளரைத் துணிவுடன் வரவேற்ற பாங்கு - போற்றிப் புகழ வேண்டியவை.

மாற்றாரிடமும் கருத்துப் பரிமாற்றம் செய்து கொள்ள வேண்டும் என்று கூறிய வழிமுறைகள் வருங்கால வழிகாட்டிகளுக்கு ஒரு பாடமாகவிருக்கட்டும்.

அவருடைய எழுத்தாற்றல் செம்பதாகை, புதிய பூமி ஆகியவை தென்புடன் நடைபோட காரணமாயிருந்தது.

அவருக்கு நாம் செய்யும் கைமாறு அவர்காட்டிய வழியில் ஒழுகி - புதிய தலைமைத்துவத்தை - உருவாக்குவதேயாகும்.

க. நடனசபாபதி

பருத்தித்துறை

# தனித் திறமையைக் கொண்டிருந்தார்

தோழர் மணியம் அவர்களை நினைவுகூரும்போது அவர் பொது எதிரிக்கு எதிராக அணி திரட்டக்கூடிய நேச சக்திகளை அணி திரட்டும் பாணியே என் நினைவில் வருகிறது,

இடதுசாரிகளை நேருக்கு நேர் அரசியல் ரீதியாக தர்க்கிக்கத் திராணியற்றிருந்த தமிழ் அரசியற் கட்சிகள் ஒவ்வொரு காலப் பகுதியிலும் ஏதோ ஒரு சர்வதேச நிகழ்வை வைத்துத் தமது பிற்போக்குக் கருத்துக்களை முன்வைத்தனர். சீன - இந்திய எல்லைத் தகராற்றைத் தொடர்ந்து சீனாவை ஆக்கிரமிப்பு நாடெனத் திட்டித் தீர்த்தனர் அன்றைய தமிழ் அரசியல்வாதிகள். இந்தியாவே ஆக்கிரமிப்பு நாடெனத் தக்க ஆதாரங்களுடன் இலங்கை-சீன நட்புறவுச் சங்கத்தின் யாழ்கிளை வாதங்களை முன்வைத்து சீன எதிர்ப்பாளர்களைத் திணறடித்தது என்றால் மிகையாகாது

பல்வேறு அரசியற் கருத்துக்களைக் கொண்ட நண்பர்களையும் ஒன்றுதிரட்டி ஒரு பரந்த அமைப்பாக இலங்கை - சீன நட்புறவுச் சங்கத்தின் யாழ்கிளையை உருவாக்கிய பெருமை மணியம் அவர்களையே சேரும் என்பது எனது அபிப்பிராயம்.

இலங்கை - சீன நட்புறவுச் சங்கத்தின் யாழ் - கிளையானது தாய்ச் சங்கத்திற்கு சில சந்தர்ப்பங்களில் வழிகாட்டியாகக்கூட இருந்தது எனலாம்.

பொது விடயங்களில் ஒத்த கருத்துடைய வெவ்வேறு துறைகளில் உள்ள நண்பர்களிடமிருந்து அவரவர் திறமையை வெளிக்கொணரும் வகையில் அவரவருக்குரிய பணிகளைச் செய்விப்பதில் தோழர் மணியத்தின் திறமையே தனித்துவமானது.

அரசியல், பொருளாதார சமூக, கலாச்சார பண்பாட்டுத் துறைகளில் பொது எதிரிக்கு எதிராக அணி திரட்டக்கூடிய சக்திகளை அணி திரட்டுவதில் தோழர் மணியம் காட்டிய முன் உதாரணத்தைப் பின்பற்றி அவர் இட்ட பணியைத் தொடர்வதே அவரைப் நினைவுகூர்வதன் அர்த்தமாக அமைய முடியும்.

கொழும்பு. - சிறி

# சத்தியமனையில் குடியிருந்த சத்தியவான்

திரு. கே. ஏ. சுப்பிரமணியம் அவர்களது மரணத்தால் இந்த மண் நல்லதொரு மனிதரை இழந்து விட்டது அரசியல் பெரும்பாலும் பல மனிதர்களின் மனங்களில் வக்கிரங்களை வளர்த்து விடுவதை நாம் கண்டுள்ளோம். ஆனால் ''அழுக்குப்படிந்த விளையாட்டு'' என ஆங்கிலேயரால் பட்டம் சூட்டப்பட்ட அரசியலால் கூட திரு. சுப்பிரமணியம் அவர்களில் அழுக்கைப் 'பிரட்டிவிட'' முடியவில்லை; அவர் அப்பழுக்கில்லாத மனிதராகவே இறுதி வரை விளங்கினார்.

தம்மைத் திருத்திக் கொள்வதற்கென்றும் சேர்த்து எழுதுவாரும் பேசுவாரும் அரிதாகி விட்ட இவ்வுலகில் பேசியபடி வாழ்ந்த ஒரு சிலரில் இவரும் ஒருவராக இருந்தார். தொலைவில் இருந்து நோக்குகையில் பகட்டாய் மின்னிக்கவரும் பலர் அருகே சென்று பழகுகையில் சுயத்தைக் காட்டிச் சுருங்கி விடுவர். ஆனால் இந்த மனிதர் நாம் நெருங்கி நெருங்கிப் பழகப் பழகப் பரந்து விரிந்து உயர்ந்து நின்றார் இது எல்லோருக்கும் சாத்தியமான ஒன்றாக அமைந்து விடுவதில்லை, சுயசிந்தனையும், சுதந்திர உள்ளமும், நேர்மையும், நேசமும் கொண்ட ஒருவருக்கு மட்டுமே இது இயலுமான, இயல்பான, ஒன்றாக அமையும் எத்தனைப் பெரியதுன்பத்தையும் ஏற்று, விழுங்கி, சீரணித்து விட்டுத், தனக்கு எதுவும் நேராதது போல இன் முகத்தோடிருக்க அவருக்கு மட்டும் தான் தெரிந்திருந்தது. துன்பத்தால் அவரைத் துயருறுத்தமுடியவில்லை. அடக்குமுறையால் அவரை அவலமுறச் செய்யமுடியவில்லை, நோயாலும் அவரை நலிவடையச் செய்யமுடியவில்லை: காரணம், அவற்றால் அவரது உயர்ந்த உள்ளத்தை, பண்பட்ட நெஞ்சத்தை எட்டித் தொடவும் முடியவில்லை. ஒரு ஞானிக்குரிய பற்றற்ற, பரிபக்குவ நெஞ்சத்தால் நிறைந்து நிமிர்ந்து நின்றவர் அவர். அதனால் அரசியலுக்கும் அப்பாற்பட்டு, அனைவரையும் அரவணைத்து, மானுடம் என்ற குன்றேறி நெடிது நின்றார்.

அவர் மேலும் ஐம்பத்தெட்டு ஆண்டுகள் வாழத்தகுதியுடையவர்: ஆயினும் ஐம்பத்தெட்டு ஆண்டுகளுள் ஆயிரம் உள்ளங்களுக்குள் தன்னைக் குடியிருத்திவிட்டு அவர் போய்விட்டார் அந்த உள்ளங்கள் அவரை மேலும் பல்லாயிரம் உள்ளங்களுக்குள் குடியிருத்தும். இந்த எண்ணம் ஒன்றே எமக்கு ஆறுதலைத்தருகிறது.

திருநெல்வேலி

ம. சண்முகலிங்கம்

# அவரது கனவு எப்பொழுது நனவாகும்?

இக்கட்டான இன்றைய நிலையில், வடபகுதி இடது சாரி இயக்கத்திற்கு தோழர் கே. ஏ. சுப்பிரமணியத்தின் மறைவு மேலும் நெருக்கடியை ஏற்படுத்தியுள்ளது.

தோழர் சுப்பிரமணியம் தன் வாழ் நாள்முழுவதும் உழைக்கும் மக்களுக்காக, அடக்கி ஒடுக்கப்பட்ட மக்களுக்காக போராடிவந்தார். அவருடைய போராட்ட வாழ்க்கையைப் பற்றி நான் அதிகம் கூறவேண்டியதில்லை. ஏனென்றால் பலராலும் நன்றி அறியப்பட்டஒன்றே.

தனிப்பட்டமுறையில் அவரது மறைவால் நான் ஓர் உண்மையான நண்பனை இழந்துவிட்டேன். இதை எழுதும் போது அவரது சிரித்தமுகம் எனது அக்ககண்முன்தோன்று கின்றது.

மனம் விட்டு நாம் இருவரும் பல விடயங்களைப்பற்றி அரசியல் உட்பட கதைப்போம். தனது கருத்தை விட்டுக் கொடுக்காத போதிலும், மற்றவர்களின் அபிப்பிராயங்களை செவிமடுக்கும் மனப்பக்குவம் அவரிடம் இருந்தது:

அவர் கனவுகண்ட சமுதாயம் நனவாகமுன்பு அவர் காலமாகிவிட்டார்.

ஆனால் அவர் போன்றோர் மேற்கொண்ட முயற்சிகளால் அந்த இலட்சிய சமுதாயம் உருவாகும் நாள் நெருங்குகிறது.

அந்த நாள் எந்நாளோ;

யாழ்ப்பாணம் ஏ. ஜே. கே.

Added later in 2012 : யாழ் பல்கலைக்கழகத்தில் ஆங்கில மொழித்துறையில் கடமையாற்றிய பிரபல கலை இலக்கிய விமரிசகர் ஏ.ஜே.கனகரத்னா

# நடைமுறை சார்ந்த வாழ்க்கைமுறை

1975 ம் ஆண்டளவில் காலஞ்சென்ற எனது கணவர் கைலாசபதி அவர்கள் தனது நெருங்கிய தோழரான திரு. கே. ஏ. சுப்பிரமணியம் அவர்களை எங்களுக்கு அறிமுகம் செய்து வைத்தார். முதன் முறையே அவருடைய எளிமையான தோற்றமும், இனிய சுபாவமும் எங்கள் எல்லோரையும் கவர்ந்தது அவர் அப்பொழுது வெறுங்காலுடன் வந்திருந்தார். "மாமா வெறுங்காலுடன் இந்த வெய்யிலில் வந்திருக்கிறார்" என்று எமது பிள்ளைகள் அங்கலாய்த்தனர். அவர்களுடைய அன்பு நச்சரிப்பால் அவர் பின்னர் செருப்புப் போட்டு வருவார். அவருடைய எளிமைக்கு இது ஒரு சிறு எடுத்துக்காட்டு.

கைலாசபதியும் திரு. சுப்பிரமணியமும் இரண்டு வயது வித்தியாசமுடைய சமகால அரசியல் தோழர்களாயிருந்தனர். இருவரும் தேசிய சர்வதேசிய அரசியல் விவகாரங்களில் இறுதிக் காலம் வரை ஒத்தகருத்தைக் கொண்டவர்களாகவே இருந்து வந்திருக்கின்றனர். அந்த வகையில் ஒருவரை ஒருவர் புரிந்து கொண்டும் பரஸ்பரம் மதித்தும் வந்துள்ளதைக் காணக் கூடியதாக இருந்தது.

இவர் பேச்சளவில் மட்டும் ஒரு கம்யூனிஸ்ட்டாக இருக்காமல் தனது வாழ்விலும், நடவடிக்கைகளிலும் அதனை நிரூபித்து வந்தார். அவர் எமக்கு பெரும் அரசியல் தத்துவார்த்த படைப்புக்களை விட்டு செல்லவில்லை. ஆனால் நடைமுறை சார்ந்த ஒரு வாழ்க்கை முறையையும் வளமுடைய போராட்ட அனுபவங்களையும் விட்டுச் சென்றுள்ளனர், இவரது வாழ்வு ஒவ்வொரு கம்யூனிஸ்டுக்கும் ஒரு சிறந்த வழிகாட்டியாக அமையும் என்பதில் ஐயமில்லை.

திருநெல்வேலி

திருமதி ச. கைலாசபதி

# ஓர் இணைப்பு பாலமாக அமைந்தவர்

தோழர் சுப்பிரமணியத்தின் மறைவு வடக்கிலும், தெற்கிலும் இயங்கிக் கொண்டிருந்த முற்போக்கு சக்திகளின் நடவடிக்கைகளுக்கு ஏற்பட்ட ஒரு பாரிய பெரும் இழப்பு என்பதை எல்லோருமே ஏற்றுக் கொள்வர்.

கடந்த முற்பத்தைந்து வருடங்களுக்குள்ளாக தென்னிலங்கையில் வதியும் தமிழ், சிங்கள முற்போக்குச் சிந்தனையுடைய மக்கள், தங்களது இழக்கப்பட்ட ஜனநாயக உரிமைகளுக்காக நடத்திய வெகுஜன போராட்டங்களின் போது, தமிழ் மக்களின் குறிப்பாக வடக்குகிழக்கு மக்களின் சுயநிர்ணய உரிமையையும் பொருளாதார வாழ்வுப் போராட்டத்தையும் சிறுபான்மை சமூகத்தின் நல்வாழ்வுக்கான கிளர்ச்சியையும் ஒன்றிணைப்பதற்காக எடுத்த முயற்சியை யாரும் மறந்து விடமாட்டார்கள்.

தோழர் கே. ஏ. சுப்பிரமணியம் சமூகத்தில் அடிமட்டத்தில் உள்ள முற்போக்கு எண்ணங்கொண்ட வாலிபர்களை ஒன்று திரட்டவும் கீழே தள்ளப்பட்டிருந்த தாழ்த்தப்பட்ட மக்கள் மத்தியில் தொடர்பு கொண்டு அவர்களது உரிமைக்கு குரல் கொடுக்கவும் முன்வந்தார் என்றால் அவரது அபாரமான மனோ திடத்தையும் உறுதியையும் என்னென்று கூறுவது.

இன்று தமிழ் மக்களை குறிப்பாக வடகிழக்கு மக்களை தங்களது பாரம் பரிய பண்டைய நாகரீகத்திற்கு உரிமை கொண்டாடி - புகழ் பாடிய மக்களை துப்பாக்கி நாகரீகம் துர்ப்பாக்கிய சமூகமாக மாற்றியுள்ள இச்சமயத்தில் மனோ தைரியமும், தெளிவான அரசியல் சிந்தனையும், தேசிய ஐக்கியத்தை அடிப்படை நோக்கமாகக் கொண்ட தோழர் கே. ஏ. சுப்பிரமணியத்தைப் போன்ற அரசியல் வாதிகள் நம்மைவிட்டு சென்றுவிட்டதை நினைவுகூறும் போது இந்த வேதனையை யாருடன் பகிர்ந்து கொள்வது என்பதை என்னால் தீர்மானிக்க முடியவில்லை.

கொழும்பு

மரிய தாஸ்

# தோழர் சுப்பிரமணியம் அவர்கள் பொதுவுடமை வாதியாக வாழ்ந்து காட்டியவர்

தலைவர் மா ஓ அவர்கள் கூறியது போல் சிலரது இழப்புக்கள் இறகு போன்றன. சிலரது இழப்புக்கள் மலை போன்றன. தோழர் சுப்பிரமணியம் அவர்களின் இழப்பு இறகு போன்றதல்ல. உண்மையிலே அது மலை போன்றது. அவருடைய இழப்பு நமது தேசத்தில் வாழக் கூடிய தொழிலாளி வர்க்கத்திற்கும், குறிப்பாக தாழ்த்தப்பட்ட மக்களுக்கும் ஈடு செய்ய முடியாத பேரிழப்பாகும்.

அவர், தன்னை மாக்ஸ்ஸிச இயக்கத்தில் இணைத்துக் கொண்ட பின்பு, மாக்ஸ்ஸிச லெனினிச வாதியாகவும், மாவோவின் சிந்தனை யாளருமாக நடைமுறையில் வாழ்ந்து காட்டிய **புரட்சிவாதியாவார்.**

கொள்கை ஒன்று, நடைமுறை இன்னொன்றாக இருக்காமல் கொள்கையை நடைமுறைப் படுத்தியவர், நடைமுறையில் இருந்து கொள்கையை வகுத்துக் கொண்ட **கொள்கைவாதியுமாவார்**

அவர் மக்களை நேசித்த மாமனிதன், மக்களோடு மக்களாய் வாழ்ந்து காட்டியவர், மக்களுடைய அபிலாசைகளில் இருந்து கொள்கைகளை வகுத்து. அந்தக் கொள்கைகளுக்காக மக்களை இணைந்துப் போராடிய **தலைமைப் போராளியுமாவார்.**

அவர் இயக்கத்திற்காக மக்களை வழி நடத்தவில்லை. மக்களுக்காக இயக்கம் நடத்தியவர். உலகத் தொழிலாளர்களே ஒன்று சேருங்கள் என்ற பதாகையை உயர்த்திப் பிடித்து தொழிலாளி வர்க்கத்தின் உரிமைகளுக்காப் போராடிய **இலட்சியவாதியுமாவார்**

தோழர் சுப்பிரமணியம் அவர்கள், ஏகாதிபத்தியத்தின் எச்சரிக்கைகள், பாஸிசத்தின் பயமுறுத்தல்கள், விஸ்தரிப்பு வாதத்தின் மிரட்டல்களுக்கு எதிராக குரல் கொடுத்தது மட்டுமல்ல, தேச ஐக்கியம் பாதுகாக்கப்பட வேண்டும் என்று வலியுயுறுத்தி வந்த **தேசபக்தன் ஆவார்**

அவர் தொழிற்சங்க இயக்கத்தில் தன்னை இணைத்துக் கொண்டு, தொழிலாளர்களால் முன்வைக்கப்படும் கோரிக்கைகளுக்காக தொழிலாளர்களுடன் இணைந்து போராடி உரிமைகளை வென்றெடுத்த **தொழிற்சங்கவாதியுமாவார்**

இவற்றுக்கும் மேலாக வர்க்க பேதம் உள்ள சுரண்டல் சமுதாய அமைப்பை அடியோடு மாற்றி, தொழிலாளிவர்க்கம் விடுதலை பெறவேண்டும் என்று தொடர்ந்து போராடிவந்த **பொதுவுடமைவாதியுமாவார்.**

இந்த மாதிரியான மாமனிதன் இப்போது எங்களோடு இல்லையே என்று நினைக்கும் போது நாம் கவலை கொள்கிறோம், ஆகவே தோழர் சுப்பிரமணியம் அவர்கள் காட்டிய பாதையை முன்னெடுப்பதே நாம் அவருக்கு செலுத்தும் அஞ்சலியாகும்.

**கா. பஞ்சலிங்கம்**
செயலாளர்
நவலங்கா தொழிலாளர் சங்கம்

---

கம்யூனிஸ்டுகள் எப்பொழுதும் விஷயம் ஒவ்வொன்றையும் ஏன் எப்படி என்று ஆராய வேண்டும். தமது தலைகளைப் பாவித்து, அது யதார்த்தத்திற்குப் பொருந்தியதா? இல்லையா: உண்மையில் அது நல்ல ஆதாரமுடையதா, இல்லையா என்று கவனமாகச் சிந்திக்க வேண்டும். எவ்விதத்திலும் ஒன்றைக் குருட்டுத்தனமாகப் பின்பற்றி அடிமைத்தனத்தை வளர்க்கக் கூடாது.

**மாஓ சே துங்**

# கே. ஏ. நாமம் நிலைத்திருக்கும்

கடந்த காலங்களில் இவர் இடது கம்யூனிஸ்ட் கட்சியின் பொதுச் செயலாளராகக் கடமை புரிந்து நீதியாக மக்களின் தேவை அறிந்து செயலாற்றியது எமது நெஞ்சங்களில் நினைவுச் சின்னங்களாகப் பதிந்துள்ளது. மேலும் தெல்லிப்பளையில் கடந்த 27 ஆண்டுகளுக்கு முன்பு எமது தெல்லிப்பளை முற்போக்கு ஐக்கிய வாலிபர் கழகம் நடாத்திய சாதி ஒழிப்புப் போராட்டத்திற்கு தகுந்த முறையில் எவ்வாறு போராட்டத்தைக் கொண்டு செல்வது என்று முறையான நியாயமான ஆலோசனைகளை எமக்கு வழங்கி போராட்டத்தை வெற்றிகரமான முறையில் முன்னெடுத்து முடிப்பதற்கு உதவியமையை நாம் என்றும் நினைவு கூர்வோம். இவருடைய மறைவு எமது சமுதாயத்துக்கு மிகப் பெரிய பேரிழப்பாக அமைத்துள்ளது. இவரைப் போன்று தன் நலம் கருதாமல் மக்களுக்குச் சேவையாற்றக் கூடிய ஒரு மனிதரை இனி நாம் காண்பது மிகவும் அரிதாகவே இருக்கும் இவருடைய 31 ம் நாள் நினைவு தினத்தில் அவர் விட்டுச் சென்ற அறிவுரைகளையும் சேவைகளையும் நினைவு கூர்ந்து நாமும் அவ்வழி செல்வதே நாம் அவருக்கு ஆற்றும் நினைவு அஞ்சலி ஆகும்.

நன்றி

தெல்லிப்பழை

க. கிருஸ்ணமூர்த்தி

# உழைக்கும் மக்களின் உற்ற தோழன்

திரு. கே. ஏ. சுப்பிரமணியம் அவர்களை முதன் முதலாக 1950 ம் ஆண்டு காங்கேசன்துறை சீமெந்து தொழிற்சாலையில் ஒரு தொழில் பயிலுனராகச் சந்தித்தேன். அப்போதே எனது பார்வையில் ஏனைய பயிலுனர்களை விட வித்தியாசமான குணும்சங்களைக் கொண்டிருந்தார். சுப்பிரமணியம் தொழிலாளர்களுடன் மிக அன்னியோன்னமாகப் பழகுவார். அதன் மூலம் எல்லாத் தொழிலாளர் மத்தியிலும் வெகு விரைவாகத் தொடர்புகளை ஏற்படுத்தி நன்மதிப்பைப் பெற்றதோடு தொழிற்சாலைக்கு வெளியேயும் புதிய கருத்துக்களைப் பரப்புவராகவும் திகழ்ந்தார்.

அதன் பின் கே. ஏ. சுப்பிரமணியம் தோழர் சுப்பிரமணியமாக அரசியல் வாழ்வில் ஈடுபட்டு செயலாற்றத் தொடங்கினுர் அன்று முதல் இன்று வரை தொழிலாளர் வர்க்கத்தின் உரிமைப் போராட்டங்களிலும், உரிமை மறுக்கப்பட்ட ஒதுக்கப்பட்ட மக்களிலும் வெகுசனப் போராட்டங்களிலும் தலைமைப் பாத்திரத்தை வகுத்து வந்தார் என்ருல் பேச்சளவில் அல்ல செயல்வடிவிலே தான் என்பது மறக்கமுடியாததொன்ருகும். அதனுல் தன் சொந்த வாழ்வில் பல இன்னல்களை, கஷ்டங்களை எதிர்நோக்கினுர். தான் கொண்ட தீர்க்கமான தெளிவான அரசியல் கொள்கைகளில் இருந்து சிறிதளவேனும் வழுவாமல் இறுதி மூச்சுவரை மக்களுக்காக தன் கொள்கைகளை செயல்படுத்தி வந்தார். மற்றைய தோழர்களையும் அப்பணிகளில் ஊக்கமுடன் ஈடுபடதூண்டு கோலாக இருந்தார். அவருடைய விஷேச குணும்சம் சந்திக்கும் எல்லோரையும் தான் ஒரு கொம்யூனிஸ்ட் என்ற பெருமிதத்துடன் அணுகமாட்டார். தான் சந்திப்பவர்களை கொம்யூனிஸ்டுக்கள் என்று தேர்ந்தெடுக்கவும் மாட்டார். அதே வேளை நெருங்கிப் பழகுபவர்களை நாளடைவில் தன் கொள்கைகளைஏற்றுக்கொள்ளச் செய்யும் திறமையைக் கொண்டிருந்தார். அவரது தன்னலமற்ற உழைப்பு உழைக்கும் மக்களுக்கும் தொடர்ந்தும் உழைத்துக் கொண்டே இருக்கும்.

முன்னுள் தலைவர்
இ. சீ. கூ. காங்கேசன்துறை
பொ. தொ. சங்கம்.

ச. கணபதிப்பிள்ளை

# அந்த நாட்களின் நினைவுகள்

இலங்கை கம்யூனிஸ்ட் கட்சியின் (இடது) பொதுச் செயலாளராக செயல்பட்டு வந்த தோழர் கே. ஏ. சுப்பிர மணியம் காலமாகி விட்டார் என்ற செய்தி கேட்டு நாம் ஒரு கணம் திகைத்து நின்றோம். அவரது அன்றைய நினைவுகள் எம் மனக்கண்முன் வந்து நின்றன. அன்றைய போராட்டக் களங்களில் ஆற்ற வேண்டிய கடமைகள் பற்றி பொறுப்புக்கள் பற்றி மிகுந்த கவனத்துடன் எமக்கு அவர் அளித்த விளக்கங்களும் ஆலோசனைகளும் எம்மை நிதானமாகவும், வெற்றிகரமான பாதையிலும் வழி நடக்க வைத்தன. அவர் அதிகம் பேசுபவர் அல்லர். ஆனால் சுருங் கக் கூறி ஆணித்தரமாக நினைவில் பதியும்படி அடக்கத் துடன் ஆலோசனை கூறும் தலைமைத் தோழராக செயல் பட்டு வந்த தோழர் கே. ஏ. சுப்பிரமணியம் நெல்லியடி கன்பொல்லை தேனீர்க்கடைப் போராட்டம் மற்றும் ஆல யப் பிரவேசப் போராட்டங்களில் காட்டிய நிதானமான வெகுஜனப் போராட்ட வழிமுறைகள் என்றும் எமது மக் களின் நினைவைவிட்டு அகலாது. எமது ஆழ்ந்த அஞ் சலியை இவ்வேளை தெரிவித்துக் கொள்கின்றோம். நீடு வாழ்க அவரது புரட்சிகர நாமம்.

நெல்லியடி கன்பொல்லை மக்கள்

நெல்லியடி,
கரவெட்டி.

# மதிப்புக்குரிய 'அப்பா'வுடனை இறுதி நாட்கள்.....

எழில் கொஞ்சும் மலையக மண்ணின்மீது கதிரவன் தன் கதிர்களைப் பரப்பி பொழுதின் விடியலை உறுதியுடன் உணர்த்திக் கொண்டிருந்தான். வழமையாக அதிகாலையிலேயே எழுந்து வாசிக்கின்ற, எழுதுகின்ற அப்பா அன்று (26-11-89) ஏனோ எழுந்திருக்கவில்லை. நான் அவரிடம் அணுகி என்ன களைத்துப்போய் இருக்கின்றீர்கள்? உங்களுக்கு ஏதும் சுகயீனமா? என்று கேட்டபோது ''எனக்கு ஒன்றுமே இல்லை. நான் நன்றாகத்தான் இருக்கின்றேன்'' என்று கூறி எழுந்திருந்து அருகேயிருந்த புத்தகத்தைத் தட்டிப்பார்த்தார்.

எப்பொழுதுமே வருத்தத்தை அவர் கவனத்தில் எடுத்துக் கொள்வதில்லை. எமது வற்புறுத்தலின் பேரில்தான் வைத்தியசாலை செல்ல அனுமதிப்பார். அதில்கூட தனக்கு ஏதாவது முக்கியமான வேலைகள் இருப்பின் அவற்றைச் செவ்வனே செய்து முடிக்கத் தேவையான கால அவகாசத்தின் பின்புதான் திகதியைத் தீர்மானிப்பார். இவ்வாறு கூறிய திகதிகளுக்கு முன்னரே அவர் சுயநினைவை இழந்த சந்தர்ப்பங்களும் உண்டு. இதனால் இத்தடவையும் அவரது விருப்பத்திற்கு மாறாகவே வைத்தியசாலைக்கு அழைத்துச் சென்றோம். ஆனாலும் பிரயாணத்தின்போது வழமை போலவே நெஞ்சை நிமிர்த்தி எந்தவிதமான சோர்வுக்கும் இடம் கொடுக்காது உற்சாகமாகவே இருந்தார்.

வைத்தியசாலைக்கு வந்ததின் பின்பு படிப்படியாக அதிகமாகவே களைப்படைந்து காணப்பட்டார். இவ்வேளையில் கீர்த்தியண்ணாவும் அவ்விடம் வந்து சேர்ந்தார். மறுநாள் பரீட்சை இருந்த காரணத்தினால் மன விருப்பின்றியே இரவு அப்பாவைப் பிரிந்து சென்றேன். என்றாலும் கடந்த சில மாதங்களில் அவருக்கு ஏற்பட்ட இதனிலும் மோசமான உடல்நிலையில் இருந்தும் வெற்றி கொண்ட அப்பா இத்தடவையும் வெற்றி கொண்டு விடுவார் என்ற அசைக்கமுடியாத நம்பிக்கையுடன் வீடு திரும்பினேன்.

பரீட்சை முடிந்தவுடன் ஆவலுடன் வைத்தியசாலைக்கு வந்து பார்த்தபோது அப்பாவினது உடல்நிலை மேலும் பாதிப்படைந்து முழுமையான மயக்கநிலையில் எவ்வித அசைவுமின்றி இருந்தார். சுவாசத்திற்குத் தடையாகச் சளி தொண்டையை நிரப்பிக்கொண்டிருந்தவேளை திடீரென சுமார் 5 மணியளவில் இடது கையை

உயர்த்தி விடைபெற்றுக்கொண்டார். கண் விழித்தார்... அவ்வளவுதான்.

ஐயோ! என்று நாம் அழக்கூடாது. ஏனெனில் அப்பாவின் ஒவ்வொரு அசைவிலும் அநேக பாடங்களைக் கற்றுக்கொள்ள வேண்டியவர்களாக இருக்கிறோம். எந்தவொரு பயமுறுத்தலுக்கோ ஏன்? கொடிய நோய்க்கோ தலைசாயாத அம்மாமனிதன் இன்று 'இல்லை' என்பதை என்னால் ஜீரணிக்கமுடியவில்லை.

1987ம் ஆண்டின் பிற்பகுதியில் இருந்து தனது முழங்கால்களுக்குக்கீழ் எத்தகைய உணர்ச்சியும் அற்றிருந்த போதிலும் சாமர்த்தியமாக நடந்தார். பிரயாணம் செய்தார். ஏன் வெற்றிகரமாக சைக்கிள் கூட ஓடியிருக்கின்றார். தனது கால்கள் உணர்விழந்து விட்டதை அவர் யாருக்குமே கூறவில்லை. கூறினாலும் நம்பமுடியாத அளவுக்குத் தனது பாதங்களையோ விரல்களையோ அசைக்கமுடியாத நிலையிலும் சாவதானமாக நடமாடிய அவரது மனவலிமை ..

வைத்திய நிபுணரின் மிகக் கடுமையான எச்சரிக்கையையும் மீறி இறுதிவரை பத்திரிகைகள் வாசித்து வந்த அவர் ஈ.எம்.எஸ் நம்பூதிரிபாட் அவர்களின் 'ஓர் இந்தியக் கம்யூனிஸ்டின் நினைவலைகள்' என்ற நூலைப் படித்துக்கொண்டிருந்தார்.

1989 நவம்பர் 1ம் திகதி கொழும்பு நூலகத்தில் இடம்பெற்ற மக்கள் சீனப்புத்தகக் கண்காட்சியில் தனது பழைய தோழர்கள், நண்பர்களுடன் மிகவும் உற்சாகமாகச் சுமார் ஒன்றரை மணித்தியாலங்களுக்கும் மேலாக நின்ற நிலையிலும், நடந்து கொண்டும் கதைத்துக்கொண்டிருந்ததைக் கண்டு யார்தான் அதிசயப்படாதிருக்கமுடியும்.

அப்பா இறுதியாக (20-11-89) எழுதிய கடிதம் சி. ராஜேந்திரன் அவர்களுக்குரியது. அதில் டிசம்பர் 10ம் திகதி கொழும்பில் நடைபெற இருக்கும் கூட்டத்திற்குத் தான் வருவேன் என்பதை மிகவும் உறுதியாக எழுதியிருந்தார்.

இந்த மண்ணையும் மக்களையும் வாழ்வையும் நேசித்த அவரது இத்தகைய வாழ்முறை எம் எல்லோருக்கும் விடிவிளக்கு என்பதுடன் அவர் அடிக்கடி கூறும் ஹங்கேரியக் கவிஞன் பெட்டோஃபியின்,

''ஒளிவிடும் விண்மீன் வருவதும் உறுதி
சூழ்ந்திடும் இருளும் அகல்வது உறுதி''

என்ற நம்பிக்கையுடன்

க/இந்து சிரேஷ்ட வித்தியாலயம்,
கண்டி.

க. அகிலன்
மாணவன்

# மணியத்தின் மொழி என்றும் "பொய்யா மொழி"

## பிறந்த மண்ணில்

மணியத்தின் இளமைக்காலம் மிகக்குறுகியது. ஆயினும், அவர் பதித்த தடங்கள் மிக ஆழமானது.

திரு. சுப்பிரமணியம் அவர்கள் 1949ம் ஆண்டளவில் மாக்சிய-லெனினிய கருத்துக்களினால் ஆர்ச்சிக்கப்பட்டார். மேலும், உண்மையின் தேடல்களில் சதா உழலத் தொடங்கினார். சமூகக்குறைபாடுகளின் ஆணிவேரைக் கண்டறியாது மேலே படர்ந்துள்ள தூசிகளைத் துடைத்து எறிவதினால் மட்டும் எதுவித மாற்றங்களும் நிகழப்போவதில்லை என்பதை உணர்ந்து கொண்டார்.

அமரர் மணியம் அவர்கள் முற்போக்குக் கருத்துக்களில் மனங்கொண்டு தோழர்கள் பொன் கந்தையா, கார்த்திகேயன், வைத்திலிங்கம் போன்றவர்களிடம் பெற்ற கருத்துக்களையும், தத்துவார்த்த நூல்களில் படித்தறிந்த சிந்தனைகளையும் கிராமத்து இளைஞர்களுக்குப் புகட்டி அறிவு ரீதியிலான அவர்கள் வளர்ச்சியிலும் அக்கறை கொண்டிருந்தார்,

தேசிய, சர்வதேச அரசியல், அன்றைய யுத்த முடிவில் சமுதாயம் சந்தித்த இழப்புகள் ஆகியவற்றைத் தெரிந்து கொள்ளவும் சமுதாயப் பொறுப்புக்களை அறிந்து கொள்ளவும் வைத்தார். கிராம மக்கள் அறிவை வளர்த்துக்கொள்ள ஆக்க விடயங்களை அலசி ஆராய்ந்து அவற்றை முன்னெடுக்க, கிராம மட்டத்தில் சமூக ஒன்றிணைவுக்கான ஸ்தாபனம் ஒன்றின் அவசியத்தினை நன்குணர்ந்த மணியம் அவர்கள், அதனைக் கிராம மக்களுக்கும் உணர்த்தி வாசகசாலை ஒன்றினை உருவாக்கினார். அந்நிலையம் கிராம முன்னேற்றச் சங்கமாக முன்னிலை பெற கிராம மக்களுடன் இணைந்து அயராது உழைத்தார்.

உண்மையான சமூகக் கடமைகள் எவை? என்பதை நன்கு ணர்ந்த மணியம் அவர்கள் அவ்வழியில் மக்களையும் அழைத்துச் செல்வதில் சிறந்த வழிகாட்டியாய் இருந்தார். தனது கருத்துக் களை ஏற்கவேண்டும் என்ற நிர்ணயத்துடன் உறவாடியவரல்லர். கருத்து வேறுபாடுகளை முரண்பாடுகளாக்கிக் கொள்ளாதவர். எவ ருடனும் முரணித்துக் கொள்ளாது எல்லோருடனும் மிக நேசமாக உறவாடியவர். அவர் முரண்பாடுகளைப் புரிந்துணர்வுகளோடு எதிர்கொண்ட விதம் எல்லோருக்குமே முன்மாதிரியானது. இவ ரது வாழ்க்கையானது, சமூக ஊடாட்டத்தை மற்றவர்களும் சரி யாக அறிந்து கொள்ள இலக்கணமாய் அமைந்துவிட்டது. எதை யும் மிக நிதானமாகச் சிந்தித்துச் செயலாற்றத் தன்னைப் பழக் கிக்கொண்ட மணியம் அவர்கள் பின் விளைவுகளையும் முன்னு ணர்ந்து தக்கவழியில் மக்களை வழிப்படுத்த வல்லவர். 'பொய்யா மொழி' என மிக அன்பாக எல்லோராலும் அழைக்கப்பட்டார்

மணியம் ஒரு மனிதாயவாதி. அவரின் இழப்பு
மனுக்குலத்திற்கு ஒரு பேரிழப்பு.

ச. நகுலேஸ்வரன்
(தலைவர்)

கிளை, வளர்மதி சனசமூக நிலையம்,
கொல்லங்கலட்டி.

மனிதகுல வரலாற்றில் மனிதர்கள் விலங்கு உலகத்திலிருந்து தோன்றுவதற்கும், சமூகங்களாக இணைவதற்கும், அவர்கள் சிந் தனையை வளர்ப்பதற்கும், சமூக உற்பத்தியை ஒழுங்கமைப்பதற் கும், இயற்கைச் சக்திகளை எதிர்த்து ஒரு வெற்றிகரமான போராட்டத்தை நடத்துவதற்கும், நாம் இப்போதுள்ள முன் னேற்றத்தை அடைவதற்கும் உதவி செய்த சக்திகளுள் பேசும் மொழியும் ஒன்றாகும்.

ஜே. வி. ஸ்டாலின்
மார்க்சியமும் மொழியியலும்

# உங்களை என்றும் மறவோம்!

எங்கள் அன்புக்கும் மதிப்புக்கும் உரியவரும், உயர்ந்த இலட்சியத்திற்காக - பொதுவாழ்வுக்காக அரும்பாடுபட்டு வந்தவருமான தோழர் கே. ஏ. சுப்பிரமணியம் (பொதுச்செயலாளர்) அவர்களின் இறப்புச் செய்தி எங்களை ஆழ்ந்த துயரநிலைக்கு உள்ளாக்கியது.

நீண்ட காலமாக சொந்த வாழ்வை முதன்மைப்படுத்தாது பொது வாழ்வு என்னும் இலட்சியப் பயணத்தை மேற்கொண்டு அடக்கி ஒடுக்கப்பட்ட மக்களின் விடிவிற்காக, மறுவாழ்வுக்காக அரும்பாடுபட்டுவந்த அவரது காலங்களை நாம் என்றும் மறக்க முடியாது.

எமது கிராமம் வடபகுதியிலேயே பின்தங்கிய கிராமங்களில் ஒன்று. அன்றாட உழைப்பாளிகளைக் கொண்ட எமது கிராமத்தை தலை எடுக்கவிடாது பல்வேறு வழிகளாலும் அமுக்கி வந்த 1979-ம் ஆண்டுச் சூழலிலேயே இலங்கை கம்யூனிஸ்ட் கட்சியின் (இடது) தொடர்பு எமக்கு ஏற்பட்டது. தோழர் பொதுச் செயலாளர் எம்மை விட்டுப் பிரிந்த அதே நாட்களில் எமது கிராமத்திற்கும் - கட்சிக்கும் தொடர்பு ஏற்பட்டதன் பத்து ஆண்டுகள் நிறைவு பெறுகின்றன. ஆனால் அப் பத்து ஆண்டுகளில் உழைக்கும் மக்களைக்கொண்ட புறக்கணிக்கப்பட்டு அடக்கி ஆளப்பட்ட ஒரு கிராமம் தனது சொந்தக் கால்களில் எழுந்து நின்று, தன் பலத்தைக் கட்டியெழுப்பி நிதானமாக வழிநடந்து, சாதனைகள் பலவற்றை நிலைநாட்டி முன் சென்று கொண்டிருக்கிறது என்றால் அதன் உயிர்நாடி இடது கம்யூனிஸ்ட் கட்சியின் தலைமைத்துவமும் வழிகாட்டலும் தான் என்பதை யாருமே மறுக்கமாட்டார்கள். அத்தகைய உயிர்நாடிக் கட்சியின் பொதுச்செயலாளராகச் செயற்பட்டுவந்த தோழர் மணியம் எமது கிராம மக்களின் - இளைஞர்களின் வழிநடப்பிற்குக் கற்றுக் கொடுத்த நிதானமான இலட்சியப் பயணம் என்றும் முடிவடையாது, பழைய வேம்பிராய் புதிய வேம்பிராயாக எழுந்துநிற்று விறுநடை போடுவதற்குத் தோழர் மணியமும், கட்சியும் ஏனைய தலைமைத் தோழர்களும் ஆற்றிய பங்களிப்பை எமது கிராம மக்

கள் தலைமுறைதலைமுறையாக நினைவு கூருவார்கள். தோழர் மணியம் எமக்கு அடிக்கடி நினைவுபடுத்தி வந்தது யாதெனில் "நாம் இதுவரை சாதித்தவை மிகமிகச் சிறியவைகள் தான், சாதிக்க வேண்டியவை நிறைய இருக்கின்றன. அவை ஒரு நீண்ட போராட்டத்தினூடாகவே சாதிக்கப்படக்கூடியவை. அதற்கு மக்களைச் சரியான பாதையில் மேன்மேலும் அணிதிரளச்செய்ய வேண்டும். இதற்கு ஒரு கிராமம் மட்டும் போதாது. பலபத்து, பலநூறு கிராமங்களை உருவாக்கவேண்டும் என்பதாகும்.

இவ்வாறு உழைக்கும் வர்க்கத்தின் மறுவாழ்வுக்காகச் சதா சிந்தித்து சதா செயல்பட்டு வந்த எமது வழிகாட்டியான ஒரு தலைமைத்தோழரை இழந்து விட்டமை பெருந்துயரே. அத்துயரால் வரும் துக்கத்தை பலமாக மாற்றி மேலும் பன்மடங்கு வேகத்துடன் அவரது உயர்ந்த இலட்சியப் பயணத்தைத் தொடர்வோம். இறுதிவரை தொடர்வோம் என இவ்வேளை சத்தியம் செய்கின்ரேம்.

கலைமதி வீதி, வேம்பிராய் கிராம மக்கள் சார்பாக
புத்தூர். கலைமதி சனசமூக நிலையம்

அடிப்படையில் சோஷலிசக் கோட்பாடுகளை ஆதாரமாகக் கொண்ட ஒன்றும் சோஷலிச விரோத நெறியில் வளர்ந்த மற்றதுமான இருவகைச் சமூகவியல்கள் இன்றைய உலகில் உள்ளன எனலாம். இதனை மேலும் நுனித்து நோக்கினுல் உலகைப் பற்றிய இருவகைக் கண்ணோட்டங்களின் வெளிப்பாடாயும் பிரதிநிதிகளாயும் இவ்விரு சமூகவியல்களும் அமைந்துள்ளன என்பதில் ஐயமில்லை

க. கைலாசபதி
சமூகவியலும் இலக்கியமும்

# மானுடத்தின் இலக்கணம்
# தோழர் மணியம்

இப்பூவுலகில் மனித வாழ்க்கை என்பது இலக்கியமாகக் கருதப்படுமாயின் தோழர் மணியம் அவர்களது வாழ்வு அதன் இலக்கணமாய் அமைந்துவிடுகிறது.

சர்வ வியாபக உண்மையாகிய மாக்சிஸ - லெனினிசத்தைத் தனது வாழ்வில் சத்திய சோதனையாக இணைத்துக்கொண்டார்.

மூன்றும் உலக நாடுகளில் நிலப்பிரபுத்துவ, முதலாளித்துவ, நவகாலனித்துவ ஆதிக்கப் பிடிப்புக்குள் ஆளுமை இழந்துவாழும் மக்கள் மத்தியிலே, ஆளும் அரசியல் அடாவடித்தனங்களுக்கு அப்பால் வாழும் அரசியல் முறையை வகுத்துக்கொண்டவர்.

அடக்குமுறை எந்த வடிவத்தில் வந்தாலும் அதனை நேர் நின்று முகங்கொடுத்து அதற்கெதிராகப் போராடுவதே ஒரு கம்யூனிஸ்டின் கடமை எனக்கருதியவர்.

பாசிச வெறிக்கெதிராகப் போராடிய யூலியஸ் பியூசிகின் ''இன்பத்துக்காக வாழ்கிறேன், இன்பத்துக்காகப் போராடுகின்றேன், இன்பத்துக்காக மரணத்தை எதிர்கொள்கிறேன்'' என்ற இலட்சிய வேட்கையை எதிர்கண்டவர்.

ஒரு கம்யூனிஸ்டின் உள்ளம் மகா சமுத்திரம் போல் ஆழம், அகலம் உள்ளதாக விளங்கவேண்டும் என்ற விருப்பமுடையவர்,

ஸ்தாபன அரசியல் முறையினைப் பற்றிப்பிடித்தவர். சுய விமர்சனம், விமர்சனம் என்பவற்றால் புடம் போடப்பட்டு அராஜகம் - பாசிஸம் - சந்தர்ப்பவாதம் - ஒருமுனைவாதம் - கதவடைப்பு வாதம் ஆகியவற்றுள் ஆட்படாது ஜனநாயக மத்தியத்துவம் ஸ்தாபனத்தினுள் பேணப்படவேண்டும் என உறுதியாக நின்றவர்.

கட்சி அமைப்பிற்கு வெளியேயும் வேறு ஸ்தாபனங்களிலும், தனி நபர்களாகவும் கூட கம்யூனிஸ்டுக்கள் வாழுகின்றார்களென எண்ணிச் செயற்பட்டவர்.

வர்க்க சமுதாயத்தில் வேறுபட்ட வர்க்கங்களைப் பிரதிநிதித்துவப்படுத்தும் விதத்தில் கட்சிகள், அமைப்புக்கள், இயக்கங்கள் விளங்கும் என்பதனால் மனித சமுதாயத்தின் பொதுப்போராட்டத்தில் ஐக்கியமும், போராட்டமும் என்ற விஞ்ஞான நடைமுறையைப் பிரயோகித்தவர்.

நிலப்பிரபுத்துவத்தின் எச்சசொச்சமான சாதிமுறைமைக்கு எதிராக வாழ்ந்தவர். சாதிவெறியினால் விளைந்த சாதிஒடுக்குமுறைக்கெதிராக உடனடிப் போராட்டத்தைத் தொடுத்தவர். காலத்தின் நோக்கிலேயே சாதிவேறுபாடு களையப்பட வேண்டியதெனினும் தன்னையும் தான் சார்ந்த குடும்பம், கட்சி ஆகியவற்றின் நடவடிக்கைகளிலும் முன்னோடியாக சாதியத்தைப் பிரதிபலிக்கும் சடங்கு - சம்பிரதாயங்களைத் தவிர்த்து தமிழ் மக்களின் புதிய கலாச்சாரத்துக்கு வித்திட்டவர்.

இன ஒடுக்கலுக்கு எதிரான தமிழ் மக்களின் போராட்டம் நியாயமானதென்றும், பெருந்தேசியப் பேரின வெறிக்கெதிராக் குறுகிய தேசீயக் கண்ணோட்டம் என்பதற்குப் பதிலாக வர்க்கக் கண்ணோட்டத்தில் தமிழ் மக்களின் விடுதலையை விரும்பியவர்.

மேலாதிக்க நடவடிக்கைகள் எவரால், எச்சந்தர்ப்பத்தில் எந்த வடிவத்தில் மேற்கொள்ளப்பட்டபோதும் அதற்கு எதிராகப் போராடவேண்டும் என்ற திடசங்கற்பத்துடன் குரல்கொடுத்தவர்.

சர்வதேச சமாதான சூழலை விரும்பியவர் நாடுகளின் சுதந்திரத்தையும், இனங்களின் விடுதலையையும் மக்களின் புரட்சியையும் நேசித்தவர்.

மக்களில் - வெகுஜன மார்க்கத்தில் நம்பிக்கை வைத்துச் செயற்பட்டார்.

யதார்த்த சூழலுக்கு அப்பாற்பட்ட சுலோகங்களையோ, அடையமுடியாத கோரிக்கைகளையோ முன்வைத்து அடிபணிந்த நடவடிக்கைகளுக்குள் தன்னைச் சிக்கிக்கொள்ளச் செய்யாதவர். இது விடயத்தில் அவரது செய்யாமை சிறப்புடைத்து.

அரசியல் தலைமை என்பதனை மேடைப்பேச்சு, தேர்தல், பணபலம், பரம்பரை ஆதிக்கம் என்ற வாய்ப்பாட்டுக்குட்பட்டே தமிழ் மக்கள் கண்டறிந்தபோது உண்மை, நேர்மை, தியாகம் என்பவற்றால் அரசியல் தலைவராக உயர்ந்தவர்.

'புனித கம்யூனிஸ்டாகத்' தான் ஒருவரே இறுதிவரை கம்யூனிஸ்டாக வாழ்ந்தவரென்ற வெற்றுப்பெருமைகளுக்கு அப்பால் தன்னைச் சூழக் கம்யூனிஸ்டுக்களை உருவாக்க உறுதி குலையாது உழைத்தவர்.

மக்களுக்காக மடிவது கடினமானது. அதனிலும் கடினமானது மக்களுக்காக வாழ்வது. தோழர் மணியம் மக்களுக்காக வாழ்ந்த மாமனிதர் ஆவார்.

பண்டத்தரிப்பு. பணிப்புலம், சாந்தை வாலிபர்கள்.

# எளிமையான ஒரு தலைவன்

தோழர் அவர்கள் எம் விட்டு மறைந்தாலும் அவர் நினைவு எங்கள் மனத்தை விட்டுப்போகவில்லை. எங்கள் மனதோடு ஒன்றாகக் கலந்து விட்டார். அவர் நாட்டுக்கு ஒரு வல்லவராகவும் வீட்டுக்கு ஒரு நல்லவராகவும் மக்கள் மத்தியில் மக்களுக்கான தேவைகள் செய்யும் தொண்டனாகவும் வாழ்ந்தவர். மக்கள் சேவையே மகத்தான சேவை என்று நடைமுறையில் செய்து காட்டியவர். சாதி என்னும் தீயால் வெந்து கருகி தாழ்த்தப் பட்டு அடக்கி ஒடுக்கப்பட்ட மக்களுக்காக தீண்டாமை ஒழிப்பு வெகுஜன இயக்கம் என்னும் இயக்கத்தை ஆரம்பித்து அதன் ஊடாக சாதி வெறியர்களுக்கெதிராக பலருடன் பல இடங் களில் பல போராட்டங்கள் நாடத்தி வெற்றியீட்டிக் கொடுத்தவர் ஒரளவு சாதி என்னும் தீயை அணைத்தவர். அதற்காக தன் எலும் பையும் சதையையும் பிற்போக்கு வாதிகளின் ஏவல் நாய்களுக்கு இரையாக்கி தன் ஆரோக்கியத்தையே இழந்தவர் இன்னும் பல ஆண்டுகள் வாழ்ந்து சேவை செய்ய வேண்டிய புரட்சிவாதியை இந்த ஆண்டுடன் இழக்க வேண்டிய துர்ப்பாக்கியம் எங்களுக்குக் கிடைத்து விட்டது. ''அவர் உயர் குலத்தில்'' பிறந்தலும் அந்த எண்ணமே இல்லாமல் எங்களில் ஒருவனாக எல்லோருட னும் அன்பாகவும் பண்பாகவும் தோழமையுடனும் பழகி வாழ்ந் தவர். பல்வேறு கட்சிப் பிரமுகர்கள் எம்மத்தியில் வாழ்ந்தார்கள் அவர்கள்யாராலும் எம்தோழரின் இடத்தை பிடிக்கவே முடியாது. ஏன்! என்றால் அவர்களின் போக்கும் பேச்சும் மேடையோடு போய் விடும். நடை முறையில் அல்ல. ஆனால் எமது. தோழர் பல நோக்கங்களை நடைமுறையில் செய்து முடித்துக் காட்டியவர் அதற்கு எடுத்துக் காட்டாக. 'சங்கங்கானைக் என் வணக்கம் சரித்திரத்தில் உன் நாமம் மங்காது யாழகத்து மண்ணில் பல காலம்' என்ற பாட்டின் முதல் வரிகளுக்கே எமது தோழர் தான் காரணமாவார். தோழர் அவர்கள் தனது புரட்சிப் பாதை யில் இறங்கிய காலத்தில் இருந்து இன்று வரை மனம் தளராது உழைத்த உத்தமர் எங்கள் வாழ்நாள் முழுவதும் அவரை மறக்க முடியாது. முதன் முதலாக அவரை கட்சியின் ஒரு பொதுக்கூட்டத்தில் சந்தித்தேன். சுப்பிரமணியம் தோழர் என்று எனது கணவர் சொல்லும் போதெல்லாம் அவரைப் பற்றி பெரிதாக எடைபோட்டு வைத்திருந்தேன். ஏன் என்றால் கட்சித் தலைவர்கள் பிரமுகர்கள் என்றால் மிடுக்குடன் தலைக்கனத்துடன் காணப்படுவார்கள். ஆனால் நான் நினைத்ததற்கு மாறாக அவர் மிகவும் எளிமையுடனும் தூய்மையுடனும் காணப்பட்டார். எனது

கணவர் என்னை அவருக்கு அறிமுகம் செய்த பொழுது அன்பாகக் கதைத்தார். அவரின் கதையிலே ஒரு தந்தையின் பரிவும் தலைவனின் தெளிவையும் காணமுடிந்தது. அன்றிலிருந்து இன்றுவரை அவரில் ஒரு தனி மதிப்பும் மாரியாதையும் உண்டாக காரணமாகியது. அப்படியான ஒரு பொறுப்புள்ள தலைவரை நாங்களும் எமது நாடும் இழக்க நேரிட்டமைக்கு வருந்துகிறோம். மாக்சியம், லெனினிசியம், மாசேதுங் சிந்தனையால் ஊறித் திகழ்ந்த எமது தோழரின் நினைவு எமது உள்ளங்களில் என்றும் புரட்சிகர ஒளிவிளக்காக நிலை பெறட்டும் அவரின் வாழ்க்கை போராட்ட வரலாறு போன்றவைகள் திக்கெட்டும் பரவி, ஒளி வீசட்டும். தோழருக்கு எமது வீர வணக்கம்

கந்தர்மடம்
யாழ்ப்பாணம்

**திருமதி சந்திரா நவரட்ணம்**

---

அடக்கு முறைக்கும் இன ஒடுக்கலுக்கும் உட்பட மக்களின் விடுதலைப் போராட்டத்தை நியாயப்படுத்த அடக்கு முறையும் இன ஒடுக்கலுமே போதுமானவை. அதற்கும் மேலாக நியாயம் காட்டும் நிர்ப்பந்தத்தால் வரலாற்றைத் திரிபுபடுத்தி வெவ்வேறு இனங்களைச் சேர்ந்த மக்களிடையிலான வேறுபாடுகட்கு வரலாற்றுப் பகமை சார்ந்த ஒரு தன்மையை வழங்குவது. உண்மையில் பிரச்சனைக்குத் தீர்வை வலியுறுத்தும் முகமாகப் பிரச்சினையை விவகாரப்படுத்தும் முயற்சியாகும்.

**இலங்கை இன ஒடுக்கலும் விடுதலைப் போராட்டமும்**

---

# தோழர் மணியம் மாமனிதர்

தோழர் சுப்பிரமணியம் இவ்வுலகை விட்டு மறைந்து விட்டார். அவரது உடல் மட்டுமே மறைந்தது. அவரது நினைவுகள் எம்மை விட்டு என்றுமே மறைந்துவிட முடியாது. எளிமை, உறுதி, மக்களை நேசிக்கும் பண்பு இவற்றை அடிப்படையாகக்கொண்டு கட்சியின் கொள்கைகளை நிதானமாகவும், கிராமத்தின் சூழ்நிலைகளுக்கு ஏற்பவும் முன்னெடுத்துச் செல்லும் தலைமைத்துவத் தன்மை தான் தோழர் மணியம் அவர்களையும் நிச்சாமம் - சங்கானை மக்களையும் இரண்டறக் கலக்கவைத்தன.

அன்றைய போராட்டக் களத்தில் எமது கிராமத்திற்கும் மக்களுக்கும் அவர் வழங்கிய நிதானமான உறுதியான வழிகாட்டல் தான் நாம் தலைநிமிர்ந்து மனிதர்களாக உலாவுவதற்கும் ஏனைய முன்னேற்றங்களுக்கும் அடிப்படையானவை என்பதை எமது மக்கள் என்றுமே மறந்துவிட மாட்டார்கள். அது மட்டுமன்றி 1966ம் ஆண்டு ஒக்ரோபர் 21 எழுச்சியை அடுத்து சங்கானைப் போராட்டம் சிறுபொறியாக மூட்டப்பட்டது. அவ்வாறு மூட்டப்பட்ட சிறு பொறியைத் தவறுன வழிமுறைகளில் வழிநடத்தியிருந்தால் அச்சிறு பொறி அது மூட்டப்பட்ட இடத்திலேயே அணைந்திருக்கும். ஆனால் கம்யூனிஸ்ட் கட்சியும் தோழர் சுப்பிரமணியமும் மிகக் கடுமையான போராட்டங்களின் மூலம் அச்சிறு பொறியைப் பாதுகாத்து நிதானமாக முன்னெடுத்ததால் அது சாதி அடக்குமுறைக்கு எதிரான பரந்த காட்டுத்தீயாக மாறி அநீதி, அடக்குமுறை, பாகுபாடு என்பனவற்றைச் சுட்டெரிக்கும் சூழ்நிலை ஏற்பட்டது. எந்த ஒரு விடுதலைப் போராட்டமும் சரியான கொள்கையால், சரியான தலைமையால் வழிகாட்டப்பட்டால் இழப்புகள் குறைவாகவும், வெற்றிகள் கூடுதலாகவுமே இருக்கமுடியும். அன்றைய எமது போராட்டங்கள் இதற்குச் சான்று, இதற்கு கம்யூனிஸ்ட் கட்சியின் கொள்கையும் தோழர் மணியம் போன்றவர்கள் எம்முடன் கூட இருந்து வழிகாட்டியமையும் அடிப்படைக் காரணமாகும்.

மேலும் ஒரு விடயம் என்னவென்ருல் அப்போராட்டங்களில் எமது கிராமத்திலும், வடபகுதியின் பல்வேறு இடங்களிலும் போராட்டங்களில் ஈடுபட்ட பல போராளிகள் கொலைக் குற்றச் சாட்டின் பேரில் பல மாதங்கள் விளக்கமறியலில் அடைக்கப்பட்டு நீதிமன்றங்களில் தூக்குத்தண்டனைக்கு அண்மையாகக் கொண்டு செல்லப்பட்டனர். அவ்வேளை இவ்வழக்குகளை வெற்றிகரமாக நடாத்தும் பொறுப்பு கட்சியினுல் தோழர் மணியத்திடமே ஒப்ப டைக்கப்பட்டிருந்தது. போராளிகளை மீட்டெடுத்துப் பாதுகாக்கும் பொறுப்பை உணவு, உறக்கம் பாராது செயற்படுத்தி ஒருவரையித் தானும் தண்டனைபெற வைக்காது வெளிக்கொணர்ந்தவர் தோழர் மணியம். மக்களுடைய, உழைக்கும் வர்க்கத்தினுடைய தேவைக் காக சட்டத்தை மீறவும் அதேவேளை சட்டத்தைப் பயன்படுத்தவும் அவர் தயங்கியது கிடையாது.

தோழர் மணியம் என்றும் எமது கிராம மக்களால் மறக்கப் பட முடியாத மாமனிதர். அவரது வழியில் புதிய சந்ததி திட முடன் முன்செல்லும் வெற்றிகள் பெறும் என்பதில் ஐயமில்லை.

நிச்சாமம்,
சங்கானை.

கிராம அபிவிருத்திச் சங்கம்
**சரஸ்வதி சனசமூக நிலையம்**

எல்லோரும் சம வாய்ப்புகளோடு இணக்கமாய் சேர்ந்து வாழும் ஜனநாயக சுதந்திர சமூகம் என்கின்ற இலட்சியத்தைப் போற்றுகின்றேன். இந்த இலட்சியத்திற்காக வாழ்வோம், அதனை அடைவோம் என நம்புகின்றேன். ஆயின், தேவைப்படுமானுல் இந்த இலட்சியத்திற்காக சாகவும் தயாராய் இருக்கின்றேன்.

— நெல்சன் மண்டேலா.



17-12-89 அஞ்சலிக் கூட்டத்தில் முதுபெரும் கம்யூனிஸ்ட் தோழர் Dr. சீனிவாசகம் (வயது 81) உரையாற்றுகிறார் தோழர் சி. கா. செந்திவேல் தலைமை தாங்குகிறார்.

A Veteran Communist Leader Dr. S.V. Seenivasagam (81) speaks at commemoration meeting held on 17-12-89



1967ல் அல்பேனியாவில் நடைபெற்ற வாலிபர் மாநாட்டில் தோழர் மணியம் உரையாற்றுகிறார்.

Comrade Maniam delivers his speech at the youth conference held in Albania in 1967

# இளைய தலைமுறையினரை உருவாக்கியவர்

திரு கே. ஏ. சுப்பிரமணியம் அவர்களது மறைவு பற்றிய செய்தி எனக்கு மிகுந்த வேதனையையளித்தது அவர் என்னுடன் பல ஆண்டுகளாக பழகிய இனிய நண்பர். தனக்கும் தனது குடும்பத்தினருக்குமென வாழாது சமூகத்தினரின் நலனுக்கு முன்னுரிமையளித்து வாழ்ந்து வந்தவர். உயர்ந்த லட்சியமும் நோக்கமும் கொண்டு உழைத்து வாழ்ந்த பெரியார்.

இன்றைய காலகட்டத்தில் சமூக பணிகளில் ஈடுபட்ட பலர் ஒதுங்கி செயலற்று இருக்கின்ற நேரத்தில் தான் எடுத்த பணியை இறுதிவரை செய்து முடித்த பெருமை திரு. சுப்பிரமணியத்தைச் சாரும். தான் செய்யும் பணிகள் தொடரவேண்டுமென்ற உன்னத நோக்கத்திற்காக பல இளைய தலைமுறையினரை உருவாக்கியவர் திரு சுப்பிரமணியம். இறுதிக் காலத்தில், நோய்வாய்ப்பட்டிருந்த சமயத்திலும் உழைக்கும் வர்க்கத்தின் விடுதலை லட்சியத்தில் சற்றேனும் அவர் தளரவில்லை. அவரது லட்சியப்பணிகளை தொடர்வதே நாம் எமது இனிய நண்பருக்கு செய்யும் கைமாறாகும்.

வட்டுக்கோட்டை

க. குணரத்தினம்
சட்டத்தரணியும் பிரசித்த நொத்தாரிசும்
சமாதான நீதாவானும் உத்தியோகச்
சார்பற்ற நீதவானும்

# உமது இலட்சியப் பாதையில்..

தோழர் கே. ஏ இன்று நம்மிடம் இல்லை. ஆனால் அவரது நாமம் மக்கள் மத்தியில் என்றும் நிலைத்திருக்கும் அத்துடன் அவர் விட்டுச் சென்ற இலட்சியப் பாதையில் எம்பயணம் தொடரும்.

தோழர் கே. ஏ. அவர்கள் இளமைப் பராயத்திலேயே தன்னை இடதுசாரி இயக்கத்துடன் ஒன்றிணைத்து அடக்கி ஒடுக்கப்பட்ட மக்களின் விடுதலைக்கான-தன் இலட்சியப் பணியை ஆரம்பித்தார்

இலங்கை கம்யூனிஸ்ட் கட்சியில் நடை பெற்ற அரசியல் தத்துவார்த்தப் போராட்டங்களின் போது எப்பொழுதும் தன்னை சரியான கருத்தின் பக்கம் நிலைநிறுத்தி எமது நாட்டின் யாதார்த்த நிலைமைகளுக்கேற்ப கொள்கைகள்- வேலைத்திட்டங்களை வகுப்பதிலும் வெகுஜன ஸ்தாபனங்களை அமைத்து வெகுஜனப் போராட்ட மார்க்கத்தை முன்னெடுப்பதிலும் கட்சியில் முன்னணியில் நின்று செயற்பட்டார்.

இலங்கை கம்யூனிஸ்ட் கட்சி வட பிரதேசத்தில் அரசுக்கு எதிராகவும் ஏனைய சமூக அடக்கு முறைகளுக்கு எதிராகவும் முன்னெடுத்த சகல வெகுஜனப் போராட்டங்களிலும் முன்னணியில் நின்று தீரமுடன் போராடினார். இப்போராட்டங்களின் போது தோழர் கே. ஏ. பலதடவைகள் பொலிசாரால் மூர்க்கத்தனமாக தாக்கப்பட்டார். போராட்ட காலங்களில் அவர் பட்ட அடி உதை சித்திரவதைகளும் அதனூடே ஏற்பட்ட நோய்களுமே அவர் எம்மைவிட்டு விரைவாக பிரிவதற்கு காரணமாயிற்று.

தோழர் கே. ஏ. அவர்களின் மறைவு அன்னாரது குடும்பத்திற்கும். இ. க. கட்சிக்கும் (இடது) மட்டுமின்றி தொழிலாளி வர்க்கத்திற்கும் அடக்கி ஒடுக்கப்பட்ட மக்களுக்குமான பேரிழப்பாகும். அன்னாரின் பிரிவால் துயருறும் அவரது குடும்பத்தார், தோழர்கள், நண்பர்கள் மக்களோடு சேர்ந்து நாமும் எமது அஞ்சலியை உயர்ந்த மதிப்புடன் சிரம் தாழ்த்தி செலுத்துகின்றோம்.

5. 12. 1989

தேசிய கலை இலக்கியப் பேரவை
(சுவிற்சலாந்துக் கிளை)

# உயர்ந்த உணர்வுக்கு ஒரு இலக்கணம்

தோழர் கே. ஏ. சுப்பிரமணியம் அவர்களை 30 வருடங்களுக்கு மேலாக அறிந்து வந்தவர்களில் நானும் ஒருவன். முதன் முதலாக நான் அவரை தனது சமூகத்திலிருந்து வேறுபட்ட சமூகத்தைச் சேர்ந்த ஒரு பெண்ணை வாழ்க்கைத் துணைவனுக தன்னை இணைத்துக் கொண்ட நிலையிலே மணிக்கூட்டு வீதியில் உள்ள ஓர் இல்லத்தில் சந்தித்தேன். தீண்டாமையும் ஒடுக்கு முறைகளும் தலைவிரித்தாடிய அக்காலகட்டத்தில் தனது தாய் தந்தையரின் எதிர்ப்பையும் மீறி அவர் நடத்திக்காட்டிய அத் திருமணம் யாழ்ப்பாணத்தில் உள்ள பல இளைஞர்கள் மத்தியில் பெரும் பரபரப்பையும் ஒருவகை உணர்வையும் ஏற்படுத்தியிருந்தது. இவரைச் சந்தித்த காலத்தில் அவர் வரித்துக் கொண்ட மாக்சிச லெனினிசக் கொள்கை பற்றி எனக்கு எவ்வித அறிவோ அறிமுகமோ இருக்கவில்லை. ஆயினும் அவரின் செயற்பாடுகள் எனது உள்ளத்தில் ஒரு இனம்புரியாத தாக்கத்தை ஏற்படுத்தியிருந்தது. இவரோடு நேரடியான தொடர்பு முதன் முதலாக ஸ்ரான்லி வீதியில் அமைந்திருந்த வீறு மரைக்காயர் அவர்களின் எலக்றிக்கல் தொழிற்சாலையிலேயே ஏற்பட்டது. அவ்வேளை வீறு மரைக்காயர் இந்தியாவில் இருந்து வந்த ஒரு கம்யூனிஸ்டாக் இருந்தார்.

அக்காலத்தில் நான் பெரியார் ஈ.வே.ரா, சி. என். அண்ணுத்துரை போன்ருேரின் சீர்திருத்தக் கருத்துக்களால் பெரிதும் கவரப்பட்ட ஒரு தி. மு, க ஆதரவாளன். இக் காலகட்டத்தில் தான் தோழர் கே ஏ. சுப்பிரமணியம் அவர்கள் செல்வநாயகத்தார் சமூகத்தை இப்படியும் பார்க்கலாமே'' என்று கூறி ஒரு புதிய கோணத்தில் சமுகத்தைப் பார்க்கும் பார்வையை என்னுள் ஏற்படுத்தினுர் அன்றிலிருந்து மாக்சிசத்தைக் கற்பதில் மிகவும் ஆர்வமுள்ளவனுனேன். அதற்குத் தோழர் சுப்பிரமணியம் அவர்கள் பல வழிகளிலும் உதவினுர்.

1969 ம் ஆண்டு மே மாதம் முதலாம் திகதி அரசாங்கத்தால் தடை செய்யப்பட்டிருந்த மேதின ஊர்வலத்தை அன்று தடையை மீறி நடத்துவது என்று கம்யூனிஸ்ட் கட்சி(சீன சார்பு) முடிவெடுத்திருந்த நேரம். அன்று ஊர்வலத்தை நடைபெருமல் செய்யும் பொருட்டு பொலிசார் கட்சித் தலைவர்களை வலை வீசித் தேடித் திரிந்த நேரம். ஊர்வலம் எங்கேயிருந்து எந்தநேரம் புறப்படப் போகிறது என்பதை அறியும் ஆவலில் பொலிசார்

யாழ் நகரின் மூலை முடுக்கெல்லாம் மோப்பம் பிடித்துத் திரிந்த நேரம் பரபரப்பான அச் சூழலில் தோழர் கே. ஏ. சுப்பிரமணியம் அவர்களுடன் யாழ் நகரிலே உள்ள ஒரு இல்லத்தில் தங்கியிருக்கும் வாய்ப்பு எனக்கு ஏற்பட்டது. ஒரே இடத்தில் இருந்த அந்தச் சந்தர்ப்பத்திலும் கூட ஊர்வலம் எங்கேயிருந்து எப்படிப் புறப்படப் போகின்றது என்பதை இறுதி நேரம் வரை அவர் என்னிடம் கூறவில்லை. கட்டுப்பாட்டான அவருடைய இப் போக்கு அவர் மேல் ஒரு தனி மதிப்பையே ஏற்படுத்தியது அன்று அச் சட்ட விரோத ஊர்வலத்தைத் தலைமை தாங்கி தோழர் சுப்பிரமணியம் அவர்கள் முன் சென்ற கம்பீரமும பொலிசாரோடு நேருக்கு நேராக சந்தித்த போது ஏற்பட்ட கலவரமும் அடிதடிகளும் இன்றும் கண் முன் நிழல் போல் தோன்றுகிறது.

1971 ம் ஆண்டு ஏப்பிரல் கிளர்ச்சி நடைபெற்ற காலம் நாடு பூராவும் இலங்கைக் கம்யூனிஸ்ட் கட்சித(சீன சார்பு)தலைவர்களை பொலிசார் தேடித்திரிந்த நேரம். தோழர் சுப்பிரமணியம் அவர்களும் தேடப்பட்ட நேரம் அந்த நிலையிலும் தோழர் சுப்பிரமணியம் அவர்கள் என்னிடம வந்து செல்வநாயகத்தார் தோழர் கார்த்திகேசன் நிலை பற்றித் தெரிந்து வர வேண்டும் என்று கேட்டுக் கொண்டார் நானும் தோழர் சுப்பிரமணியம் அவர்களும் கார்த்திகேசன் இல்லத்தை நோக்கி ஒரு காரில் சென்றோம் அவரின் இல்லத்திற்கு சிறிது தூரத்தில் காரை நிறுத்தி விட்டு நான் மட்டும் கார்த்திகேசன் இல்லத்திற்குச் சென்று அவரின் நிலைபற்றி அறிந்து வந்தேன். தோழர் கார்த்திகேசன் அவர்கள் பாதுகாப்பாக இருக்கிறார் என்ற செய்தி கேட்டும்மட்டும் அவர் துடித்த துடிப்பும் அதன் பின் அடைந்த மகிழ்ச்சியும் நினைவு கூறத்தக்க ஒரு நிகழ்வாகும்.

தான் தேடப்பட்ட அந்த நேரத்திலும் தனது பாது காப்பை விடசக தோழர் ஒருவரின் பாதுகாப்பையே முக்கியமாகக் கருதிய அவரின் உணர்வு உண்மையிலேயே மிக உயர்ந்த ஒரு கம்யூனிஸ்ட் போராளியின் உணர்வாகவே இருக்கமுடியும்.

இவ் இரு சந்தர்ப்பங்களும் என்றும என் மனதில் நீங்காத நினைவுகளாக தோழர் சுப்பிரமணியம் அவர்களை நினைவு கூரும் நிகழ்ச்சிகளாகும்.

யாழ்ப்பாணம் இ. செல்வநாயகம்



தோழர் மணியத்தின் உடல் தகனம் செய்யப்படுவதற்கு முன் கட்சித் தோழர்களின் இறுதி செங்கொடி அஞ்சலி.

Party Comrades dip the Red Flag in a last tribute to the Comrade.



இறுதி அஞ்சலி நிகழ்ச்சிகளின் போது

The end of the journey: Comrade Maniam's body lies in stase as mournersfile past.

# தந்தையின் நினைவாக...

'சத்திய மனைக்கு;

1989- 11- 29 இரவு மலேசிய நேரப்படி எட்டுமணியளவில், இதயத்தை பிளந்து குருதியை கொப்பளிக்க வைக்கும், துயர்மிகு செய்தியை குலேந்தி அண்ணாவின் தொலைபேசி அழைப்பு மூலம் அறிந்து கொண்டேன். என்ன செய்வதென்றே இது வரை புரியவுமில்லை, தெரியவுமில்லை. அறிவின்சிகரமே,... அப்பா......... அன்பின் இலக்கணமே.... அப்பா.................... அப்பா..................... இந்த வார்த்தைக்கு முழு இலக்கணமாக மொத்த வடிவமாக திகழ்ந்த அந்த மாமனிதனை, நடமாடிய இமயத்தை, வரலாற்று நாயகனை நினைந்து நினைந்து. ஒவ்வொரு கணமும் நெக்குருகி, நிலைகுலைந்து கொண்டிருக்கிறேன். செந்தில் மாமாவின் தந்தி, செய்தி கிடைத்தது

அப்பா நீங்கள் வாழ்ந்த வாழ்க்கை; மகத்தானது, மிக மிக மகத்தானது. வரலாற்றில வாழ்ந்து முடிந்த பல, பல வரலாற்று நாயகர்களை, மகத்தான தலைவர்களை, மாபெரும் தியாகிகளை, விலைபோகாத கொள்கை வீரர்களை, வீரத்தின் விளைநிலமாய் திகழ்ந்த போராளிகளை, பற்றி படித்தும், பார்த்தும், கேட்டும் அறிந்திருக்கின்றேன். அவர்களின் பெறுமதி மிக்க மானிட வாழ்க்கை பற்றி வியந்திருக்கின்றேன். ஆனால் அத்தனைபேரினதும் பல, பல குணாம்சங்களை நேரிடையாக உங்களிடம் நான் கண்ட போது தான், நான் என்னை பற்றிப் புரிந்து கொள்ள ஆரம்பித்தேன். உங்களைப் பற்றிய பிரமிப்பே என்னை ஒரு மனிதனாக மாற்றியது.

அப்பா. இளமைத் துடிப்பினால் உங்களின் உயர்ந்த கொள்கைக்கு மாறுபட்ட அரசியல் நடவடிக்கைகளில் ஈடுபட்ட போதும் வேற்றுமையிலும் ஒற்றுமை காண வேண்டும் என்ற துடிப்புடன் என்னால் செயற்படமுடிந்ததென்றால் நீங்கள் கற்றுக்கொடுத்த அரசியல் அறிவினால் தானாகும். சில வேளைகளில் 'கற்றுக்குட்டித்' தனமான தவறுகளை நான் இழைத்தாலும், தவறுகளை உணர்ந்து என்னால் திருந்த கூடியதாகவிருந்தது என்றால் அது நீங்கள் காட்டிக் கொடுத்த வழி ஆகும்.

அப்பா, நீங்கள் ஒரு மாமேதை, நடமாடிய பல்கலைக் கழகம், ஆம், உங்கள் மூலமாகத் தான் நான் உலகைப் புரிந்துகொண்டேன்.

உங்களினுல் தான் மக்களை நேசிக்க கற்றுக்கொண்டேன். உங்களால்தான் உலகின் அடிமை விலங்கு நிரந்தரமானதல்ல என்றும், அது உடைத்தெறியப்படக்கூடியது என்றும் தெரிந்து கொண்டேன். ஆண்டான், அடிமை முறை 'தெய்வநியதி' அல்ல அது அடக்கு முறையாளனின் சதி என்பதை அறிந்து கொண்டேன். உங்களிடம் இருந்து நான் கற்றுக் கொண்ட பால பாடம் தான் என்னை ஒரு போரளியாக மாற்றியது.

அப்பா, உங்களோடு நான் வாழ்ந்த காலத்தையும், அதற்கு பிந்திய காலத்தையும் எண்ணிப் பார்க்கின்றேன். நாங்கள் தூக்கம் விட்டு எழுந்திருக்குமுன் நீங்கள் வீட்டிலிருந்து புறப்பட்டு இருப்பீர்கள். நாங்கள் தூங்கிய பின்தான் வீடு வந்து சேருவீர்கள். ''அடக்கி ஒடுக்கப்பட்ட மக்களது முழுமையான விடுதலையே மக்களின் விடுதலை ஆகும். அந்த நாளே நாட்டின் சுதந்திர நாள் ஆகும். அந்த நாள் வரும் வரையில் போராடிக்கொண்டே இருப்பேன். வயோதிபத்தினுலோ, சுகவீனங்களாலோ போராட்டத்தைவிட்டு ஒதுங்கமாட்டேன். 'தவண்டு தவண்டு' ஆவது போராட்டத்திற்கு என்னுலான கடமையை செய்து கொண்டிருப்பேன்'' என்று அடிக்கடி கூறுவீர்கள். ''அந்த மகத்தான போராட்டத்தில் எனக்குப் பக்கத்தில் சகபோராளிகளாக உங்களை (எங்களை) பார்த்தல் மகிழ்ச்சியடைவேன். இல்லையேல் வெட்கித் தலைகுனிவேன் வேதனைப்படுவேன்'' என்று சிறுவயதில் எங்களுக்கு சொல்லிச், சொல்லி வளர்த்தீர்கள்.

1984 நவம்பர் கடைசியில் ஒருநாள் என்னிடம் நீங்கள்பேசிபோது ''அரசியல் நடப்புகளை உன்னிப்பாக கவனிக்கும் போது இந்தியாவின் விஸ்தரிப்புக கரங்கள் இலங்கையின் மேல் விழக்கூடிய சாத்தியக் கூறுகள் தெளிவாக தெரிகிறது. அப்படியொரு அன்னிய ஆக்கிரமிப்பு எனது தேசத்தில் நடந்தால் அதற்கு எதிரான நியாயபூர்வமான போராட்டகளத்தில் 'ஒரு போராளியாக அணிவகுத்து நிற்பேன். ஆக்கிரமிப்பு எந்த வடிவத்தில் வந்தாலும் அதற்கு எதிராக போராடுவேன். என்மகன் என்ற அளவில் உன்னிடம் (என்னிடம்) ஒன்றைச் சொல்ல விரும்புகிறேன் 'அப்படியானதொரு துரோகத்தை, அதாவது தாயகத்தை காட்டிக் கொடுக்கும் அல்லது அடகு வைக்கும் நடவடிக்கையை தெரிந்தோ, தெரியாமலோ நீ செய்யக் கூடாது. அதற்கு துணை போகக்கூடாது? அதைத்தான் நான் உன்னிடமிருந்து எதிர்பார்க்கிறேன்.'' என்று கூறுனீர்கள்.

நான் இலங்கை அரசின் சித்திரவதை முகாம்களிலிருந்து விடுதலையாகி வந்த வேளையில், அந்நியனுக்கு எம்தேசம் அடிமைப் பட்டிருந்தது. அதைப் புரிந்து கொள்ள முடியாத பலர் 'ஆஹா; ஓஹோ' என்ற வண்ணம் இருக்கிருர்கள் நான் கூட தடுமாறிவிட்டேன். தடுமாறிதிகைத்து போய்நின்ற என்னை சரியான வழிகாட்டி நீதியான, நேர்மையான மார்க்கத்தில் திசை திருப்பிவிட்ட மகத்தான ஒளிவிளக்கு நீங்கள்தான் அப்பா.

இன்னொரு சம்பவம், ஆக்கிரமிப்பு நடை பெறுவதற்கு முன்பாக 1987. யூன் 4ம் தேதி அந்நியர்களின் ஆக்கிரமிப்பு விமானங்கள் 'அகதிகளுக்கான உதவி' என்ற பெயரில் தனது மேலாதிக்க வலிமையை வெளிப்படுத்திய போது, அதை கண்டனம் செய்து முதலாவது நபராக நீங்கள் இருந்தீர்கள். அப்போது அதை புரிந்து கொள்ள முடியாத அரசியல் குருடர்கள் பலர் 'சொல்லம்பு' கொண்டு உங்களை தாக்கிய போது இமயத்தைவிட உறுதியாக உங்கள் கொள்கையில் நின்றீர்கள். காலம் கடந்தது. நாலு மாதங்கள் முடிவடைந்து நாலு நாட்கள் தான். 'அகதிகளுக்கான உதவி' என்ற பெயருடன் நம் தேசத்தில் நுழைந்தவர்கள். அப்பாவிகளின் இரத்தத்தில் நீச்சல் அடித்து, மக்களைக் கொன்று குவித்தார்கள்.

இதற்குப் பிறகுதான் பலர் தமது தவறை உணர்ந்து உங்கள் கருத்தை ஏற்றுக்கொண்டார்கள். காலம் கடந்த பின்னே வரும் ஞானத்தால் யாருக்கும் எந்த பலனும் கிடைப்பதில்லை. உங்களது அரசியல் முடிவுகளை பலர் புரிந்து கொள்ளவில்லை. புரிந்துகொண்டாலும் தமது தவறுகளை ஒப்புக்கொள்ளவில்லை. இலங்கையின் அரச பயங்கரவாதிகள் உங்களது உயிருக்கும் உடலுக்கும் தீங்கு ஏற்படுத்த எடுத்த முயற்சிகள் உலகம் அறிந்ததே. அதேபோல் அந்நியர்களும் உங்களுக்கு தீங்கு ஏற்படுத்த மறைமுகமாக முயன்றதை மக்கள் அறிவார்கள். இதை புரிந்துகொள்ள முடியாத அரசியல் குருடர்களும் உளர்.

1950.ம் ஆண்டுகளின் முற்பகுதியில் நடைபெற்ற தேசம்தழுவிய இடதுசாரிகளின் மகத்தான வரலாற்று ஹர்த்தால் வெற்றிக்காக நீங்கள் உறுதியாகப் பணியாற்றியதையும், 1950ம் ஆண்டுகளின் பிற்பகுதியில் நடைபெற்ற தேசம் தழுவிய தேசிய உடமை நடவடிக்கைகளின்போது வீராவேசமிக்க உங்கள் பங்களிப்பையும் மற்றவர்கள் கூறக் கேட்டிருக்கிறேன்.

1966-ம் ஆண்டில், நாட்டின் யாழ்குடா நாட்டின் இறுக்கமாக சாதி ஒடுக்கு முறைக்கு எதிராக, அடக்கி ஒடுக்கப்பட்ட மக்களது சார்பாக கம்யூனிஸ்ட் கட்சியினுல் முன்னெடுக்கப்பட்ட வரலாற்று புகழ்மிக்க வெகுஜன போராட்டத்தின் வீரமிக்க தளபதியாக நீங்கள் திகழ்ந்ததை பலர் வாயார புகழ்ந்து கூறியதை காதாரக் கேட்டு மகிழ்ந்திருக்கிறேன்.

1969-ம் ஆண்டு மே 1ல் சர்வதேச தொழிலாளர்களது உரிமை தினமான மே தினத்தை அரச பயங்கரவாதிகள் தடுக்க எடுத்துக்கொண்ட முயற்சிகளை முறியடித்து, அரச காவல் நாய்களின் சித்திரவதைக்குள்ளாகி உங்கள் உடல் மிகமோசமாகப் பாதிக்கப்பட்டாலும், அன்றைய தினம் உங்களது முழு அளவிலான பங்களிப்பை வரலாறு மறக்கவில்லை.

1971-ல் மக்கள் விடுதலை முன்னணியினுல் முன்னெடுக்கப்பட்ட எழுச்சிகளின்போது உங்களுக்கு எதிராக இலங்கை அரசு எடுத்துக்கொண்ட கொலைவெறித்தனமானபல நடவடிக்கைகளிலும் நீங்கள் காப்பாற்றப்பட்டதையும் அக்கால கட்டத்தில் நாங்கள் சந்தித்த கொடுமை நிறைந்த வாழ்க்கையையும் நினைத்துப் பார்க்கிறேன்.

நாட்டின் முதலாளி வர்க்கம், தனது 'அதிகார வெற்றியையும் பலத்தையும் வலுப்படுத்திக்கொள்ளும் நோக்கத்தில் நாட்டின் வடக்கிலும் தெற்கிலும் இனவாத விதைகளை ஊன்றிய வேளையிலும் சரி, அந்த இனவாதிகளின் சிறு விதை பெரிய விருட்சமாகி இனங்களுக்கிடையிலான அவநம்பிக்கையாக மாறிய வேளையிலும் சரி, இவைகளின் விளைவு நாட்டின் நலனுக்கு உகந்ததல்ல என்று துணிவுடன் எடுத்து இயம்பியதை நினைவு கூருகிறேன்.

தமிழ் மக்களை பிரதிநிதித்துவம் செய்வதாக கூறிக்கொண்ட தரகு முதலாளித்துவத் தமிழ் தலைமைத் தமது பாராளுமன்ற அரசியலை அடிப்படையாகக் கொண்டு பிரிவினைக் கோசத்தை முன்னெடுத்தபோது. அதன் விளைவுகளை கட்சி உறுதியாக சுட்டிக்காட்டியதையும் அதற்கு பிரிவினைக்கு ஆதரவான அலை பெரிய அளவில் வீசியபோதும், அதன் தவறை தெளிவாக நீங்கள் விளக்கியதையும் நினைத்துப் பார்க்கிறேன்.

பாராளுமன்ற போலி ஜனநாயக அமைப்பிற்கு எதிராக 1977ல் கட்சி உறுதிமிக்க பகிஷ்கரிப்பு நடவடிக்கையை முன்னெடுத்தபோது, அதற்காக நீங்கள் மேற்கொண்ட நடவடிக்கைகளையும் அதன் விளைவாக நீங்கள் அரச பயங்கரவாதிகளின் தேடுதலுக்குள்ளானதையும், கொலை முயற்சி வாழ்க்கை எதிர்நோக்கியதையும் எண்ணிப் பார்க்கிறேன்.

ஒவ்வொரு கட்டத்திலும் உங்கள் உறுதி உரமடைந்ததே தவிர, உருக்குலையவில்லை? கொள்கைக்காக இமயத்தைவிட உறுதியாக உழைத்தீர்கள். அதனுல்தானே என்னவோ மரணம் உங்களை நெருங்க பயந்து பல தடவை தோல்வி கண்டதோ?

1980ம் ஆண்டுகளில் பொருளாதார நெருக்கடி பலவிதத்திலும் உங்களைப் பாதித்தபோதுகூட நீங்கள் கொள்கையை விலைபேசவில்லை. பலவிதங்களில் உங்களுக்கு உயிராபத்து ஏற்பட்ட போதும்கூட நீங்கள் கொள்கை பிரளவில்லை தடம்புரளவில்லை. உங்களுக்கு மகனுக பிறந்ததை நினைத்து, தினம், தினம் நான் அடைந்த மகிழ்ச்சிக்கு அளவேயில்லை. உங்கள் தனிப்பட்ட வாழ்க்கை. அரசியல் பணி இவை குறித்து வியப்படையாதவர்களே இல்லை. கொண்ட கொள்கைக்காகவே அம்மாவை வாழ்க்கைத் துணைவியாக்கிக் கொண்டீர்கள். நான் அறிந்த வரையில் இன்பத்திலும் துன்பத்திலும் மனமொத்த தம்பதிகளாக வாழ்வு நடத்திய ஒரு சிலரில் நீங்களே முதன்மையானவர்கள்.

உங்களைப் போன்று நெஞ்சுரம் மிக்க, கொள்கைப் பற்றுடைய உறுதிமிக்க போராளிகளை உங்கள் தோழர்களாக நீங்கள் பெற்றுக்கொண்டதன் மூலம் சிறந்த அரசியல் பணியாற்றினீர்கள். நீங்களும் உங்கள் தோழர்களும் ஒருவருக்கொருவர் கருத்து பரிமாற்றங்கள் மூலமும், விட்டுக்கொடுப்புகள் மூலமும், விமர்சனம், சுயவிமர்சனம் மூலமும் சரியான அரசியல் முடிவுகளை காலத்துக்கேற்ற வகையில் எடுத்துவந்தபோது அந்த புதிய அணுகுமுறை கண்டு வியந்தவர்களில் நானும் ஒருவன்.

அப்பா, என்ற முறையில் நீங்கள் உங்கள் பிள்ளைகளுக்குக் கற்றுக்கொடுத்த 'சமூக ஒழுக்கம்' தான், அவர்கள் தலை நிமிர்ந்து வாழ உதவியுள்ளது. அம்மாவின் முடிவுகளுக்கு நீங்கள் கொடுத்த முன்னுரிமை பலருக்கு முன்னுதாரணமாகியது. உங்கள் முடிவுகளை மற்றவர்கள்மீது திணிக்க முயலாத உங்கள் பண்பு, நாசூக்காக உங்கள் கருத்தை வெளிப்படுத்தும் பாங்கு, பலருக்கும் வியப்பளிப்பதாக இருந்தது.

மதசடங்குகளிலோ, மற்ற மூடநம்பிக்கைகளிலோ நம்பிக்கையில்லாத நீங்கள் மற்றவர்களது நம்பிக்கைக்கு மதிப்பளித்தமை உங்கள் மேலிருந்த மதிப்பை பல மடங்கு உயர்த்தியது.

நாங்கள் படித்துக்கொண்டிருந்த காலத்தில் 'அறிவுக்குப் படியுங்கள் ஆஸ்திக்கு படிக்க வேண்டாம்' என்று அடிக்கடி கூறுவீர்கள். 1970ம் ஆண்டுகளின் இறுதியில் உங்கள் நெருங்கிய நண்பரான A. C. D. சொய்சா *Air Lanka* விமான நிறுவன இயக்குனராக இருந்த வேளையில், அந்நிறுவனத்தால் கோரப்பட்ட வேலை வெற்றிடங்களுக்கு எனக்கு சகல தகைமைகளும் இருந்தது. நீங்கள் உங்கள் சொந்த செல்வாக்கைப் பயன்படுத்தி

யிருந்தால் எனக்கு அங்கு வேலை கிடைத்திருக்கும். ஆனுல் நீங்கள் அப்படி செய்யவில்லை. அதற்காக புரிந்துகொள்ள முடியாத வயதினில் நான் மனம் நொந்தேன். ஆனுல் அதைப்பார்த்து இன்று பெருமையடைகிறேன். இறுமாப்புக் கொள்கிறேன். 1989ல் உங்கள் நெருங்கிய நண்பர் ஒருவர் எனக்கு ஒரு கௌரவ மிக்க வேலைவாய்ப்பை வழங்க முன்வந்தார். அதை நான் உங்களுக்குத் தெரியப்படுத்தினேன். அதற்கு நீங்கள் எழுதிய பதிலில் 'அந்த வேலை சத்தியராஜனுக்கு கிடைத்திருந்தால் மகிழ்ச்சியடைந்திருப்பேன். ஆனுல் சுப்பிரமணியத்தின் மகனுக்குத்தான் இந்த வேலை கிடைத்திருப்பதாக நினைக்கிறேன். அதனுல்தான் இதை விரும்பவில்லை. எனக்கு இருக்கும் அந்தஸ்து எனது கட்சிக்கு உரியது. அதை எனது வீட்டுக்குப் பயன்படுத்த விரும்பவில்லை. என் பிள்ளைகளும் அதை பிழையாகப் பயன்படுத்த மாட்டார்கள் என்று நம்புகிறேன்' என எழுதியிருந்தீர்கள். அரசியல் ரீதியாக பொது வாழ்விலும், பொருளாதார ரீதியாக சுயவாழ்விலும் மிக, மிக நீங்கள் பாதிப்புற்றிருந்த, அத்துடன் நிரந்தர நோயாளியாக துயருற்றிருந்த அந்த நிலையில்கூட நீங்கள் எடுத்த உறுதிமிக்க அந்த முடிவை பார்த்து தான் மாத்திரமல்ல பலரும் வியந்து நின்முர்கள்.

பலரிடம், அவர்களுக்கே தெரியாமல் இருந்த பல திறமைகளை புரிந்து கொண்டு அவர்கள் சமுதாயத்தில் தன்னம்பிக்கையுள்ள பிரஜைகளாக உருவாகுவதற்காக நீங்கள் அவர்களை ஊக்குவித்து வளர்த்தெடுத்ததை பலரும் நன்றியுடன் நினைவு கூரக் கேட்டு இருக்கிறேன்.

தம்பிக்கு இலங்கையில் கல்வியை தொடர்வது மிக சிரமம். எனவே சோசலிச நாட்டிற்கு புலமை பரிசில் பெற்று செல்வதற்கு ஆவன செய்யுங்கள் என்று கேட்டபோது, கல்விக்கார கூட அரசியல் செல்வாக்கை பயன்படுத்தக் கூடாது என்ற உங்கள் உறுதியான முடிவில் எந்த மாற்றத்தையும் நீங்கள் செய்யவில்லை.

தங்கையின் திருமணத்தின் போது கூட உங்கள் இலட்சியப்படியே இலட்சியத் திருமணம் நடத்திவைத்தீர்கள். எங்களது நியாயமான எந்தவொரு முடிவையும் நீங்கள் அங்கீகரிக்கத் தவறியதில்லை. அத்துடன் அது உங்களுக்கும் நியாயமாக தோன்றிய பொழுது சமுதாயத்தின் போலி கட்டுப்பாடுகளை மீறி அதற்கு ஆதரவளிக்கவும் தவறியதில்லை.

அப்பா, நீங்கள் ஒரு தனிப்பிறவி. இதை பல விடயங்களிலும் நிருபித்து காட்டியிருக்கிறீர்கள் நீங்கள் உங்கள் அரசியல் வாழ்வில் தீர்க்கதரிசனமாக கூறிய பல விடயங்கள் நடந்து முடிந்ததை வரலாறு பல தடவை சந்தித்து இருக்கிறது.

எமது தாயகத்தில் மக்களின்டு விதலையை மனதில் கொண்டு ஆயுத போராட்டத்தை முன்னெடுத்த முதல் போராளிகளில் நீங்களும் ஒருவராக திகழ்ந்தீர்கள். அப்படியான உங்களிடமே ஆயுத முனையில் அரசியல் பேரம் பேச நினைத்த பலர், தமது சொந்த அரசியலில் புறமுதுகிட நேரிட்டதை வரலாறு காட்டியிருக்கிறது. அரசியலில் நீங்கள் ஒரு வணங்காமுடி வேந்தன்.

1970 ம் ஆண்டு மேதினத்திலன்று யாழ்நகரையே உலுக்கிய மேதின ஊர்வலம் வீரத்தின் விளைநிலமாம் சங்கானையில் ஆரம்பமாகி யாழ். நகரமண்டபத்தை வந்தடைகிறது. அங்கு நடைபெற்ற பொதுக் கூட்டத்தில் தலைமை உரையாற்றிய நீங்கள் 1969 மேதின அரச அடாவடித்தனத்தைகளை எடுத்துரைத்து ''என்னை சுட்டு 'சதை - சதை' யாக வீசியெறிந்தாலும் எனது உடலில் இருந்து சிந்தும ஒவ்வொரு துளி இரத்திலிருந்தும் ஆயிரக்கணக்கான மக்கள் விடுதலைப் போராளிகள் தோன்றுவார்கள். அவர்சள் மக்கள் விடுதலைப் போராட்டத்தை முன்னெடுப்பார்கள்.'' என்று வான் அதிரும் கரவொலிக்கு மத்தியில் கூறினீர்கள். அந்த சம்பவம் இன்னும் என் கண்முன்னுல் தெரிந்து கொண்டே இருக்கிறது.

அப்பா அடிக்கடி நீங்கள் எங்களுக்கு அறிவுரை கூறும் போது ''சுப்பிரமணியத்தின் பிள்ளைகள் என்ற முகவரியுடன் வாழ வேண்டும் என்று நினைக்காதீர்கள். அதற்கு பதிலாக இந்தப் பிள்ளையின் அப்பாதான் சுப்பிரமணியம் என்று கூறும் அளவிற்கு நீங்கள் வாழ்ந்தால் நான் என் குடும்ப வாழ்க்கையில் வெற்றியடைந்ததாக கருதுவேன்'' என்று கூறுவீர்கள். அதை வேதவாக்காக நினைத்தே இன்று வரை நடந்து வந்து இருக்கிறோம். நடந்து வருவோம்.

''ஒரு நாடு, ஒரு கட்சி, ஒரு தனி மனிதன் எதுவுமே தனது சொந்த காலில்தான் நிற்க வேண்டும்'' என்று அடிக்கடி கூறி தன்னம்பிக்கையையும், பொறுப்புணர்வையும் வளர்த்தீர்கள். கூட்டு முடிவு, ஆலோசனை, பலர் அபிப்பிராயங்கள் என்பவற்றுக்கு; உங்கள் அளவிற்கு மதிப்பளித்த ஒருவரை, நான் இது வரை சந்தித்தது இல்லை.

அப்பா... அப்பா... உங்கள் நினைவுகள் எம்மை வழிநடத்திக் கொண்டேயிருக்கும், உங்களுக்கோ உங்கள் கொள்கைக்கோ என்றுமே துரோகம் இழைக்க மாட்டோம். நீங்கள் நேசித்த தேசத்தை, மக்களை, அவர்களது விடுதலையை முன்னெடுக்கும் சக்திகளின் பக்கமே நாம் என்றும் இருப்போம். உங்களது மகத்தான தோழர்கள் முன்னெடுக்கும் அரசியல் நடவடிக்கைகளில் எங்களால் எந்த அளவிற்கு பங்காற்ற முடியுமோ அந்தளவிற்கு பங்காற்றுவோம். மகத்தான மானுட விடுதலைக்காக எமது பங்களிப்பை செய்வோம்.

மகத்தான மாக்ஸிஸ-லெனினிஸ - மா ஒசேதுங் சிந்தனைகளின் வழிநடப்போம்.

இலங்கை கம்யூனிஸ்ட் கட்சி (இடது) நீடூழி வாழ்க!

மலேசியா எஸ். எஸ். வி. சத்தியராஜன்

---

நமது தேசம் வலிமையானது
நமது தேசம் இளமையானது
அவனது
மகோன்னதமான பாடல்கள்
இன்னும் இசைக்கப்படவே இல்லை
ஏமாற்றுதலிலிருந்து
வெறுங் கோஷத்திலிருந்து
கொலைகாரர்களிடமிருந்து
கொலைத் தண்டனைகளிலிருந்து
மக்கட் பதடிகளிலிருந்து
நிச்சமின்மையிலிருந்து
சந்தேகத்திலிருந்து
நமது பாடல்
விடுபட்டு மீண்டும் வரும்......

நன்றி: மனிதசமூகசாரம்

சத்தியமனை - ராஜன் . நோர்வே.

காலஞ்சென்ற தோழர்-கே-ஏ-சுப்பிரமணியம் அவர்களது மறைவையொட்டி அன்னாரது மகன் காலஞ்சென்ற சு-சத்தியராசன் பிறப்பு : 30 / 10 / 1962 - இறப்பு : 25/ 08 / 2001 அவர்கள் மலேசியாவிலிருந்து 29-11-1989 ல் எழுதி, தந்தையின் நினைவு மலரில் வெளியான கடிதத்தை, இங்கு மறுபிரசுரம் செய்கிறோம்.

# தந்தையின் நினைவாக...........

’ சத்தியமனைக்கு’

1989-11-29 இரவு மலேசிய நேரப்படி எட்டுமணியளவில், இதயத்தைப் பிளந்து,குருதியைக் கொப்பளிக்க வைக்கும் துயர்மிகு செய்தியைக் குலேந்தி அண்ணாவின் தொலைபேசி அழைப்பு மூலம் அறிந்து கொண்டேன்.என்ன செய்வதென்றே இதுவரை புரியவுமில்லை; தெரியவுமில்லை.

(1) அறிவின் சிகரமே......அப்பா.............அன்பின் இலக்கணமே........!அப்பா.............அப்பா..............இந்த வார்த்தைக்கு முழு இலக்கணமாக மொத்த வடிவமாகத் திகழ்ந்த அந்த மாமனிதனை, நடமாடிய இமயத்தை,வரலாற்று நாயகனை நினைந்து நினைந்து, ஒவ்வொரு கணமும் நெக்குருகி, நிலைகுலைந்து கொண்டிருக்கிறேன். செந்தில் மாமாவின் தந்தி, செய்தி கிடைத்தது.

(2) அப்பா! நீங்கள் வாழ்ந்த வாழ்க்கை மகத்தானது.! மிக மிக மகத்தானது.வரலாற்றில் வாழ்ந்து முடிந்த பல,பல வரலாற்று நாயகர்களை, மகத்தான தலைவர்களை, மாபெரும் தியாகிகளை, விலைபோகாத கொள்கை வீரர்களை வீரத்தின் விளைநிலமாகத் திகழ்ந்த போராளிகளைப் பற்றிப் படித்தும்,பார்த்தும், கேட்டும் அறிந்திருக்கின்றேன்.

அவர்களின் பெறுமதி மிக்க மானிட வாழ்க்கை பற்றி வியந்திருக்கின்றேன். ஆனால், அத்தனை பேரினதும் பல பல குணாம்சங்களை நேரிடையாக உங்களிடம் நான் கண்ட போது தான், நான் என்னைப் பற்றிப் புரிந்துகொள்ள ஆரம்பித்தேன். உங்களைப் பற்றிய பிரமிப்பே என்னை ஒரு மனிதனாக மாற்றியது.

(3) அப்பா! இளமைத் துடிப்பினால் உங்களின் உயர்ந்த கொள்கைக்கு மாறுபட்ட அரசியல் நடவடிக்கைகளில் ஈடுபட்டபோதும், 'வேற்றுமையிலும் ஒற்றுமை காணவேண்டும்' என்ற துடிப்புடன் என்னால் செயற்பட முடிந்ததென்றால்...நீங்கள் கற்றுக் கொடுத்த அரசியல் அறிவினால் தானாகும். சிலவேளைகளில் 'கற்றுக் குட்டித்' தனமான தவறுகளை நான் இழைத்தாலும்,தவறுகளை உணர்ந்து என்னால் திருந்தக் கூடியதாகவிருந்தது என்றால், அது நீங்கள் காட்டிக் கொடுத்த வழியாகும்.

(4) அப்பா ! நீங்கள் ஒரு மாமேதை!! நடமாடிய பல்கலைக்கழகம். ஆம்! உங்கள் மூலமாகத்தான் நான் உலகைப்புரிந்து கொண்டேன்.உங்களினால் தான் மக்களை நேசிக்கக் கற்றுக் கொண்டேன்.உங்களால் தான் உலகின் அடிமை விலங்கு நிரந்தரமானதல்ல என்றும்,அது உடைத்தெறியப் படக்கூடியது என்றும் தெரிந்து கொண்டேன். ஆண்டான் அடிமைமுறை 'தெய்வ நியதி' அல்ல: அது அடக்கு முறையாளனின் சதி என்பதை அறிந்து கொண்டேன்.உங்களிடமிருந்து நான் கற்றுக் கொண்ட பால பாடம் தான் என்னை ஒரு போராளியாக மாற்றியது.

(5) அப்பா, உங்களோடு நான் வாழ்ந்த காலத்தையும்,அதற்குப் பிந்திய காலத்தையும் எண்ணிப் பார்க்கின்றேன். நாங்கள் தூக்கம் விட்டு எழுந்திருக்குமுன் நீங்கள் வீட்டிலிருந்து புறப்பட்டிருப்பீர்கள். நாங்கள் தூங்கிய பின்தான் வீடு வந்து சேருவீர்கள்."அடக்கி ஒடுக்கப் பட்ட மக்களது முழுமையான விடுதலையே மக்களின் விடுதலையாகும். அந்த நாளே நாட்டின் சுதந்திர நாளாகும்.அந்த நாள் வரும் வரையில் போராடிக்கொண்டே இருப்பேன்.வயோதிபத்தினாலோ, சுகவீனங்களாலோ போராட்டத்தை விட்டு ஒதுங்க மாட்டேன்.'தவண்டு தவண்டு' ஆவது போராட்டத்திற்கு என்னாலான கடமையைச் செய்து கொண்டிருப்பேன்" என்று அடிக்கடி கூறுவீர்கள். "அந்த மகத்தான போராட்டத்தில் எனக்குப் பக்கத்தில் சக போராளிகளாக உங்களை (எங்களை )ப் பார்த்தால் மகிழ்ச்சியடைவேன். இல்லையேல் வெட்கித் தலைகுனிவேன்; வேதனைப்படுவேன்" என்று சிறு வயதில் எங்களுக்குச் சொல்லிச்சொல்லி வளர்த்தீர்கள்.

(6) 1984 நவம்பர் கடைசியில் ஒருநாள் என்னிடம் நீங்கள் பேசியபோது "அரசியல் நடப்புகளை உன்னிப்பாகக் கவனிக்கும் போது இந்தியாவின் விஸ்தரிப்புக் கரங்கள் இலங்கையின் மேல் விழக்கூடிய சாத்தியக் கூறுகள் தெளிவாகத் தெரிகிறது. அப்படியொரு அந்நிய ஆக்கிரமிப்பு எனது தேசத்தில் நடந்தால்....அதற்கு எதிரான நியாய பூர்வமான போராட்டக் களத்தில் 'ஒரு போராளியாக அணிவகுத்து நிற்பேன். ஆக்கிரமிப்பு எந்த வடிவத்தில் வந்தாலும் அதற்கு எதிராகப் போராடுவேன். என்மகன் என்ற அளவில் உன்னிடம் (என்னிடம் ) ஒன்றைச் சொல்ல விரும்புகிறேன், அப்படியானதொரு துரோகத்தை, அதாவது தாயகத்தைக் காட்டிக் கொடுக்கும் அல்லது அடகு வைக்கும் நடவடிக்கையைத் தெரிந்தோ, தெரியாமலோ நீ செய்யக்கூடாது; அதற்குத் துணைபோகக் கூடாது. அதைத்தான் நான் உன்னிடம் எதிர்பார்க்கிறேன்" என்று கூறினீர்கள்.

(7) நான் இலங்கை அரசின் சித்திரவதை முகாம்களிலிருந்து விடுதலையாகி வந்த வேளையில், அந்நியனுக்கு எம் தேசம் அடிமைப்பட்டிருந்தது.அதைப் புரிந்து கொள்ள முடியாத பலர் "ஆஹா! ஓஹோ!" என்ற வண்ணம் இருக்கிறார்கள். நான் கூடத் தடுமாறி விட்டேன். தடுமாறித் திகைத்துப் போய் நின்ற என்னை சரியான வழிகாட்டி, நீதியான, நேர்மையான மார்க்கத்தில் திசைதிருப்பி விட்ட மகத்தான ஒளிவிளக்கு நீங்கள் தானப்பா!

(8) இன்னொரு சம்பவம், ஆக்கிரமிப்பு நடைபெறுவதற்கு முன்பாக 1987,யூன் 4ம் தேதி அந்நியர்களின் ஆக்கிரமிப்பு விமானங்கள்'அகதிகளுக்கான உதவி' என்ற பெயரில் தனது மேலாதிக்க வலிமையை வெளிப்படுத்தியபோது அதைக் கண்டனம் செய்த முதலாவது நபராக நீங்கள் இருந்தீர்கள். அப்போது அதைப் புரிந்து கொள்ள முடியாத அரசியல் குருடர்கள் பலர் 'சொல்லம்பு' கொண்டு உங்களைத் தாக்கியபோது இமயத்தைவிட உறுதியாக உங்கள் கொள்கையில் நின்றீர்கள்.காலம் கடந்தது. நாலு மாதங்கள் முடிவடைந்து நாலு நாட்கள் தான் 'அகதிகளுக்கான உதவி' என்ற பெயருடன் நம் தேசத்துள் நுழைந்தவர்கள், அப்பாவிகளின் இரத்தத்தில் நீச்சல் அடித்து, மக்களைக் கொன்று குவித்தார்கள்.

(9)இதற்குப் பிறகுதான் பலர் தமது தவறை உணர்ந்து உங்கள் கருத்தை ஏற்றுக் கொண்டார்கள். காலம் கடந்த பின்னே வரும் ஞானத்தால் யாருக்கும் எந்தப் பலனும் கிடைப்பதில்லை.உங்களது அரசியல் முடிவுகளைப் பலர் புரிந்து கொள்ளவில்லை. புரிந்து கொண்டாலும் தமது தவறுகளை ஒப்புக் கொள்ளவில்லை. இலங்கையின் அரச பயங்கரவாதிகள் உங்களது உயிருக்கும், உடலுக்கும் தீங்கு ஏற்படுத்த எடுத்த முயற்சிகள் உலகம் அறிந்ததே! அதேபோல் அந்நியர்களும் உங்களுக்குத் தீங்கு ஏற்படுத்த மறைமுகமாக முயன்றதை மக்கள் அறிவார்கள். இதைப் புரிந்து கொள்ள முடியாத அரசியல் குருடர்களும் உளர்.

(10) 1950ம் ஆண்டுகளின் முற்பகுதியில் நடைபெற்ற தேசம் தழுவிய இடதுசாரிகளின் மகத்தான வரலாற்று 'ஹர்த்தால்' வெற்றிக்காக நீங்கள் உறுதியாகப் பணியாற்றியதையும்,1950ம் ஆண்டுகளின் பிற்பகுதியில் நடை பெற்ற தேசம் தழுவிய தேசிய உடமை நடவடிக்கைகளின் போது வீராவேசம் மிக்க உங்கள் பங்களிப்பையும் மற்றவர்கள் கூறக் கேட்டிருக்கிறேன்.

(11) 1966ம் ஆண்டில்,நாட்டின் - யாழ்-குடா நாட்டில் இறுக்கமாக சாதி ஒடுக்குமுறைக்கு எதிராக, அடக்கி ஒடுக்கப்பட்ட மக்களது சார்பாக கம்யூனிஸ்ட் கட்சியினால் முன்னெடுக்கப்பட்ட வரலாற்றுப் புகழ்மிக்க வெகுஜனப் போராட்டத்தின் வீரம் மிக்க தளபதியாக நீங்கள் திகழ்ந்ததை பலர் வாயாரப்புகழ்ந்து கூறியதைக்காதாரக்கேட்டு மகிழ்ந்திருக்கிறேன்.

(12) 1969ம் ஆண்டு மே- 1ல் சர்வதேசத் தொழிலாளர்களது உரிமைத் தினமான 'மே தின' த்தை அரச பயங்கரவாதிகள் தடுக்க எடுத்துக் கொண்ட முயற்சிகளை முறியடித்து, அரச காவல் நாய்களின் சித்திவதைக்குள்ளாகி உங்கள் உடல் படுமோசமாகப் பாதிக்கப் பட்டாலும், அன்றைய தினம் உங்களது முழுஅளவிலான பங்களிப்பை வரலாறு மறக்கவில்லை.

(13) 1971ல் மக்கள் விடுதலை முன்னணியினால் முன்னெடுக்கப்பட்ட எழுச்சிகளின்போது உங்களுக்கு எதிராக இலங்கை அரசு எடுத்துக் கொண்ட கொலைவெறித் தனமான பல நடவடிக்கைகளிலும் நீங்கள் காப்பாற்றப்பட்டதையும்,அக்கால கட்டத்தில் நாங்கள் சந்தித்த கொடுமை நிறைந்த வாழ்க்கையையும் நினைத்துப் பார்க்கிறேன்.

(14) நாட்டின் முதலாளி வர்க்கம்,தனது அதிகார வெற்றியையும், பலத்தையும் வலுப்படுத்திக் கொள்ளும் நோக்கத்தில் நாட்டின் வடக்கிலும்,தெற்கிலும் இனவாத விதைகளை ஊன்றிய வேளையிலும் சரி,அந்த இனவாதிகளின், சிறுவிதை பெரிய விருட்சமாகி இனங்களுக்கிடையிலான அவநம்பிக்கையாக மாறிய வேளையிலும் சரி, இவைகளின் விளைவு நாட்டின் நலனுக்கு உகந்ததல்ல; என்று துணிவுடன் எடுத்து இயம்பியதை நினைவு கூருகிறேன்.

(15) தமிழ் மக்களை பிரதிநிதித்துவம் செய்வதாகக் கூறிக்கொண்ட தரகு முதலாளித்துவத் தலைமை தமது பாராளுமன்ற அரசியலை அடிப்படையாகக் கொண்டு பிரிவினைக்கோஷத்தை முன்னெடுத்தபோது, அதன் விளைவுகளைக் கட்சி உறுதியாகச் சுட்டிக் காட்டியதையும்,அதற்குப் பிரிவினைக்கு ஆதரவான அலை பெரிய அளவில் வீசியபோதும், அதன் தவறைத் தெளிவாக நீங்கள் விளக்கியதையும் நினைத்துப் பார்க்கிறேன்.

(16) பாராளுமன்றப் போலி ஜனநாயக அமைப்பிற்கு எதிராக 1977ல் கட்சி உறுதி மிக்க பகிஷ்கரிப்பு நடவடிக்கையை முன்னெடுத்தபோது அதற்காக நீங்கள் மேற்கொண்ட நடவடிக்கைகளையும்,அதன் விளைவாக நீங்கள் அரசபயங்கர வாதிகளின் தேடுதலுக்குள்ளானதையும் கொலைமுயற்சி வாழ்க்கையில் எதிர்நோக்கியதையும் எண்ணிப் பார்க்கிறேன்.

(17) ஒவ்வொரு கட்டத்திலும் உங்கள் உறுதி உரமடைந்ததே தவிர, உருக்குலையவில்லை.கொள்கைக்காக இமயத்தைவிட உறுதியாக உழைத்தீர்கள்.அதனால்தானோ என்னவோ ...மரணம் உங்களை நெருங்கப் பயந்து பல தடவை தோல்வி கண்டதோ?

(18)1980ம் ஆண்டுகளில் பொருளாதார நெருக்கடி பலவிதத்திலும் உங்களைப் பாதித்தபோது கூட நீங்கள் கொள்கையை விலைபேசவில்லை.பலவிதங்களில் உங்களுக்கு உயிராபத்து ஏற்பட்ட போதும் கூட நீங்கள் கொள்கை பிரளவில்லை: தடம் புரளவில்லை. உங்களுக்கு மகனாகப் பிறந்ததை நினைத்து,தினம்,தினம் நான் அடைந்த மகிழ்ச்சிக்கு அளவேயில்லை.உங்கள் தனிப்பட்ட வாழ்க்கை, அரசியல் பணி இவைகுறித்து வியப்படையாதவர்களே இல்லை.

கொண்ட கொள்கைக்காகவே அம்மாவை வாழ்க்கைத் துணையாக்கிக் கொண்டீர்கள். நான் அறிந்த வரையில் இன்பத்திலும், துன்பத்திலும் மனமொத்த தம்பதிகளாக வாழ்வு நடத்திய ஒருசிலரில் நீங்களே முதன்மையானவர்கள்.

(19) உங்களைப் போன்ற நெஞ்சுரம் மிக்க, கொள்கைப் பற்றுடைய - உறுதிமிக்க போராளிகளை உங்கள் தோழர்களாக நீங்கள் பெற்றுக்கொண்டதன் மூலம் சிறந்த அரசியற் பணியாற்றினீர்கள். நீங்களும், உங்கள் தோழர்களும் ஒருவருக்கொருவர் கருத்துப் பரிமாற்றங்கள் மூலமும், விட்டுக்கொடுப்புகள் மூலமும்,விமர்சனம், சுயவிமர்சனம் மூலமும் சரியான அரசியல் முடிவுகளை காலத்துக்கேற்ற வகையில் எடுத்து வந்தபோது, அந்தப்புதிய அணுகுமுறை கண்டு வியந்தவர்களில் நானும் ஒருவன்.

(20)அப்பா- என்ற முறையில் நீங்கள் உங்கள் பிள்ளைகளுக்குக் கற்றுக் கொடுத்த ‘சமூக ஒழுக்கம்’ தான். அவர்கள் தலை நிமிர்ந்து வாழ உதவியுள்ளது.அம்மாவின் முடிவுகளுக்கு நீங்கள் கொடுத்த முன்னுரிமை பலருக்கு முன்னுதாரணமாகியது.உங்கள் முடிவுகளை மற்றவர்கள்மீது திணிக்க முயலாத உங்கள் பண்பு, நாசூக்காக உங்கள் கருத்தை வெளிப்படுத்தும் பாங்கு, பலருக்கும் வியப்பளிப்பதாக இருந்தது. மதச் சடங்குகளிலோ, மற்ற மூடநம்பிக்கைகளிலோ நம்பிக்கையில்லாத நீங்கள், மற்றவர்களது நம்பிக்கைக்கு மதிப்பளித்தமை - உங்கள் மேலிருந்த மதிப்பைப் பல மடங்கு உயர்த்தியது.

(21) நாங்கள் படித்துக் கொண்டிருந்த காலத்தில் ‘அறிவுக்குப் படியுங்கள். ஆஸ்திக்குப் படிக்க வேண்டாம்’ என்று அடிக்கடி கூறுவீர்கள்.1979ம் ஆண்டுகளின் இறுதியில் உங்கள் நெருங்கிய நண்பரான ஏ-சி-டி-சொய்சா ’எயர்லங்கா’ விமான நிறுவன இயக்குனராக இருந்த வேளையில், அந்நிறுவனத்தால் கோரப்பட்ட வேலை வெற்றிடங்களுக்கு எனக்குச் சகல தகைமைகளும் இருந்தது. நீங்கள் உங்கள் சொந்தச் செல்வாக்கைப் பயன்படுத்தியிருந்தால் எனக்கு அங்கு வேலை கிடைத்திருக்கும். ஆனால், நீங்கள் அப்படிச் செய்யவில்லை. அதற்காகப் புரிந்து கொள்ளமுடியாத வயதினில் நான் மனம் நொந்தேன். ஆனால் அதைப் பார்த்து இன்று பெருமையடைகிறேன்; இறுமாப்புக் கொள்கிறேன்.

(22) 1989ல் உங்கள் நெருங்கிய நண்பர் ஒருவர் எனக்கொரு கௌரவமிக்க வேலைவாய்ப்பை வழங்க முன்வந்தார். அதை நான் உங்களுக்குத் தெரியப்படுத்தினேன். அதற்கு நீங்கள் எழுதிய பதிலில் ‘அந்த வேலை சத்தியராஜனுக்குக் கிடைத்திருந்தால் மகிழ்ச்சியடைந்திருப்பேன்; ஆனால், சுப்பிரமணியத்தின் மகனுக்குத்தான் இந்த வேலை கிடைத்திருப்பதாக நினைக்கிறேன். அதனால் தான் இதை விரும்பவில்லை. எனக்கு இருக்கும் அந்தஸ்து எனது கட்சிக்கு உரியது. அதை எனது வீட்டுக்குப் பயன்படுத்த விரும்பவில்லை; என் பிள்ளைகளும் அதைப் பிழையாகப் பயன்படுத்த மாட்டார்கள் என்று நம்புகிறேன்’ என எழுதியிருந்தீர்கள்.

அரசியல் ரீதியாக பொது வாழ்விலும், பொருளாதார ரீதியாகச் சுயவாழ்விலும் மிக,மிக நீங்கள் பாதிப்புற்றிருந்த- அத்துடன் நிரந்தர நோயாளியாக துயருற்றிருந்த அந்த நிலையில் கூட, நீங்கள் எடுத்த உறுதிமிக்க அந்த முடிவைப் பார்த்து நான் மாத்திரமல்ல; பலரும் வியந்து நின்றார்கள்.

(23)பலரிடம், அவர்களுக்கே தெரியாமல் இருந்த பல திறமைகளைப் புரிந்து கொண்டு - அவர்கள் சமுதாயத்தில் ,தன்னம்பிக்கையுள்ள பிரஜைகளாக.... உருவாகுவதற்காக நீங்கள் அவர்களை ஊக்குவித்து வளர்த்தெடுத்ததை பலரும் நன்றியுடன் கூறக் கேட்டிருக்கிறேன்.

(24) ”தம்பிக்கு இலங்கையில் கல்வியைத் தொடர்வது மிகச்சிரமம். எனவே, சோசலிச நாட்டிற்குப் புலமைப்பரிசில் பெற்றுச் செல்வதற்கு ஆவன செய்யுங்கள்” என்று கேட்டபோது, ’கல்விக்காகக் கூட அரசியல் செல்வாக்கைப் பயன்படுத்தக் கூடாது.’ என்ற உங்கள் உறுதியான முடிவில் எந்த மாற்றத்தையும் நீங்கள் செய்யவில்லை.

(25)தங்கையின் திருமணத்தின் போது கூட உங்கள் இலட்சியப்படியே இலட்சியத்திருமணம் நடத்திவைத்தீர்கள்.எங்களது நியாயமான எந்தவொரு முடிவையும் நீங்கள் அங்கீகரிக்கத் தவறியதில்லை. அத்துடன் அது உங்களுக்கும் நியாயமாகத் தோன்றிய பொழுது, சமுதாயத்தின் போலிக் கட்டுப்பாடுகளை மீறி அதற்கு ஆதரவளிக்கவும் தவறியதில்லை.

(26) அப்பா, நீங்கள் ஒரு தனிப்பிறவி. இதைப் பல விடயங்களிலும் நிரூபித்துக் காட்டியிருக்கிறீர்கள். நீங்கள், உங்கள் அரசியல் வாழ்வில் தீர்க்கதரிசனமாகக் கூறிய பல விடயங்கள் நடந்து முடிந்ததை வரலாறு பலதடவை சந்தித்து இருக்கிறது.

(27) எமது தாயகத்தில் மக்களின் விடுதலையை மனதில் கொண்டு...ஆயுதப் போராட்டத்தை முன்னெடுத்த முதல் போராளிகளில் நீங்களும் ஒருவராகத் திகழ்ந்தீர்கள். அப்படியான உங்களிடமே ஆயுதமுனையில் அரசியல் பேரம் பேச நினைத்த பலர், தமது சொந்த அரசியலில் புறமுதுகிட நேரிட்டதை வரலாறு காட்டியிருக்கிறது. அரசியலில் நீங்கள் ஒரு வணங்காமுடி வேந்தன்!

(28) 1970ம் ஆண்டு 'மே'தினத்திலன்று யாழ்நகரையே உலுக்கிய மேதின ஊர்வலம் வீரத்தின் விளைநிலமாம் சங்கானையில் ஆரம்பமாகி யாழ்-நகரமண்டபத்தை வந்தடைகிறது.அங்கு நடைபெற்ற பொதுக்கூட்டத்தில் தலைமை உரையாற்றிய நீங்கள் 1969 மேதின அரச அடாவடித்தனங்களை எடுத்துரைத்து "என்னைச் சுட்டுச் சதை--சதையாக வீசியெறிந்தாலும் எனது உடலில் இருந்து சிந்தும் ஒவ்வொருதுளி இரத்தத்திலிருந்தும் ஆயிரக்கணக்கான மக்கள் விடுதலைப் போராளிகள் தோன்றுவார்கள்! அவர்கள் மக்கள் விடுதலைப் போராட்டத்தை முன்னெடுப்பார்கள்" என்று வான் அதிரும் கரவொலிக்கு மத்தியில் கூறினீர்கள். அந்தச் சம்பவம் இன்னும் என் கண் முன்னால் தெரிந்து கொண்டே இருக்கிறது.

(29)அப்பா! அடிக்கடி நீங்கள் எங்களுக்கு அறிவுரை கூறும்போது "சுப்பிரமணியத்தின் பிள்ளைகள் என்ற முகவரியுடன் வாழ வேண்டுமென்று நினைக்காதீர்கள்.அதற்குப் பதிலாக.....இந்தப் பிள்ளையின் அப்பாதான் சுப்பிரமணியம்' என்று கூறும் அளவிற்கு நீங்கள் வாழ்ந்தால் ....நான் என் குடும்ப வாழ்வில் வெற்றியடைந்ததாகக் கருதுவேன்" என்று கூறுவீர்கள். அதை வேதவாக்காக நினைத்தே இன்றுவரை நடந்து வந்திருக்கிறோம்.நடந்து வருவோம்.

(30)"ஒருநாடு, ஒரு கட்சி, ஒரு தனி மனிதன்......எதுவுமே தனது சொந்தக்காலில் நிற்கவேண்டும்." என்று அடிக்கடி கூறி தன்னம்பிக்கையையும், பொறுப்புணர்வையும் வளர்த்தீர்கள். கூட்டுமுடிவு,ஆலோசனை, பலர் அபிப்பிராயங்கள் என்பவற்றுக்கு .... உங்கள் அளவிற்கு மதிப்பளித்த ஒருவரை, நான் இதுவரை சந்தித்தது இல்லை.

(31)அப்பா.......அப்பா.......உங்கள் நினைவுகள் எம்மை வழிநடத்திக் கொண்டேயிருக்கும். உங்களுக்கோ உங்கள் கொள்கைக்கோ என்றுமே துரோகம் இழைக்கமாட்டோம்.நீங்கள் நேசித்த தேசத்தை, மக்களை, அவர்களது விடுதலையை முன்னெடுக்கும் சக்திகளின் பக்கமே நாம் என்றும் இருப்போம்.உங்களது மகத்தான தோழர்கள் முன்னெடுக்கும் அரசியல் நடவடிக்கைகளில் எங்களால் எந்த அளவிற்குப் பங்காற்ற முடியுமோ,அந்தளவிற்குப் பங்காற்றுவோம். மகத்தான மானிட விடுதலைக்காக எமது பங்களிப்பைச் செய்வோம்.

மகத்தான மாக்ஸிஸ- லெனினிஸ- மாசேதுங் சிந்தனைகளின் வழி நடப்போம்.

இலங்கை கம்யூனிஸ்ட் கட்சி (இடது) நீடூழி வாழ்க!

மலேசியா எஸ்-எஸ்- வி- சத்தியராஜன். 29-11-1989

# விடைபெறுகிறேன்.

**Farewell. Thank you all.**

